www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஆகஸ்டு 2011
ரூ. 7.00






படிப்பகம்

www.padippakam.com





# "சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்து! பாடநூல்களை உடனே வழங்கு!"

## – கல்வி தனியார்மயத்துக்கு எதிராகத் தமிழகமெங்கும் பரவும் போராட்டம்

சமச்சீர் கல்வித் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியும், தனியார் கல்வி நிறுவனங்களின் கட்டணக் கொள்ளைக்கு எதிராகவும் கடந்த மே மாத இறுதியிலிருந்து தாங்கள் செயல்படும் பகுதிகளில் ம.க.இ.க; வி.வி.மு; பு.ம.ா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்துடன் இணைந்து தொடர் பிரச்சாரத்தையும் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி வருகின்றன. கடந்த ஜூன் மாதத்தில் தமிழகமெங்கும் பல பகுதிகளில் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்களை நடத்திவந்த இவ்வமைப்புகள், அதன் தொடர்ச்சியாக கடந்த ஜூலை மாதத்தில் துண்டுப்பிரசுரங்களுடன் வீடுகளிலும் பள்ளிகளிலும் பிரச்சாரம், தெருமுனைக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், பெற்றோர்கள் - மாணவர்களைத் திரட்டி உண்ணாநிலை போராட்டங்கள், சாலைமறியல்கள்,பாசிச ஜெயாவின் கொடும்பாவி எரிப்புப் போராட்டம், தனியார் மெட்ரிக் பள்ளிகளின் கட்டணக் கொள்ளைக்கு எதிராகப் பெற்றோரைத் திரட்டிப் போராட்டம் - என போர்க்குணத்தோடு தொடர்ந்து போராடி வருகின்றன. கடந்த ஜூலை 4-ஆம் தேதியன்று காரைக்குடியிலும், 11-ஆம் தேதியன்று போடியிலும், 12-ஆம் தேதியன்று கரூரிலும், 13-ஆம் தேதியன்று மானாமதுரையிலும், 21-ஆம் தேதியன்று சிவகங்கையிலும் ஆர்ப்பாட்டங்களை இவ்வமைப்புகள் நடத்தின.

அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தை மீறி சென்னை-ஆழ்வார் திருநகரில் உள்ள செயின்ட் ஜான்ஸ் மற்றும் கடலூரிலுள்ள கிருஷ்ணசாமி, சி.கே. முதலான மெட்ரிக் பள்ளிகள் கொள்ளையடிப்பதை எதிர்த்து பெற்றோரைத் திரட்டி இவ்வமைப்புகள் போராட்டத்தை நடத்தின. கட்டணக் கொள்ளைக்காக மாணவர்களையும் பெற்றோரையும் வதைக்கும் மெட்ரிக் பள்ளி முதலாளிகளைக் குண்டர் சட்டத்தில் கைது செய்து அப்பள்ளிகளை அரசே ஏற்று நடத்தக் கோரி, பெற்றோரைத் திரட்டி தமிழகத்தின் பல பகுதிகளில் போராட்டங்கள் தொடர்கின்றன. கல்வி வியாபாரிகளைக் கல்வியாளர்களாகச் சித்தரித்து, பாசிச ஜெயா அரசால் நியமிக்கப்பட்ட சமச்சீர் பாடத்திட்டம் குறித்து ஆராய்ந்த குழுவின் அறிக்கையை எதிர்த்து, அதனைத் தீவைக்கும் போராட்டத்தை விருத்தாசலத்திலும் சிதம்பரத்திலும் ம.உ.பா.மையமும் மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும் இணைந்து நடத்தின.

இந்நிலையில், கடந்த ஜூலை 18-ஆம் தேதியன்று சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தஞ்சை பு.மா.இ.மு. தோழர்கள் மக்களின் போராட்டத்துக்குக் கிடைத்த இம்முதற்கட்ட வெற்றியை உழைக்கும் மக்களுக்கு இனிப்புகள் வழங்கி அறிவித்ததோடு, சமச்சீர் கல்வித் திட்டத்தைக் குழிதோண்டிப் புதைக்க எத்தணிக்கும் பாசிச ஜெயா கும்பலுக்கு எதிரான பிரச்சாரத்தை மேற்கொண்டனர். சேலத்தில் பெ.வி.மு; ம.உ.பா.மையத்தைச் சேர்ந்த தோழர்கள் பெரியார் சிலைக்கு மாலையணிவித்து, பட்டாசு வெடித்து பறையடித்து

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்







படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்
மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 26 இதழ்: 10
ஆகஸ்டு 2011

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: ரூ.750.00

தொடர்பு முகவரி:
புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

தொலைபேசி: 94446 32561

## பா.ஜ.க.-வின் ஊழல் எதிர்ப்பு:

# ஈயத்தைப் பார்த்து இளித்ததாம் பித்தளை!

தென்னிந்தியாவில் முதன்முறையாக கர்நாடகத்தில் அமைந்த பா.ஜ.க. ஆட்சி, பல்லாயிரம் கோடி சுரங்க ஊழல் - கொள்ளையில் சிக்கி நாடெங்கும் சந்தி சிரிக்கிறது. கட்டுப்பாடுமிக்க கட்சியாகவும் யோக்கிய சிகாமணிகளாகவும் ஊழல் எதிர்ப்பு சவடால் அடித்துவரும் பா.ஜ.க.வின் காவி கோவணமும் கிழிந்து அம்மணமாகி நிற்கிறது. ஊழல் கொள்ளையில் சிக்கிய முதல்வர் எடியூரப்பாவைப் பதவியிலிருந்து விலகச் சொல்லி பா.ஜ.க. தலைமை நிர்ப்பந்திக்க, அவர் ஏற்க மறுத்து கலகம் செய்த பிறகு, ஜெயலலிதாவுக்கு வாய்த்த பன்னீர்செல்வத்தைப் போல, எடியூரப்பாவின் விசுவாசியாக உள்ள ஒருவரை முதலமைச்சராக்க ஒப்புக் கொண்ட பிறகு, எடியூரப்பாவின் பதவி விலகல் நாடகம் நடந்துள்ளது.

கர்நாடகத்தில் சட்டவிரோதச் சுரங்கத் தொழில் குறித்து புகார்கள் வரத் தொடங்கியதும், முன்னாள் முதல்வர்கள் எஸ்.எம். கிருஷ்ணா, தரம்சிங், குமாரசாமி ஆகியோரின் ஆட்சிக் காலங்களிலும், அதன் பிறகு எடியூரப்பாவின் ஆட்சியிலும் நடந்துள்ள சட்டவிரோதச் சுரங்கத் தொழில் குறித்து விசாரணை நடத்திவந்த லோக் அயுக்தா (முதல்வர் உள்ளிட்ட உயர் பதவிகளில் உள்ளோர் மற்றும் உயர் அதிகாரிகள் மீதான ஊழலை விசாரிக்கும் மக்கள் நீதிமன்றம்) 25,228 பக்கங்கள் கொண்ட தனது இறுதி அறிக்கையை - நாட்டிலேயே மிகப் பெரிய விசாரணை அறிக்கையை கடந்த ஜூலை 27-ஆம் தேதியன்று மாநில அரசிடம் சமர்ப்பித்தது. இதில் எடியூரப்பா, அவரது குடும்ப உறுப்பினர்கள், அமைச்சர்களான ரெட்டி சகோதரர்கள், முன்னாள் முதல்வர் குமாரசாமி, காங்கிரசு பிரமுகர்கள் முதலானோர் ஊழல் - அதிகாரமுறைகேடுகளில் ஈடுபட்டு ஆதாயமடைந்துள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. சட்டவிரோதச் சுரங்கத் தொழிலில் ஈடுபட்டதாக 100-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் அதிகார முறைகேடுகளால் ஆதாயமடைந்ததாக 600-க்கும் மேற்பட்ட அதிகாரிகளின் பெயர்கள் அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. 2006 முதல் 2010 வரையிலான காலத்தில் சட்டவிரோதச் சுரங்கத் தொழிலால் அரசுக்கு ரூ.16,085 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதாக இந்த விசாரணை அறிக்கை குற்றம் சாட்டியுள்ளது.

கர்நாடகத்தில் இரும்புத்தாது வெட்டியெடுக்கும் சுரங்கங்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டதில் மிகப்பெரும் ஊழல் நடந்துள்ளதையும், சட்டவிரோதச் சுரங்கங்கள் இயங்குவதையும் பற்றி லோக் அயுக்தாவின் ஆணையரான நீதிபதி ஹெக்டே விசாரணை நடத்திச் சொல்ல வேண்டிய தேவையேயில்லை. சுரங்கத் தொழில் மாஃபியாக்களான ரெட்டி சகோதரர்கள் மிகப் பெரிய தொழிலதிபர்களாக வளர்ந்த கதை கர்நாடகத்தில் ஊரறிந்த ரகசியம்.

ரெட்டி சகோதரர்களின் பணபலத்தால்தான் பா.ஜ.க. கர்நாடகத்தில் ஆட்சிக்கு வந்தது. அக்கட்சி ஆட்சியில் நீடிப்பதும் கவிழ்வதும் ரெட்டி சகோதரர்களின் கையில்தான் உள்ளது. நாடாளுமன்றத் தேர்தலில் சோனியாவுக்கு எதிராக நின்ற சுஷ்மா சுவராஜுக்கான தேர்தல் செலவுகளைக் கவனித்துக் கொண்ட ரெட்டி சகோதரர்கள், ஆந்திராவில் மறைந்த முதல்வர் ராஜசேகர ரெட்டியின் மகன் ஜெகன்மோகன் ரெட்டியை ஆந்திர முதல்வராக்க கோடிகளை வாரியிறைக்கின்றனர். கடந்த ஆண்டில் ரெட்டி சகோதரர்கள் எடியூரப்பாவைக் கண்ணில் விரலை விட்டு ஆட்டியதையும், சுஷ்மா, அத்வானி போன்ற பா.ஜ.க. தலைவர்கள் எடியூரப்பாவை அடக்கி வைத்ததையும், தனது நிலைக்காகத் தொலைக்காட்சி பேட்டியிலேயே எடியூரப்பா அழுததையும் நாடறியும்.



படிப்பகம்




ரெட்டி சகோதரர்களின் ஊழல்-அதிகார முறைகேடுகள் பற்றி அத்வானியும் சுஷ்மா சுவராஜும் அறியாததல்ல. கடந்த ஐந்தாறு ஆண்டுகளில் மட்டும் பெல்லாரியிலிருந்து ரூ. 60,000 கோடி மதிப்புடைய 71 லட்சம் டன்கள் இரும்புத் தாதுவும் கனிமங்களும் ரெட்டி சகோதரர்களால் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. ஒரு டன்னுக்கு ரூ.27 மட்டும் அரசுக்குச் செலுத்திவிட்டு, அதை ரூ. 7,000- க்கு விற்று நாள் ஒன்றுக்கு ரூ. 20 கோடி வீதம் இவர்கள் குவித்தார்கள். இதை கர்நாடக முதல்வர் எடியூரப்பாவே மாநில சட்டப் பேரவையில் வெளிப்படையாக ஒப்புக் கொண்டிருக்கிறார்.

இத்தனைக்கும் பிறகும் ரெட்டி சகோதரர்களின் பகற்கொள்ளையைத் தடுக்க பா.ஜ.க. முன்வரவில்லை. கடந்த ஒன்றரை ஆண்டுகளாக இந்த விவகாரம் சந்தி சிரித்த போதிலும், லோக் அயுக்தா விசாரிக்க உரிமை உள்ளதா, சி.பி.ஐ. விசாரிப்பதா, ஆளுநருக்கு அதிகாரம் உள்ளதா என்றெல்லாம் வாதப் பிரதிவாதங்களை நடத்திக் கொண்டும், அதிகார முறைகேட்டின் மூலம் அபகரித்துக் கொண்ட நிலங்களை எடியூரப்பாவின் மகனும், மருமகனும் அரசுக்கே திருப்பியளிக்க முன்வரும் அளவுக்கு ஊழல் அம்பலப்பட்டுள்ள போதிலும் பா.ஜ.க. தலைமை எடியூரப்பா மீது நடவடிக்கை எடுக்க முன்வரவில்லை. எடியூரப்பா மீது ஊழல் தடுப்புச் சட்டப்படி வழக்கு தொடர ஆளுநர் பரத்வாஜ் அனுமதி அளித்ததை எதிர்த்து பா.ஜ.க. கடையடைப்பு போராட்டத்தை நடத்தி ஊழலுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தது.

2-ஜி அலைக்கற்றை ஊழல் விவகாரத்தில் விட்டேனா பார் என்று வேகம் காட்டும் பா.ஜ.க.வும் பார்ப்பன ஊடகங்களும், குருமூர்த்தி, சு.சாமி, சோ ராமஸ்வாமி வகையறாக்களும் கர்நாடக பா.ஜ.க. ஆட்சியின் ஊழல் குறித்து அடக்கியே வாசிக்கின்றனர். 2-ஜி அலைக்கற்றை ஊழல் கொள்ளை வெளியானதும், தி.மு.க.வுக்கு எதிராகவும் முன்னாள் அமைச்சர் ராசாவைக் கைது செய்யக் கோரியும் ஆவேசம் காட்டிய பா.ஜ.க., அதன் பின்னர் பிரதமர் மன்மோகன், உள்துறை அமைச்சர் சிதம்பரம் ஆகியோரை விசாரிக்க வலியுறுத்தி பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தும் பா.ஜ.க., தாங்கள் ஆட்சி செய்யும் மாநிலத்தின் ஊழல் கொள்ளைக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்க முன்வரவில்லை. அத்வானியின் ஹவாலா ஊழல், அருண்ஷோரி, பிரமோத் மகாஜன் ஆகியோரின் தொலைத் தொடர்பு ஊழல், பங்காரு லட்சுமணன் லஞ்சம் வாங்கியையும் களவுமாக அம்பலப்பட்ட விவகாரம், கார்கில் சவப்பெட்டி ஊழல் என்று பா.ஜ.க.வின் யோக்கியதை ஏற்கெனவே நாறிப் போயுள்ளது. இவற்றையெல்லாம் மூடிமறைத்துவிட்டு ஏதோ யோக்கிய சிகாமணிகளைப் போல ஊழல் எதிர்ப்பு நாடகமாடிக் கொண்டு திரிகிறது பா.ஜ.க.

தற்போதைய நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் லோக்பால் மசோதா கொண்டுவரப்படுவதால், லோக்பால் சட்ட வரம்புக்குள் பிரதமரையும் சேர்க்கவேண்டும் என்ற வாதத்துக்கு ஆதரவாக பா.ஜ.க. தீவிரம் காட்டுவதை மட்டுப்படுத்த, கர்நாடக முதல்வர் எடியூரப்பா மீதான ஊழல் விவகாரத்தை காங்கிரசு கையிலெடுத்துக் கொண்டு ஆரவாரம் செய்கிறது. என் ஊழல் சாக்கடையைக் கிளறினால், உன் சாக்கடையைக் கிளறிவிடுவேன் என்று மிரட்டிப் பணிய வைக்கும் பாணியில்தான் இந்த ஊழல் எதிர்ப்பு வீராவேசம் நடக்கிறது. இதனால், ஆகஸ்ட் 3-ஆம் தேதியன்று தாக்கல் செய்யப்படவுள்ள லோக்பால் வரைவு மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்க மாட்டோம், எங்களது திருத்தங்களைக் கூறி லோக்பால் மசோதாவை வலுவுள்ளதாக்குவோம் என்று அறிவித்து தற்போதைக்கு பா.ஜ.க. பின்வாங்கியுள்ளது.

கர்நாடகத்தில் ரெட்டி சகோதரர்கள் என்ன செய்கிறார்களோ, அதையே ஒரிசா, சட்டிஸ்கர் மாநிலங்களில் டாடா, எஸ்ஸார், வேதாந்தா, போஸ்கோ முதலான உள்நாட்டு-வெளிநாட்டு ஏகபோக கார்ப்பரேட் முதலாளிகள் செய்து வருகின்றனர். நாட்டின் பொதுச்சொத்துக்களான காடுகள், மலைகள், கனிமங்கள், விளைநிலங்கள், நீர்நிலைகள் - என அனைத்தையும் தொழில் வளர்ச்சி என்ற பெயரில் பறித்தெடுத்து, அவற்றை உள்நாட்டு-வெளிநாட்டு கார்ப்பரேட் முதலாளிகளுக்கு உடமையாக்கும் பகற்கொள்ளை சட்டபூர்வமாகவே மூர்க்கமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. மறுகாலனியாக்கத்தின் கீழ் தொடுக்கப்பட்டுள்ள இத்தீவட்டிக் கொள்ளைதான் நாட்டு மக்களின் வாழ்வைப் பறிக்கும் முதற்காரணம் என்பதை மூடிமறைத்துவிட்டு, 2-ஜி அலைக்கற்றை ஊழல் - கொள்ளை விவகாரம் போல சில அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் அடிக்கின்ற இலஞ்சம்தான் முழுமுதற் பிரச்சினை என்று சித்தரித்து, அதன்மீது நடவடிக்கை எடுப்பதாக நாடகமாடி நாட்டு மக்களை ஏய்ப்பதில் எல்லா ஓட்டுக் கட்சிகளும் ஊடகங்களும் ஓரணியில் நிற்கின்றன. ●



படிப்பகம்

www.padippakam.com

# இம்சை அரசி செல்வி 24-ஆம் புலிகேசி!

**நிர்வாகத் திறன்மிக்க ஆட்சியை ஜெயா தருவார் என்ற பார்ப்பன ஊடகங்களின் "பில்ட்-அப்" நொறுங்கி விழுந்துவிட்டது.**

''ஜெயாவின் ஆட்சி என்றாலே நிர்வாகத் திறமை மிக்க ஆட்சி; சட்டம்-ஒழுங்கைக் கண்டிப்புடன் பேணக் கூடிய ஆட்சி. தி.மு.க.வின் ஆட்சியோ இதற்கு நேர் மாறானது'' என்றொரு கருத்தைப் பார்ப்பன ஊடகங்கள் திட்டமிட்டே நீண்டகாலமாகப் பரப்பி வருகின்றன.

அ.தி.மு.க., சட்டசபைத் தேர்தல்களில் அறுதிப் பெரும்பான்மை பெற்று அமைச்சரவையை அமைத்தவுடன், ஜெயாவின் சாணக்கியனான சோ ராமஸ்வாமி, ''தடம் புரண்டுவிட்ட நிர்வாகத்தை மீண்டும் நிமர்த்துவது லேசான காரியம் அல்ல. அதைச் செய்து காட்டுகிற திறமை இவரிடம் உண்டு என்ற மக்களின் எதிர்பார்ப்பை உணர்ந்த முதல்வர், அதை நிறைவேற்றி வைக்க முழுமையாக முனைந்திருக்கிறார்'' என ''பில்ட்-அப்'' கொடுத்து எழுதினார்.

முன்னாள் அரசுத் தலைவர் அப்துல் கலாமின் ஆலோசகர் பொன்ராஜை அழைத்துவந்து, ''புரட்ச்சி தலைவி'' நடத்திய அமைச்சரவை ஆலோசனைக் கூட்டத்தில், விவசாயத்தை மேம்படுத்துவது, மின் தட்டுப்பாட்டை மூன்று மாதங்களில் சரி செய்வது, மாணவர்களின் புத்தகச் சுமையைக் குறைப்பது என்றெல்லாம் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ள ஜூனியர் விகடன், ''ஆட்சி நிர்வாகத்தில் முக்கியமான மாற்றத்தைக் கொண்டுவரும் அறிகுறி இது'' என அக்கூட்டத்தைப் புகழ்ந்து தள்ளியது.

பாடச்சுமையைக் குறைக்க வேண்டும் எனக் கல்வியாளர்கள் கூறிவருவதை, மாணவர்களிடமிருந்து புத்தகங்களைப் பறித்துவிட வேண்டும் என ஜெயா புரிந்து கொண்டிருக்கிறார் போலும். தமிழகத்தில் பள்ளிக்கூட மாணவர்கள் கடந்த இரண்டு மாதங்களாக புத்தகங்களே இல்லாமல் பள்ளிக்கூடத்திற்குப் போய் பொழுதைக் கழித்துவிட்டுவருவதே, ஒரு அசாதாரணமான நிர்வாகியிடம் தமிழகம் மாட்டிக் கொண்டிருப்பதைப் புரிய வைத்துவிடுகிறது. பள்ளிக்கூடத்திற்குப் போக மாட்டேன் என அடம்பிடிக்கும் மாணவர்களைப் பார்த்திருக்கும் தமிழகம், பள்ளிக்கூட மாணவர்கள் புத்தகம் கொடுக்கக் கோரி சாலையில் மறியல் போராட்டம் நடத்துவதை இன்று பார்க்கிறது. ஒரு சட்டத்திருத்தத்தின் மூலம் மாணவர்கள் மத்தியில் இந்த 'மாற்றத்தை'க் கொண்டு வந்திருக்கும் செல்வி ஜெயாவின் நிர்வாகத் திறமையை, அவரது துதிபாடிகள் கின்னஸ் சாதனைக்குப் பரிந்துரைக்கலாம்.

மாணவர்கள் வீதியில் இறங்கிப் புத்தகம் கேட்டுப் போராடும்பொழுது, ஜெயாவோ 200 கோடி ரூபாய் செலவில் அச்சடிக்கப்பட்டுத் தயார் நிலையில் உள்ள சமச்சீர் கல்வி நூல்களைக் கரையான் தின்ன விடுகிறார். இப்புதிய பாடநூல்களுக்குப் பதிலாக, காலாவதியாகிப் போன பழைய பாடத் திட்டத்தின் கீழ் அச்சடிக்கப்பட்ட பாடநூல்களைக் கொடுத்துத் தமிழக மாணவர்களின் கல்வித் தகுதியை உயர்த்தப் போகிறாராம், இத்திறமைசாலி.

காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை எதிர்த்துத் தமிழக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருப்பதால், அத்தீர்ப்பை அரசிதழில் வெளியிட முடியாது என்ற நிலையிலும், அதனை அரசிதழில் வெளியிட வேண்டும் என அறிக்கைவிடுத்துத் தனது அதிபுத்திசாலித்தனத்தை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார், ஜெயா.

தமிழகத்தின் விவசாயத்தை மேம்படுத்த ஜெயாவிடம் சொந்த சரக்கு எதுவும் கிடையாது; குஜராத் பாணியை காப்பியடிப்பது என்பதுதான் அவரது திட்டம். இந்த குஜ

சமச்சீர் கல்வி பாடநூல்களை வழங்கக் கோரி, விருத்தாசலத்தில் பள்ளிக்கூட மாணவர்கள் மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் தலைமையில் நடத்திய சாலை மறியல்.





படிப்பகம்

www.padippakam.com

ராத் பாணி மேம்பாடு என்பது சிறு மற்றும் நடுத்தர விவசாயிகளை நிலங்களிலிருந்து சிறுகச்சிறுக அப்புறப்படுத்திவிட்டு அல்லது அவர்களை ஐ.டி.சி., ரிலையன்ஸ் போன்ற நிறுவனங்களின் குத்தகை விவசாயிகளாக மாற்றிவிட்டு விவசாயத்தை கார்ப்பரேட் மயமாக்குவதுதான். விவசாயத்திலும் தனியார்மயம் - தாராளமயத்தைப் புகுத்த வேண்டும் என்ற உலக வங்கியின் கட்டளையை நடைமுறைப்படுத்துவதுதான். எனவே, அமைச்சரவை ஆலோசனை கூட்டத்தில் விவசாய மேம்பாடு குறித்து ஜெயா கும்பல் நடத்திய ஆலோசனைகளை, தமிழக விவசாயிகளுக்கு எதிராக நடத்தப்பட்ட சதி என்றுதான் கூற முடியும்.



சென்னை-கே.கே.நகர் 9-ஆவது செக்டார் பகுதியில் தினமும் 5 மணி நேரத்துக்கும் மேலாக மின்தடை ஏற்படுவதைக் கண்டித்து, அப்பகுதி மக்கள் நடத்திய சாலைமறியல்.

மின் பற்றாக்குறையைச் சமாளிக்க மின்வெட்டை அமல்படுத்துவது என்ற புளித்துப்போன சூத்திரத்தைதான் இந்தத் திறமைசாலியும் பின்பற்றி வருகிறார். கடந்த இரண்டு மாதங்களாகத் தமிழகமெங்கும் அறிவிக்கப்பட்ட மின்வெட்டோடு, திடீர்திடீரென மின்சாரத்தை நிறுத்திவிடும் அறிவிக்கப்படாத மின்வெட்டும் நடைமுறையில் இருந்து வருகிறது. கடந்த தி.மு.க. ஆட்சியில் குறிப்பிட்ட நேரம் மின்தடை அமல்படுத்தப்பட்டு வந்த நடைமுறை போய், ஜெயாவின் ஆட்சியில் மின்சாரம் எப்பொழுது வரும், எப்பொழுது போகும் என்ற நிச்சயமற்ற நிலை உருவாகி விட்டதாகப் பொதுமக்களும், சிறுவீத உற்பத்தியாளர்களும் புலம்பும் அளவிற்கு மின்வெட்டு தீவிரமாகியிருக்கிறது.

மூன்று மாதங்களில் மின் பற்றாக்குறையைச் சமாளித்துவிடுவேன் என ஜெயா அடித்த சவடால் புஸ்வானமாகிப் போய்விட்டதால், புதிய திட்டங்களின் மூலம் அடுத்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் நிலைமை சீராகி விடும் என இப்பொழுது பீற்றி வருகிறார். இந்தப் புதிய திட்டங்கள் தனது ஆட்சியின் பொழுது தீட்டப்பட்டு, அவற்றின் கட்டுமானப் பணிகள் அப்பொழுதே தொடங்கப்பட்டதாக உரிமை பாராட்டுகிறார், கருணாநிதி.

தமிழகத்தின் மின் பற்றாக்குறைக்கு யார் காரணம்? யார் அதனைத் தீர்க்கப் போகிறார்கள்? என்பது குறித்து அய்யாவும், அம்மாவும் எதிரும் புதிருமாக நின்று அடித்துக் கொள்ளும் அதே சமயம், இவ்வளவு மின் பற்றாக்குறை நிலவும் சமயத்திலும் தமிழகத்தில் செயல்பட்டு வரும் பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தடையில்லாத மின்சாரம் வழங்குவதில் மட்டும் முன்னாள் தி.மு.க. ஆட்சிக்கும், இந்நாள் அ.தி.மு.க. ஆட்சிக்கும் இடையே எந்தவிதமான வேறுபாடும் இல்லை.

''கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தால் தனியார் மருத்துவமனைகளும் தனியார் காப்பீடு நிறுவனமும்தான் பயன் பெறுகின்றன. காப்பீடு திட்டத்தைச் செயல்படுத்த தனியார் நிறுவனங்களுக்குத் தருகின்ற நிதியில் அரசு மருத்துவமனைகளை மேம்படுத்தலாம்'' என கவர்னர் உரையிலேயே அறிவித்தார் 'புரட்சித் தலைவி'. தான் அறிவித்ததைத் தானே ஓரம் கட்டிவிட்டு, பழைய கள்ளு புதிய மொந்தை என்ற கணக்காய், புதிய காப்பீடு திட்டத்தை அறிவித்திருக்கிறது, ஜெயா அரசு. தி.மு.க. அரசு தனியார் காப்பீடு நிறுவனத்திற்குக் கொட்டிக் கொடுத்ததைவிட நான்கு மடங்கு அதிகமாகக் கொட்டிக் கொடுக்கப் போகிறது, இப்புதிய காப்பீடு திட்டம்.

கடந்த இரண்டு ஆண்டுகளாகச் செயல்படுத்தப்பட்டு வந்த கலைஞர் காப்பீடு திட்டத்தின் மூலம் ஸ்டார் ஹெல்த் இன்ஸ்யூரன்ஸ் என்ற தனியார் காப்பீடு நிறுவனம் 400 கோடி ரூபாய் இலாபம் அடைந்ததாகவும், அதிலொரு பங்கு கருணாநிதி குடும்பத்திற்குப் போய்ச் சேர்ந்ததாகவும் குற்றஞ்சாட்டி வந்தார், ஜெயா. இன்னும் ஓரிரு மாதங்கள் போனால், புதிய காப்பீடு திட்டத்தின் மூலம் எந்த கார்ப்பரேட் நிறுவனம் இலாபத்தைச் சுருட்டப் போகிறது, அதிலொரு பங்கு அ.தி.மு.க.வைக் கட்டுப்படுத்தும் எந்தக் குடும்பத்திற்குப் போய்ச் சேரப் போகிறது என்பதும் தெரிந்துவிடும்.

ஜெயா அறிவித்திருக்கும் மற்ற இலவசத் திட்டங்களும்கூடக் குளறுபடிகளும், சர்ச்சைகளும் நிறைந்ததாகத்தான் தீட்டப்பட்டுள்ளன. ''மாதமொன்றுக்கு 1 இலட்சம் கிரைண்டர்கள்தான் தயாரித்து வழங்க முடியும்'' என கோவையைச் சேர்ந்த கிரைண்டர் உற்பத்தியாளர்கள் அரசுக்குத் தெளிவுபடுத்தியிருந்த பிறகும், இந்த டெண்டரைக் கோரும் நிறுவனங்கள் ஆண்டொன்றுக்கு 25 இலட்சம் கிரைண்டர்கள் வழங்க வேண்டும் என்ற நிபந்தனையை விதித்திருக்கிறது, ஜெயா அரசு. சீன நாட்டு கிரைண்டர்களை இறக்குமதி செய்து விற்கும் வட இந்திய வியாபாரிகளிடம் டெண்டரை ஒப்படைக்கும் நோக்கம் இந்த நிபந்தனையின் பின் மறைந்திருக்கலாம் என்ற சந்தேகத்தைத் தமிழகத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் தற்பொழுது எழுப்பியுள்ளனர்.



படிப்பகம்

www.padippakam.com



ஜெயா-சசி கும்பலால் ஆக்கிரமித்துக் கொள்ளப்பட்ட பொதுப்பாதையைத் திறந்துவிடக் கோரி, கொடநாடு பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் (கோப்புப் படம்).

இலவச கலர் டி.வி. வழங்கும் திட்டத்தைச் செயற்படுத்திய தி.மு.க. அரசு, அதற்காக டெண்டர்களைக் கோரியபொழுது, வெளிப்படைத் தன்மையோடு நடந்து கொண்டதாகவும், அ.தி.மு.க. அரசு இலவச மிக்ஸி, கிரைண்டர், ஃபேன் வழங்கும் திட்டங்களுக்காக டெண்டர் கோரும் விஷயத்தில் முந்தைய ஆட்சியைப் போல வெளிப்படைத் தன்மையோடு நடக்கவில்லை என்றும் அ.தி.மு.க.வின் தோழமைக் கட்சிகள்கூட குற்றஞ்சுமத்தி வருகின்றன. இதன் பொருள் இந்த இலவசத் திட்டங்களில் கமிசன் என்ற பெயரில் கொள்ளையடிப்பதற்கான வாய்ப்புகளை அ.தி.மு.க. திறந்துவிட்டுள்ளது என்பதுதான்.

கிராமப்புற ஏழை மக்களுக்கு இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டத்தைத் தனது தேர்தல் அறிக்கையில் ஜெயா அறிவித்தபொழுதே, மலிவான விலையில் மாட்டுத் தீவனம் கிடைப்பதை உத்திரவாதப்படுத்தாமல் மாடு வழங்குவது, கிராமப்புற ஏழை மக்களை மேலும் கடனில் மாட்டிவிடுவதில் முடிந்துவிடும் எனப் பலரும் சுட்டிக்காட்டினர். ''அதனாலென்ன, மாடு வழங்கும் திட்டத்தோடு, மாட்டுத்தீவன உற்பத்தியைப் பெருக்கும் திட்டத்தையும் சேர்த்து அறிவித்தால் தீர்ந்தது பிரச்சினை'' எனக் கோமாளித்தனமாக முடிவெடுத்து இத்திட்டத்தை ஜெயா அரசு அறிவித்திருக்கிறது.

தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்திற்கு விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளைப் பார்த்தால், அத்திட்டம் ஏழைக் குடும்பங்களை மனதில் வைத்துக் கொண்டு உருவாக்கப்பட்ட திட்டமாகத் தெரியவில்லை. வெறும் விளம்பரத்திற்காகவோ அல்லது ஏழைகளின் பெயரைச் சொல்லி அ.தி.மு.க. கும்பலும் அதிகார வர்க்கமும் சேர்ந்து சுருட்டிக் கொள்வதற்காகவோ உருவாக்கப்பட்ட திட்டம் போல தெரிகிறது.

பட்ஜெட்டைத் தாக்கல் செய்வதற்கு முன்னதாகவே 4,000 கோடி ரூபாய் அளவிற்கு கூடுதல் வரிகள் விதிக்கப்பட்டதோடு, 1,400 கோடி ரூபாய் அளவிற்கு டாஸ்மாக் சரக்குகளின் கட்டணங்களும் உயர்த்தப்பட்டன. இக்கூடுதல் வரிகள் விதிக்கப்பட்ட ஒரு சில நாட்களிலேயே, ஜவுளி பொருட்களின் மீது விதிக்கப்பட்ட வரியை ரத்து செய்வதாக அறிவிக்கிறார், ஜெயா. ''நினைத்தால் வரி விதிப்பதும், நினைப்பை மாற்றிக் கொண்டால் வரியை நீக்குவதும் ஜெயாவின் பொழுதுபோக்கு'' என இதனை நக்கலடித்தார், கருணாநிதி.

ஒரு பக்கம் இலவசம், இன்னொரு புறம் வரிக் கொள்ளை; நினைத்தால் வரி விதிப்பது, நினைப்பை மாற்றிக் கொண்டால் வரியை நீக்குவது; வரி விதிப்பு தமிழக அரசு செய்தது; ஆனால், வரி உயர்வை ரத்து செய்தது ஜெயலலிதா என்ற இந்த நடவடிக்கைகள் எல்லாம் நமக்கு துக்ளக் தர்பாரை, இம்சை அரசன் 23-ஆம் புலிகேசியைப் போல கோமாளித்தனமான, வக்கிரமான ராஜாவாக ஜெயா ஆட்சி நடத்தி வருவதைதான் எடுத்துக் காட்டுகின்றன.

''தான் பதவியேற்றவுடனேயே சங்கிலி பறிக்கும் திருடர்கள் ஆந்திராவுக்கு ஓடிவிட்டதாக'' தனக்கேயுரிய மமதையோடு புளுகித் தள்ளினார் ஜெயா. அவர் இப்படிச் சொல்லி வாயை மூடும் முன்பே ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் பழ.கருப்பையா வீட்டிற்குள் திருடன் புகுந்து தனது கைவரிசையைக் காட்டிச் சென்றான். கடந்த இரண்டு மாதங்களாகத் தமிழகமெங்கும் நடந்துவரும் கொலை, கொள்ளை, சங்கிலி பறிப்பு சம்பவங்கள் ஜெயாவின் நிர்வாகத் திறமையைச் சந்தி சிரிக்க வைத்துவிட்டன. குறிப்பாக, சென்னையில் நடந்த வழக்குரைஞர் சங்கர சுப்புவின் மகன் சதீஷ் குமாரின் கொலை, ஜெயாவின் போலீசு தமிழகத்தின் சட்டம் - ஒழுங்குக்குச் சவால்விட்டிருப்பதைத் தெளிவுபடுத்தியது.

ஆட்சி மாற்றம் நிகழ்ந்தவுடனேயே பெரும்பாலான டாஸ்மாக் பார்களின் ஏலக் குத்தகை அ.தி.மு.க. பிரமுகர்களுக்கு மாறிவிட்டதாகவும், பார்களுக்கான ஏலமே குறிப்பிட்ட சில அ.தி.மு.க. பிரமுகர்கள் மட்டுமே கலந்து கொள்ளும்விதத்தில்தான் நடத்தப்பட்டதாகவும், பார்களுக்கான ஏலத்தொகை அடிமாட்டு விலைக்கு நிர்ணயிக்கப்பட்டு அ.தி.மு.க. பிரமுகர்களுக்குத் தாரை வார்க்கப்பட்டதாகவும் ஜூனியர் விகடன் இதழ் அம்பலப்படுத்தி எழுதியிருக்கிறது.

மணல் கொள்ளையைப் பொருத்தவரை, ''ஆட்சி மாறியது; காட்சி மாறவில்லை'' என்றும் குறிப்பிடுகிறது, ஜெயாவின் விசுவாசியான ஜூ.வி. ''கடந்த ஆட்சியில் கோவையைச் சேர்ந்த தொழில் அதிபர் ஆறுமுகசாமியும், தென்மாவட்டத்து காங்கிரசு பிரமுகரான படிக்காசுவும் தான் மணல் விற்பனையில் பெரும் இலாபமடைந்தார்கள். இந்த ஆட்சியிலும் மணல் விற்பனை அவர்களின் கைகளுக்குதான் போயிருக்கிறது. கடந்த ஆட்சியில்



படிப்பகம்

www.padippakam.com

இவர்கள் அழகிரியின் நிழல் நபராக இருந்தவருக்கு மாதமொன்றுக்கு 50 இலட்சம் கப்பம் கட்டினார்கள். இப்போது கப்பம் திசைதிரும்பி மன்னார்குடிக்குச் செல்கிறது. அவ்வளவுதான் வித்தியாசம்'' என ஜூ.வி. குறிப்பிடுகிறது. (ஜூ.வி. 31.7.2011, பக்.34)

கல் குவாரி அதிபர்களைக் கோட்டைக்கு வரவழைத்து கப்பம் கட்டுவது தொடர்பாக நடத்தப்பட்ட பேரம் அம்பலமானதால்தான், தொழில்துறை அமைச்சராக இருந்த சண்முகவேலு ஊரகத் துறைக்கு மாற்றப்பட்டார். இது தவறுக்குக் கிடைத்த தண்டனையல்ல. மாறாக, கப்பத்தை யாரிடம் செலுத்த வேண்டும் என்பது முடிவாகும் முன்பே, சண்முகவேலு பேரத்தைத் தொடங்கி நடத்தியதுதான் பிசகாகிவிட்டது.



கிரிமினல் வழக்கு - விசாரணைகளை எதிர்கொண்டுள்ள ஜெயா, சென்னை உயர் நீதிமன்றத்தில் நடந்த விழாவில் கலந்துகொள்ளக் கூடாது எனக் கோரி சென்னை உயர் நீதிமன்ற வழக்குரைஞர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம்.

சிறுதாவூரில் தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கப்பட்ட நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டு தனது சொகுசு பங்களாவைக் கட்டியுள்ள ஜெயா; கொடநாட்டில் மக்களின் புழக்கத்திற்குப் பயன்பட்டுவந்த பொது வழித்தடத்தை

# தோழர் கணபதியின் நினைவை நெஞ்சிலேந்துவோம்!

இராஜபாளையம் பகுதியைச் சேர்ந்த மூத்த நக்சல்பாரித் தோழர் கணபதி, கடந்த ஜூலை 22-ஆம் தேதியன்று தனது 75-வது வயதில் மரணமடைந்துவிட்டார்.



கம்யூனிச இலட்சியத்துடன் செயல்பட்டுவந்த தோழர் கணபதி, 1970-களின் பிற்பகுதியில் புரட்டல்வாத வலது கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறி நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். அன்றைய லிபரேஷன் குழுவிலும், அதன் பின்னர் மக்கள் யுத்தக் குழுவிலும் செயல்பட்டுவந்த அவர், அவற்றின் சந்தர்ப்பவாதப் போக்குகளை நிராகரித்து 1990-களில் விவசாயிகள் விடுதலை முன்னணியில் தன்னை இணைத்துக் கொண்டு ஊக்கமுடன் செயல்பட்டு வந்தார்.

குறிப்பாக, 1980-களில் லிபரேஷன் குழுவின் நக்சல்பாரிப் புரட்சியாளரான தோழர் மச்சக்காளையை இராஜபாளையம் அருகிலுள்ள சேத்தூர் போலீசு நிலையத்தின் போலீசார் சித்திரவதை செய்து கொன்றுவிட்டு, அவரது உடலை மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் போட்டு எரித்துவிட்டனர். இப்படுகொலையை எதிர்த்து, குடியுரிமைக்கான மக்கள் கழக (பி.யு.சி.எல்.)த்தின் மூலம் மதுரை நீதிமன்றத்தில் சேத்தூர் போலீசு நிலைய அதிகாரி அழகுவேல் மீது கொலைவழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கில், தோழர் மச்சக்காளையை சேத்தூர் பேருந்து நிலையத்தில் போலீசார் கைது செய்ததையும், பின்னர் பிணத்தை மலையடிவாரத்தை நோக்கி போலீசு எடுத்துச் சென்றதையும் நேரில் கண்டதாக சாட்சியமளித்து, போலீசின் அச்சுறுத்தலுக்கும் அடக்குமுறைக்கும் அடிபணியாமல் நக்சல்பாரிகளுக்கே உரித்தான துணிவையும் உறுதியையும் நிரூபித்துக் காட்டியவர்தான், தோழர் கணபதி.

தான் பொறுப்பேற்றுக் கொண்ட இயக்கப் பணிகளை விடாப்பிடியாக நிறைவேற்றுவதில் அவர் எப்போதுமே முன்னுதாரணமிக்கவர். புரட்சிகர இயக்கத்தில் இணையும் புதிய தலைமுறையினரிடம் தனது அனுபவங்களைத் தொகுத்துக் கூறி, விளக்குவதில் அவர் ஓர் நல்லாசிரியர். முதுமையில் தொழுநோயாலும் இரத்த அழுத்த நோயினாலும் பாதிக்கப்பட்டபோதிலும், நக்சல்பாரி புரட்சிகர அரசியலை உணர்வுபூர்வமாக நேசித்துச் செயல்படுவதில் அவர் ஓர் இளைஞன். குறிப்பாக, இராஜபாளையம் வட்டாரத்தில் நக்சல்பாரி புரட்சிகர அமைப்பான விவசாயிகள் விடுதலை முன்னணியைக் கட்டிவளர்ப்பதில் அவர் ஆற்றியுள்ள பங்கு மகத்தானது.

தோழர் கணபதியின் உயரிய கம்யூனிசப் பண்புகளை வழுவாமல் பின்பற்றி, அவர் கனவு கண்ட புதிய ஜனநாயகப் புரட்சியைச் சாதிக்க உறுதியேற்று எமது சிவப்பஞ்சலியைச் செலுத்துகிறோம்.

- விவசாயிகள் விடுதலை முன்னணி,
இராஜபாளையம்.



படிப்பகம்



நில ஆக்கிரமிப்பு-மோசடிகளில் ஈடுபட்டு அம்பலப்பட்டுப் போயுள்ள (இடமிருந்து) வணிக வரித்துறை அமைச்சர் அக்ரி.கிருஷ்ணமூர்த்தி, அம்பாசமுத்திரம் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. இசக்கி சுப்பையா, சோழவந்தான் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. கருப்பையா.

ஆக்கிரமித்துக் கொண்டுவிட்டு, உச்சநீதிமன்றம் அந்தப் பொதுப்பாதையைத் திறந்துவிட வேண்டும் என உத்தர விட்ட பிறகும், அதனை விட்டுத் தர மறுக்கும் ஜெயா, நில அபகரிப்புக்கு எதிராகத் தனி போலீசு பிரிவை உரு வாக்கியிருப்பது குரூரமான நகைச்சுவை. இப்போலீசார் 2006 தொடங்கி 2011 முடிய நடந்துள்ள நில ஆக்கிரமிப்பு களை விசாரிப்பார்கள் என வரையறுக்கப்பட்டிருப்பதே, இது தி.மு.க.வை அரசியல்ரீதியாக முடக்குவதற்கான முயற்சி என்பதை அம்பலப்படுத்திவிட்டது.

எனினும், கிணறு தோண்ட பூதம் கிளம்பிய கதை யாக, வணிக வரித்துறை அமைச்சர் அக்ரி. கிருஷ்ண மூர்த்தி, சோழவந்தான் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கருப்பையா, சட்டத்துறை அமைச்சராக்கப்பட்டுப் பின் பதவி பறிக்கப்பட்ட அம்பாசமுத்திரம் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் இசக்கி சுப்பையா உள்ளிட்டு பல அ.தி.மு.க. பிரமுகர்கள் மீதும் நில அபகரிப்பு புகார்கள் போலீசிடம் அளிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, அக்ரி.கிருஷ்ணமூர்த்தி மீது புகார் கொடுத்த அ.தி.மு.க.வின் திருவண்ணாமலை மாவட்டப் பிரதி நிதியான மூர்த்தியை மிரட்டி, அப்புகாரைத் திரும்பப் பெறச் செய்துவிட்டது அ.தி.மு.க. தலைமை. அக்ரி. கிருஷ்ணமூர்த்தி மீது முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரி கொடுத்த புகாரை கடந்த ஆட்சியின்பொழுதே போலீசு வாங்கிக்கொள்ள மறுத்துவிட்டதால், அவர் இது தொடர் பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருக்கிறார்; அமைச் சர் மீது புகார் கொடுக்க முயன்றுவரும் திருவண்ணா மலையைச்சேர்ந்த அரவிந்த் - தனலெட்சுமி தம்பதியினர் போலீசாரால் அங்குமிங்குமாக அலைக்கழிக்கப்படுகின் றனர். இசக்கி சுப்பையா மீது ஏற்கெனவே நில அபகரிப்பு தொடர்பாக மூன்று வழக்குகள் நிலுவையில் உள்ளதால், அமைச்சர் பதவி மட்டும் அவரிடமிருந்து பறிக்கப் பட்டது.

ஊழலற்ற, யாருடைய தலையீடும் இல்லாத, நேர்மை யான ஆட்சியை ஜெயா வழங்குவார் எனப் பார்ப்பன ஊட கங்கள் உருவாக்கிய பிம்பம், ஜெயா ஆட்சியைப் பிடித்த மறுநொடியே உடைந்து நொறுங்கிவிட்டது என்பதைத் தான் இவையெல்லாம் எடுத்துக் காட்டுகின்றன. தி.மு.க. என்ற கொள்ளைக் கும்பலுக்குப் பதில் அ.தி.மு.க. என்ற கொள்ளைக் கும்பல், மு.க.விற்குப் பதில் ஜெயா, கருணாநிதியின் குடும்ப ஆதிக்கத்திற்குப் பதில் சசிகலா குடும்பத்தின் ஆதிக்கம் என்ற மாற்றத்தைத் தவிர, வேறு எதையும் இந்த ஆட்சி மாற்றம் சாதித்துவிட வில்லை என்பதே உண்மை.

இலவசங்கள் மூலம் மக்களைச் சாதுர்ய மாக மயக்கி, கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சேவை செய்யும் ஆட்சியைதான் மு.க. நடத்திவந்தார். அய்யா போன அதே பாதையில்தான் அம்மாவும் தனது ஆட்சித் தேரை உருட்டிச் செல்கிறார். இது மட்டுமா, ஈழத் தமிழர் விவகாரம், தமிழக மீனவர்கள் சிங்களக் கடற்படையால் தாக்கப்படும் பிரச்சினைகளில் மைய அரசுக்குக் கடிதம் எழுதுவது என்ற மு.க.வின் தந்திரத்தைதான் ஜெயாவும் பின்பற்றி வருகிறார். தமிழ், தமிழினம், நாத்திகம் என முற்போக்கு வேடம் போடுவார் மு.க. பார்ப்பன பாசிஸ்டான ஜெயாவிடம் இந்த வேடத்தைக்கூட எதிர்பார்க்க முடியாது என்பதைத் தவிர, அய்யாவின் ஆட்சிக்கும், அம்மாவின் ஆட்சிக்கும் இடையே அடிப்படையில் எந்த வேறுபாடும் கிடையாது.

எனினும், சில விஷயங்களில் அய்யாவைவிட, அம்மா 'திறமையானவர்' என்பதை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து குவித்த வழக்கு, பிறந்த நாள் பரிசு வழக்கு ஆகிய கிரிமனல் வழக்குகளில் முதல் குற்றவாளியான ஜெயா, சட்டத்தில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டு, கிரிமினல்தனமான முறையில் இந்த வழக்கு களின் விசாரணையை 14 ஆண்டுகளுக்கும் மேலாக இழுத் தடித்து வருகிறார். தேர்தல் ஆணையத்திற்குத் தவறான தகவல்களைக் கொடுத்ததற்காக ஜெயா மீது தொடரப் பட்ட வழக்கு, 37-ஆவது முறையாகத் தள்ளிவைக்கப் பட்டுள்ளது. பதவியில் இருந்தாலும், இல்லாவிட் டாலும், தனது கிரிமினல் குற்றங்களுக்காக நீதிமன்றம் தன்னை நெருங்கிவிடாதபடி, தனக்குள்ள சாதி மற்றும் அரசியல் செல்வாக்கு, தொடர்புகளைப் பயன்படுத்திக் கொண்டு திறமையாகத் தன்னைத் தற்காத்துக் கொண்டு வருகிறார், பார்ப்பன - பாசிச ஜெயா.

இப்படிபட்ட கிரிமினல் பேர்வழியை, அவர் மாறி விட்டாரென்றும், பக்குவப்பட்டுவிட்டாரென்றும், திறமையான நிர்வாகியென்றும் ஒளிவட்டம் கட்டி, ஊடகங்கள் மக்கள் முன் நிறுத்துவது கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் தவிர வேறென்ன?

● குப்பன்



படிப்பகம்

# “வணிகமயமாகும் கல்விக் கொள்ளைக்கு முடிவு கட்டுவோம்! இலவசக் கட்டாயக் கல்வி உரிமையை நிலைநாட்டுவோம்!!”

## – புதியதொரு மாணவர் எழுச்சிக்கு வித்திட்ட பு.மா.இ.மு.–ம.க.இ.க.–வின் கருத்தரங்கம்.

சமச்சீர் கல்வி பொதுப் பாடத்திட்டத்தை முடக்கும் பாசிச ஜெயா அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கும்போதே, சமச்சீர் கல்வி ஒழிப்பு நடவடிக்கையின் அரசியல் பின்புலத்தை மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் விளக்கிப் புரிய வைக்கும் பிரச்சாரத்தையும் புரட்சிகர மாணவர் - இளைஞர் அணி, மக்கள் கலை இலக்கியக் கழகம் ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமிழகமெங்கும் மேற்கொண்டு வருகின்றன.

‘‘வணிகமயமாகும் கல்விக் கொள்கைக்கு முடிவு கட்டுவோம்! இலவசக் கட்டாயக் கல்வி உரிமையை நிலைநாட்டுவோம்!!’’ என்ற முழக்கத்தினை முன்வைத்து ஜூலை 19 அன்று சென்னை-அரும்பாக்கம், ஜி.ஜி.மகால் அரங்கில் பு.மா.இ.மு; ம.க.இ.க. சென்னைக் கிளைகளின் சார்பில் அரங்குக் கூட்டம் நடத்தப்பட்டது. வீர வணக்கப் பாடலுடன் தொடங்கிய கூட்டத்திற்கு பு.மா.இ.மு.-வின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் கணேசன் தலைமை தாங்கி உரை நிகழ்த்தினார்.

சென்னை நகரின் குரோம்பேட்டை, மதுரவாயல் பள்ளிகள் உள்ளிட்ட பல்வேறு பள்ளிகளிலிருந்தும், நந்தனம் கலைக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, மாநிலக் கல்லூரி, ராணிமேரிக் கல்லூரி முதலான கல்லூரிகளிலிருந்தும் நூற்றுக்கணக்கான மாணவர்கள், மாணவிகள் அரங்கில் திரண்டிருப்பதையும், மெட்ரிக் பள்ளிகளின் கல்விக் கொள்ளைக்கு எதிரான போராட்டத்தினூடாக செயின்ட் ஜான்ஸ் பள்ளி, பத்மா சாரங்கி, லயோலா முதலான பள்ளிகளைச்சார்ந்த மாணவர்கள் மட்டுமின்றி, பெற்றோர்களும் அக்கூட்டத்தில் திரண்டிருப்பதையும் அவரது தலைமையுரையில் சுட்டிக் காட்டி, அவர்களை வரவேற்று தோழர் கணேசன் பேசினார்.

கருத்தரங்கின் நோக்கத்தை சுருக்கமாக விளக்கிதோடு மட்டுமின்றி, சமச்சீர் கல்வி எதிர்ப்பில் முன்னணியில் இருக்கின்ற பத்மாசாரங்கி, லயோலா, டி.ஏ.வி.,முதலான பள்ளிகள் வழங்கும் விண்ணப்ப படிவத்தின் பின்புறத்தில், எவ்வளவு நன்கொடை தரமுடியும் என்பதை எழுதித் தருமாறு பெற்றோரிடம் அப்பள்ளி நிர்வாகங்கள் கோருவதாகவும், டெண்டர்களைத் தீர்மானிப்பதைப் போலவே, அதிகபட்ச நன்கொடை தருபவர்களுக்குப் பள்ளியில் இடமளிக்கப்படுவதாகவும் கூறி, மெட்ரிக் பள்ளிகளின் யோக்கியதையை அம்பலப்படுத்தினார். சமச்சீர் கல்வி என்று பெயரிட்டு கருணாநிதி அரசு கொண்டுவந்திருக்கும் பொதுப் பாடத்திட்டம், மிகவும் வரம்புக்கு உட்பட்ட ஒரு சீர்திருத்தம்தான் என்ற போதிலும், அதை முடக்குகின்ற ஜெயா அரசுக்கு எதி



ஈடுபாட்டுடன் திரண்டு வந்த பள்ளி-கல்லூரி மாணவர்களால் நிரம்பிவழிந்த அரங்கம்.



படிப்பகம்

www.padippakam.com

ராகப் போராட வேண்டியிருக்கிறது என்றும், அந்த போராட்டத்தை நடத்துவதற்குக்கூட தி.மு.க. உள்ளிட்ட ஓட்டுக்கட்சிகள் தயாராக இல்லாத நிலையையும் சாடினார், அவர்.

''ஏன் வேண்டும் சமச்சீர் கல்வி?'' என்ற தலைப்பில் உரையாற்றிய மூத்த கல்வியாளரும், சமச்சீர் கல்விக்குழு உறுப்பினருமான ச.சீ.இராசகோபாலன், கடந்த ஒன்றரை மாத காலத்தில் பத்தாம் வகுப்பு பாடங்களில் கால் பகுதி நடத்தி முடிக்கப்பட்டிருக்கும் என்றும், தற்போது பாடப் புத்தகங்களே இல்லாமல் பள்ளிகளை நடத்தச் சொல்லி மாணவர்களின் கல்வியை அரசு நாசமாக்குகிறது என்றும் சாடினார். சமச்சீர் கல்வி என்பது என்ன என்று தெரிந்து கொள்வதற்கு முன், கல்வி என்றால் என்ன என்பதையே முதலில் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறிய அவர், சமூகக் கண்ணோட்டத்தைக் கற்பதுதான் கல்வி என்பதைப் பல உதாரணங்களினூடாக விளக்கினார்.

''பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் கட்டணக் கல்விதான் அமலில் இருந்தது. கீழ் வகுப்புகளுக்கு மாதக் கட்டணம் ரூ.2.75. மேல் வகுப்புகளுக்கு மாதத்துக்கு ரூ. 5.25. அந்தக் காலத்தில் இந்தக் கட்டணத்தைக் கட்டமுடியாமல் பல பேரால் படிக்க முடியவில்லை. 1964-ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முதன்முதலில் கட்டணமில்லாக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. முற்றிலும் இலவசமாக இல்லாமல் ''ஸ்பெசல் பீஸ்'' என்றொரு தொகை வசூலிக்கப்பட்டது. 1978-இல் எம்.ஜி.ஆர்.தான் மீண்டும் கட்டணக் கல்வியைக் கொண்டு வந்தார். வெள்ளைக்காரன் ஆட்சியில் கீற்றுக் கொட்டகைப் பள்ளியாக இருந்தாலும், டான்பாஸ்கோவாக இருந்தாலும் ஒரே மாதிரியான கட்டணம்தான் வசூலிக்கப்பட்டது. ஆனால் இன்றோ, கோவையில் எல்.கே.ஜி. பள்ளியில் 28,750 ரூபாய் ஆண்டுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இலவசக் கல்வி என்பதை நோக்கித்தான் நமது போராட்டம் இருக்க வேண்டும் என்ற போதிலும், தற்போதைய இந்தச் சூழலில், தனியார் பள்ளிகள் அனைத்திலும் ஒரேமாதிரியான கட்டண விகிதம் என்பதை முன்வைத்தும் போராட வேண்டியிருக்கிறது'' என்று கட்டணக் கல்வியின் வரலாற்றை விளக்கிய அவர், இன்று சமச்சீர் கல்வி பொதுப் பாடத்திட்டத்துக்காகப் போராடுபவர்களில் ஆசிரியர் சங்கத்தினர் யாரும் இல்லையென்பதை விமரிசனமாகக் குறிப்பிட்டார். சமச்சீர் என்ற வார்த்



மூத்த கல்வியாளரும், சமச்சீர் கல்விக் குழு உறுப்பினருமான ச.சீ.இராசகோபாலன்.



பு.மா.இ.மு. மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் கணேசன்

தையையே ஆசிரியர்கள் உச்சரிக்கக் கூடாது என்று மாவட்ட கல்வி அதிகாரிகள் உத்தரவிட்டிருப்பதாகவும், இத்தகைய அடிமைத்தனம்-அச்சம் ஆகியவற்றுக்கு எதிராகக் கேள்வி கேட்கவும் விவாதிக்கவுமான பண்பை வளர்ப்பதுதான் கல்வி என்றும், அத்தகைய கல்விக்காகத் தான் நாம் போராட வேண்டும் என்றும் கூறி, தன் உரையை நிறைவு செய்தார். முதுமை காரணமாகப் பேச இயலாமல் சிரமப்பட்ட போதிலும், தனது உரையின் இடையே ஆங்காங்கு கேள்விகளை எழுப்பி, மாணவர்களைப் பதிலளிக்கச் செய்ததன் மூலம் அவரது உரை, ஒரு உரையாடலாகவும் அமைந்திருந்தது.

''கல்வி கார்ப்பரேட்மயம் என்பது உலகமயம் உருவாக்கும் புதிய பார்ப்பனியம்'' என்ற தலைப்பில் அடுத்து உரையாற்றிய ம.க.இ.க. பொதுச் செயலர் தோழர் மருதையன், தமிழக அரசின் சட்டத்திருத்தத்துக்கு எதிராக உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பின் சாரத்தைச் சுருக்கமாக விளக்கிவிட்டு, தி.மு.க. ஆட்சியில் சமச்சீர் கல்விச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்த எந்தக் கட்சியும் இன்று அதற்காகப் போராடவில்லை என்பதையும், வலது, இடது போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் துரோகத்தையும் இரட்டை வேடத்தையும் அம்பலப்படுத்தினார்.

''சமச்சீர் கல்வியை எதிர்த்து உயர் நீதிமன்றத்தில் அரசு முன்வைக்கும் வாதங்கள் கல்வி தனியார்மயத்தை ஆதரிப்போரின் வாதங்களே. பிள்ளைகள் என்ன படிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு என்கிறது அரசு. அத்தகைய உரிமை பெற்றோருக்கு எப்போதும் இருந்ததில்லை. இந்த வாதத்தின் உட்பொருள், காசு கொடுப்பவனுக்கும் இலவசமாகப் படிப்பவனுக்கும் ஒரே பாடத்திட்டம் இருக்கக் கூடாது என்பதுதான். சாதிய, வர்க்க, பாலின, பிராந்திய ஏற்றத் தாழ்வுகள் உள்ளிட்ட பல ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட ஒருநாட்டில், அந்த ஏற்றத்தாழ்வுகளை சமன் செய்யும் விதத்திலான பாடத்திட்டத்தை வழங்குவதற்குப் பதிலாக, அந்த ஏற்றத்தாழ்வை மேலும் அதிகமாக்குவது என்பதே தற்போதைய கல்விக் கொள்கையின் நோக்கமாக இருக்கிறது. அன்று சூத்திரனுக்கும் பஞ்சமனுக்கும் கல்வி இல்லை என்றது மனுநீதி. இன்று, ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் மேல்தட்டு வர்க்கத்துக்கும் ஒரே கல்வியா, பணம் கட்டிப் படிப்பவனுக்கும் இலவசமாகப் படிப்பவனுக்கும் ஒரே பொதுப்பாடத்திட்டமா என்ற கேள்வி



படிப்பகம்

www.padippakam.com

எழுப்பப்படுகிறது. உழைக்கும் மக்களுக்கு எழுத்தறிவு போதும், முறைசாராக் கல்வி போதும், முறையான கல்வி தேவையில்லை என்ற கொள்கையும் நடைமுறைப்படுத் தப்படுகிறது.''

''தரம் என்ற பெயரில் நியாயப்படுத்தப்படுவது தனியார்மயமாகும். தனியார் பள்ளிதான் தரம் என்று கருது கிறார்கள் மெட்ரிக் பள்ளியில் படிக்க வைக்கும் பெற் றோர்கள். அரசு பள்ளி தரமில்லையென்றால், அதனைச் சீர்செய்யப் போராட வேண்டுமே தவிர, தனியார் கொள்ளை அதற்குத் தீர்வல்ல. தனியார்தான் தர மென்றால், மெட்ரிக் பள்ளிகளில் படித்த பிள்ளைகளைச் சுயநிதிக் கல்லூரிகளுக்குத்தான் அனுப்ப வேண்டும். அரசுப் பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு மட்டுமே அரசுப் பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில் அனுமதி என்று ஆக்குவதற்காக நாம் போராட வேண்டும். ''

''கல்வி என்பதும் காசுக்கு விற்கும் சரக்குதான் என் பதே தனியார்மயம்-தாராளமயக் கொள்கை. மருத்துவம், குடி தண்ணீர், போக்குவரத்து, மின்சாரம், தொலைபேசி



ம.க.இ.க பொதுச் செயலர் தோழர் மருதையன்.

ஆகிய அனைத்துச் சேவைகளையும் வணிகம் சார்ந்த சேவைத்துறைகள் என்று வரையறுக்கும் காட்ஸ் ஒப்பந் தத்தில் இந்திய அரசு கையெழுத்திட்டிருக்கிறது. அதன் விளைவுதான் தண்ணீர் வியாபாரம் முதல் ஸ்பெக்ட்ரம் ஊழல் வரையிலான அனைத்தும். அலைக்கற்றை ஊழல் ரூ.1,76,000 கோடி என்கிறார்கள். இந்தியாவைப் பொருத்த

# பெட்ரோல்-டீசல் விலை உயர்வுக்கு எதிராகப் புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

**ச**ர்வதேசச் சந்தையில் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றுக்கு 110 டாலர் விலை இருந்தபோது, அதையொட்டியே விலை நிர்ணயம் செய்யப்படும் என்று கூறிய மைய அரசு, தற்போது ஒரு பீப்பாய் எண்ணெய் விலை 93 டாலராகக் குறைந்துள்ள போது விலையைக் குறைக்காமல், ஏற்றிய விலையிலேயே விற்றுக் கொள்ளையடிப்பதை எதிர்த்து கடந்த ஜூன் 29 அன்று தஞ்சை ரயிலடியில் ம.க.இ.க; பு.மா.இ.மு; வி.வி.மு., ஆகிய அமைப்புகள் இணைந்து ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

தஞ்சை ம.க.இ.க. கிளைச் செயலர் தோழர் இராவணன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ''பெரும் பாலான மக்கள் பயன்படுத்தும் பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் விலையை உயர்த்தும் அரசு, பெருந்தொழில் நிறுவனங்கள் பயன்படுத்தும் ஜெனரேட்டர் களை இயக்க ஆண்டுக்கு பல ஆயிரம் கோடி ரூபாய் டீசல் மானியம் வழங்குவதைத் தோலுரித்துக் காட்டியும், தற்போதைய சர்வதேசச் சந்தை மதிப்பில் பெட்ரோலை லிட்டர் ரூ.30-க்கும் டீசலை ரூ.15-க்கும் விற்றாலே ஆண்டுக்குப் பல ஆயிரம் கோடி வருவாய் கிடைக்கும் போது, ரூ. 2.5 இலட்சம் கோடியை மக் களிடம் சட்டபூர்வமாகக் கொள்ளையடிப்பதை'' விளக்கியும், இப்பகற்கொள்ளைக்கு எதிராகப் போராட அறைகூவியும் ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப் புரையாற்றினார்.

பெட்ரோல்-டீசல் விலை உயர்வுக்கான காரணத்தை மக் களுக்கு உணர்த்தும் வகையில் 16.7.2011 அன்று புதுச்சேரி - காந்தி வீதி சின்ன மணிக்கூண்டு அருகே பு.ஜ.தொ.மு. ஆர்ப் பாட்டம் நடத்தியது. தனியார் விமானங்களில் பயன்படுத்தப் படும் ஒயிட் பெட்ரோலுக்கு மானியம் அளிக்கும் அரசு, உழைக்கும் மக்கள் பயன்படுத்தும் பெட்ரோல்-டீசலுக்கு மட்டும் விலையேற்றம் செய்து கொள்ளையடிக்கிறது என்பதை விளக்கியும், தனியார்மய-தாராளமயத் தாக்குதலுக்கு எதிராகப் போராட அறைகூவியும் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

பெண்கள் விடுதலை முன்னணி சார்பில் பெட்ரோல் விலையேற்றத்தை எதிர்த்து 9.7.2011 அன்று சென்னை-



சென்னையில்...

குரோம்பேட்டை பேருந்து நிலையம் அருகில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. தோழர் சாந்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், பெ.வி.மு. செயலர் தோழர் உஷா சிறப்புரை யாற்றினார். கட்டணக் கழிப்பறையை உருவ பொம்மையாக வைத்து கக்கூசுக்குக் கூடவா விலைவாசி உயர்வு என்றும், தண்ணீர் தாகத்திற்கா, இலாபத்திற்கா? எனக் குடிநீர் குடுவைகளைக் கொண்ட காட்சி விளக்கமும், மறுகாலனிய எதிர்ப்பு முழக்கங்களோடு தோழர்கள் பாடிய பாடல்களும் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றன.

சேலம் - போஸ் மைதானத்தில், 18.7.2011 அன்று பெண்கள் விடுதலை முன்னணி சார்பில் ''பெட்ரோல், டீசல், மண்ணெண் ணெய் விலை உயர்வு! இதுதான் கார்ப்பரேட் முதலாளிகளின் பகற்கொள்ளை!'' என்ற முழக்கத்துடன் ஆர்ப்பாட்டம் நடை பெற்றது. எண்ணெய் முதலாளிகளின் பகற்கொள்ளைக்காக அரசாங்கம் சட்டபூர்வ வழிப்பறி நடத்துவதை எதிர்த்து மாவட்டச் செயலர் தோழர் கந்தம்மாள் தலைமையில் நடந்த இந்த ஆர்ப் பாட்டம் மக்களைப் போராட்டத்துக்கு அறைகூவுவதாக அமைந்தது.

-பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்


மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு.

வரை கல்வித்துறையில் ஆண்டொன்றுக்கு புரளும் தொகை ரூ.2.5 இலட்சம் கோடி. அலைக்கற்றை ஊழலில் ஆதாயம் அடைந்த அதே கார்ப்பரேட் முதலாளிகளும் பன்னாட்டு முதலாளிகளும்தான், கல்வி தனியார்மயத்தில் ஆதாயமடைகிறார்கள். கல்வியை முற்றிலுமாகத் தனியார்மயமாக்கும் பல மசோதாக்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்காக காத்திருக்கின்றன. இம்மசோதாக்களின்படி கல்விக் கட்டணம், ஆசிரியர் ஊதியம், மாணவர் உரிமை ஆகிய அனைத்தையும் கல்வி நிறுவனங்களை நடத்தும் கார்ப்பரேட் கம்பெனிகள்தான் தீர்மானிக்கும். கட்டணங்களை வரன்முறைப்படுத்தும் பொருட்டு கோவிந்தராசன் கமிட்டி மாதிரியான கமிட்டிகளைப் போடும் அதிகாரம்கூட அரசிடமிருந்து பறிக்கப்படும். இந்தியாவில் கல்வியின் எதிர்காலம் எப்படி அமைய வேண்டும் என்பதைப் பற்றி ஆலோசனை கூறுவதற்காக 2001-இல் பா.ஜ.க. அரசு நியமித்த அம்பானி-பிர்லா குழுவின் அறிக்கை இவையனைத்தையும் கோருகிறது.''

''அமெரிக்காவில் கல்விக்கடன் வாங்கிப் படிக்கும் மாணவன், அதனை அடைப்பதற்கே 20 ஆண்டுகள் ஆகின்றன'' என்று ஒரு பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார் எழுத்தாளர் அமிதவ் கோஷ். அதே திசையில் கல்வியை கார்ப்பரேட்மயமாக்கும் நோக்கத்தில்தான் எஜுகேஷன் பைனான்ஸ் கார்ப்பரேசன் என்றொரு அமைப்பையே மைய அரசு உருவாக்குகிறது. ஜெயா அரசு பொதுப்பாடத் திட்டத்தை ஒழிக்கும் நோக்கமும் அதுதான்.''

''ஜெ. அரசு, மாணவர்களின் துன்பத்தையோ, மக்களின் உணர்வையோ கடுகளவும் மதிக்கப் போவதில்லை. நீதிமன்றத்தில் தோற்றால், அது ஒரு அடிபட்ட மிருகத்தைப் போலத்தான் நடந்து கொள்ளும். எனவே, ஒரு மாணவர் எழுச்சியின் மூலம் மட்டும்தான் நாம் இக்கோரிக்கையில் வெல்ல இயலும்'' என்று கூறி உரையை நிறைவு செய்தார், தோழர் மருதையன்.

''கட்டாய இலவசக் கல்வி தருவது அரசின் கடமை, கல்வி தனியார்மயம் என்பது ஏழைகள் மீதான வன்கொடுமை'' என்ற தலைப்பில் பேசிய மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ராஜு, இலவசக் கல்விதான் தீர்வு என்பதைக் கல்வி வணிகர்களுக்கு எதிரான தமது போராட்ட அனுபவத்தின் ஊடாக விளக்கிப் பேசினார். பெற்றோர் சங்கம் என்று ஒன்று ஏற்படுத்திய பின்னர், அன்றாடம் மக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன என்றும் கல்விக் கொள்ளையர்களால் பாதிக்கப்படும் மக்கள் போகுமிடம் தெரியாமல் தவிக்கிறார்கள் என்றும் கூறினார்.

''வாங்குகின்ற கட்டணத்துக்கு ரசீது தர மறுக்கிறான். கோவிந்தராசன் கமிட்டி, ரவிராசபாண்டியன் கமிட்டி என்று போட்டு கட்டண நிர்ணயம் செய்தால், அதற்கும் கட்டுப்பட மறுக்கிறான். ஸ்பெசல் கிளாஸ், ஸ்மார்ட் கிளாஸ் என்று ஏதாவது ஒரு பெயரைச் சொல்லி ஆயிரக் கணக்கில் கொள்ளையடிக்கிறான். கல்வித்துறை அதிகாரிகளை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. ஒரு பொட்டல் காட்டில் பள்ளிக்கூடத்தை கட்டி வைத்துக் கொண்டு, விடுதி இருப்பதாகச் சொல்லி பெற்றோர்களிடம் பணம் வசூலித்துவிட்டு, வகுப்பறையிலேயே மாணவர்களைப் படுக்க வைக்கிறான். கல்வி அதிகாரியிடம் புகார் செய்தால், பல பள்ளிகள் தங்கள் பட்டியலிலேயே இல்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். அனுமதியோ, அங்கீகாரமோ இல்லாமல் பல பள்ளிகள் நடக்கின்றன. இத்தனை அட்டூழியங்களையும் அவர்கள் செய்ய முடிவதற்கு காரணம், அரசு இவர்களுக்கு பின்பலமாக இருக்கிறது என்பதுதான். ''

''எந்தச் சட்டத்தையும் அவர்கள் மதிப்பதில்லை. இலவசக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி 25% மாணவர்களை தனியார் பள்ளிகள் சேர்த்துக் கொள்ளவேண்டும். அவர்களுக்கான கட்டணத்தை அரசு கொடுக்கும் என்று கூறுகிறது இந்தச் சட்டம். இதன்படி மாணவர்களை சேர்த்துக் கொள்ளக் கோரினால், இப்படி ஒரு உத்தரவு தங்களுக்கு வரவே இல்லை என்கிறார்கள். பிறகு உத்தரவையெல்லாம் காட்டி சேர்க்கச் சொன்னால், அரசாங்கம் கொடுக்கவேண்டிய பணத்துக்கு நீ உத்திரவாதம் தருகிறாயா என்று நம்மைக் கேட்கிறார்கள்.''

''எந்த கமிட்டி, எந்தச் சட்டத்தாலும் பயன் இல்லை. எதைப் போட்டாலும் அதை இவர்கள் வளைத்து விடுவார்கள். இலவசக் கல்விக்காக போராடுவது ஒன்றுதான் தீர்வு. பெற்றோர்கள் போராடுவதற்கு அஞ்சினால் எதுவும் செய்ய இயலாது. ஒவ்வொரு பள்ளியிலும் பத்து பெற்றோர்கள் தாளாளர்களை அடித்தால்தான் தீர்வு பிறக்கும். கல்வி தனியார்மயம், சமச்சீர் பாடத்திட்ட ஒழிப்பு என்பதன் பொருள் குலக்கல்விதான். அவர்கள் ராஜாஜியின் வாரிசு என்றால், நாம் பெரியார்- அம்பேத்கரின் வாரிசு என்று காட்ட வேண்டும். தனியார் கல்விக் கொள்ளையர்களை ஒழிக்கும்வரை ஓயக்கூடாது'' என்று கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

நிகழ்ச்சியினிடையே பு.மா.இ.மு. மாணவர்கள் புரட்சிகரப் பாடல்களைப் பாடினர். போராடிச் சிறை சென்ற மாணவர்கள் மேடையில் அறிமுகப்படுத்தப் பட்டு பாராட்டப்பட்டனர். கருத்தரங்கில் பங்கேற்ற பள்ளி- கல்லூரி மாணவர்களின் ஈடுபாடு, புதியதொரு மாணவர் எழுச்சி துவங்கும் என்பதற்கான நம்பிக்கையையும் உத்வேகத்தையும் அளித்தது.

– பு.ஜ. செய்தியாளர்கள்



படிப்பகம்

www.padippakam.com

## 2-ஜி அலைக்கற்றை ஊழல் விசாரணை:

# குற்றவாளி ராசா அம்பலப்படுத்தும் உண்மைகள்

**மன்மோகன் சிங், ப.சிதம்பரம், பவார், டாடா, அம்பானி உள்ளிட்டுப் பலருக்கும் இப்பகற்கொள்ளையில் நேரடித் தொடர்பிருக்கும்பொழுது, தி.மு.க. மட்டும் குறி வைக்கப்படுவது ஏன்?**

அலைக்கற்றை ஊழல் என்பது அரசியல்வாதிகள், அதிகாரிகள் சம்மந்தப்பட்ட ஊழல் மட்டுமல்ல; இது தனியார்மய-தாராளமயக் கொள்கைகளின் கீழ் நடைபெறும் கார்ப்பரேட் பகற்கொள்ளை. தனியார்மய- தாராளமயக் கொள்கைகளின் கீழ் இத்தகைய பகற்கொள்ளைகள் சட்டபூர்வமாகவே அனுமதிக்கப்பட்டிருப்பதுதான் இதில் நாம் கவனம் செலுத்த வேண்டிய மையமான பிரச்சினை; இலஞ்ச-ஊழல் மோசடிகளைக் காட்டிலும் முதன்மையானதும், அவற்றில் பலவற்றுக்கு அடிப்படையானதும் இதுதான் என்பதை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

எனினும், 2-ஜி அலைக்கற்றைகளை ஏலம் மூலம் விற்பனை செய்யாத காரணத்தினால் அரசுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அதிகபட்ச வருவாய் இழப்பு என்று கணக்குத் தணிக்கையாளர் குழு அளித்த மதிப்பீடான ரூ.1.76 இலட்சம் கோடி என்ற தொகை முழுவதையும் ஊடகங்கள் ‘ஊழல்’ என்று பெயரிட்டு அழைக்கத் தொடங்கியதன் தொடர்ச்சியாக, இம்மாபெரும் கார்ப்பரேட் பகற்கொள்ளையின் பின்புலமாக அமைந்திருக்கும் மறுகாலனியாக்கம் என்னும் மையமான பிரச்சினை பின்னுக்குத் தள்ளப்பட்டது. ஊழல்தான் நாட்டின் மையமான பிரச்சினை என்று சித்தரிப்பதற்கும், இன்னும் ஒரு படி மேலே போய் தனியார்மய-தாரளமயக் கொள்கைகள் மூலம் நாடு அடையக்கூடிய முன்னேற்றத்தைத் தடுப்பதே ஊழல்தான் என்று சித்தரிப்பதற்கும் இது பயன்பட்டது.

‘அலைக்கற்றை ஊழல்’ விவகாரத்திலிருந்து ‘உத்தமர்’ மன்மோகன் சிங்கும் டாடா, அம்பானி, மித்தல், ரூயா, ராடியா, பவார், சிதம்பரம், மாறன், ஷோரி, பிரமோத் மகாஜன் உள்ளிட்டு இந்த விவகாரத்தில் நேரடித் தொடர்புள்ள பலரும் விலக்கப்பட்டு, அலைக்கற்றை ஊழலின் இலக்கு திட்டமிட்டே குறுக்கப்பட்டது. தி.மு.க.-ராஜா-கனிமொழி என்று இந்த இலக்கை குறுக்கியதன் மூலம் கார்ப்பரேட் ஊடகங்கள், சுப்பிரமணிய சாமி-சோ-ஜெயலலிதா உள்ளிட்ட பார்ப்பனக் கும்பல், பாரதிய ஜனதா, காங்கிரசு கட்சிகள் என ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் நோக்கத்தில் ஆதாயம் பெற்றனர். இந்த மாபெரும் கொள்ளையின் முழுப்பரிமாணமும் வெளிவருவதை யாரும் விரும்பவில்லை என்பதனாலும், இதில் தி.மு.க.-வை மட்டும் தனிமைப்படுத்திக் காவு கொடுப்பதில் இவர்கள் யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லை என்பதனாலும் இந்த நாடகம் இதுவரை இடையூறின்றித் தொடர்ந்துள்ளது.

இப்போது சி.பி.ஐ. தாக்கல் செய்துள்ள முதல் குற்றப் பத்திரிகையில் குற்றச்சாட்டு பதிவு செய்யும் நிலையில் (Framing of charges) தன் மீது பல்வேறு கிரிமினல் குற்றப் பிரிவுகளின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை மறுத்துத் தனது வாதங்களை ராஜா முன்வைத்திருக்கிறார். குற்றத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்கு அவர் முன்வைத்துள்ள இந்த வாதங்கள் எந்த அளவிற்கு அவருக்குப் பயன்படும் என்பது குற்றவியல் வழக்கு விசாரணை சார்ந்த விசயம். ஆனால், இப்பிரச்சினையில் இதுகாறும் இருட்டடிப்பு செய்யப்பட்ட பல உண்மைகளை வெளிக்கொணர்வதற்கும் இந்தப் பகற்கொள்ளையின் அரசியல் பின்புலத்தை அம்பலமாக்குவதற்கும் அவரது வாதங்கள் நமக்குப் பயன்படுகின்றன.

“1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு என்ற கணக்குத் தணிக்கையாளரின் மதிப்பீடு அபத்தமானது, அடிப்படையற்றது. சி.பி.ஐ.-யின் கணக்கின்படியே இழப்பு என்பது 30,984.55 கோடி தான்” என்கிறார் ராசா. உண்மைதான்.

அலைக்கற்றை ஊழலில் தி.மு.க.வைத் தனிமைப்படுத்திக் காவு கொடுக்கும் அரசியல் சதிராட்டத்தின் விளைவாகக் கைது செய்யப்பட்டுள்ள ஆ.ராசா (இடது) மற்றும் கனிமொழி.





படிப்பகம்

www.padippakam.com

ஆனால், 1.76 இலட்சம் கோடி ஊழல் என்று கூக்குரலிட்ட சு.சாமி, ஜெயா, பா.ஜ.க. முதல் ஊடகங்கள் வரை யாரும், ''இழப்புத் தொகையை சி.பி.ஐ. குறைத்துக் காட்டியுள்ளது ஏன்?'' என்ற கேள்வியை எழுப்பவில்லை.

> டெண்டர் விடாமல் முதலில் வந்தவர்க்கு முதலில் என்ற அடிப்படையில் அலைக்கற்றை உரிமங்களை வழங்கியது குற்றம் என்றால், மாறனும் அருண் ஷோரியும் ராசாவுடன் சிறையில் இருக்க வேண்டும்.

''இழப்பு இத்தனை கோடி ரூபாய் என்று மதிப்பிடுவதற்கு சி.பி.ஐ. யார்? அது அரசாங்கத்தின் வேலை. இழப்பு எவ்வளவு என்பதை அரசு சொல்லட்டும்'' என்பது ராசாவின் அடுத்த வாதம்.

அரசு என்ன சொல்கிறது? முதலில் வருபவர்க்கு முதலில் என்பதுதான் அலைக்கற்றை உரிமங்கள் வழங்குவதற்குப் பின்பற்றப்பட்ட கொள்கை என்றும், அந்தக் கொள்கையை மாற்றி டெண்டர் விட வேண்டும் என்று அரசு முடிவு செய்யாதபோது, டெண்டர் விட்டிருந்தால் இவ்வளவு கிடைத்திருக்கும் என்று ஊகித்து, அதன் அடிப்படையில் இத்தனை கோடி ரூபாய் இழந்து விட்டோம் என்று பேசுவது அபத்தம் என்றும் கபில் சிபல் ஏற்கெனவே கூறியிருக்கிறார். இதை மன்மோகன் சிங் நாடாளுமன்றத்திலேயே கூறியிருக்கும் போது, என் மீது எதற்காகக் குற்றம் சாட்டுகிறீர்கள் என்பதே ராசாவின் கேள்வி. ராசா நீதிமன்றத்தில் இந்த வாதத்தை வைத்த அன்றைக்கு இரவு என்.டி.டிவி-க்கு அளித்த பேட்டியில் கூட, ''இழப்பு இல்லை'' என்ற கருத்தையே கபில் சிபல் வலியுறுத்தினார். அதாவது, சி.பி.ஐ. யின் குற்றச்சாட்டை ராசா மட்டும் மறுக்கவில்லை, இந்த அரசே அதனை மறுக்கிறது என்பதுதான் வேடிக்கை!

''டெண்டர் விடாமல் முதலில் வந்தவர்க்கு முதலில் என்ற அடிப்படையில் அலைக்கற்றை உரிமங்களை வழங்கியது குற்றம் என்றால், மாறனும் அருண் ஷோரியும் என்னுடன் சிறையில் இருக்க வேண்டும்'' என்பது ராசாவின் அடுத்த வாதம்.

''2001-இல் தீர்மானிக்கப்பட்ட விலையில்தான் அலைக்கற்றை வழங்கப்படவேண்டும் என்பதில் தொலைதொடர்புத்துறை அமைச்சகம் உறுதியாக இருந்தது. நிதி அமைச்சகம் டெண்டர் விடவேண்டும் என்று கூறியது'' என்று கூறினார் சிதம்பரம் (பிசினெஸ் லைன், ஜூலை 26, 2011). இரு அமைச்சகங்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு நிலவும்போது கொள்கை மாற்றம் குறித்து முடிவு செய்ய வேண்டியவர் பிரதமர். இப்பிரச்சினையை அமைச்சர்கள் குழுவுக்கு அனுப்பி முடிவு செய்யாததுதான் குற்றம் என்றால், அந்தச் சதிக் குற்றத்துக்குப் பதிலளிக்க வேண்டியவர் பிரதமர். அமைச்சர்கள் குழுவைக் கூட்டும் அதிகாரம் அவருடையதுதான் என்பதே ராசா முன்வைக்கும் வாதத்தின் சாரம்.

அலைக்கற்றை விவகாரத்தில் பிரதமருக்குத் தெரியாமலும் பிரதமரை ஏமாற்றியும் ராசா பயங்கரமான ஊழலைச் செய்துவிட்டதைப் போன்ற ஒரு பொய்த் தோற்றத்தை சு.சாமி, ஜெயலலிதா, சோ மற்றும் பார்ப்பன ஊடகங்கள் அடங்கிய கூட்டணி துவக்க முதலே உருவாக்கியிருக்கிறது. இது ஒரு இமாலயப் பொய் என்ற போதிலும், மன்மோகன் சிங் என்ற நபருடைய பிம்பம் நொறுங்கினால், அது தனியார்மய- தாராளமயக் கொள்கைகளின் மீதே விழுந்த கறையாகிவிடும் என்பதனாலும், மன்மோகன் அமெரிக்காவின் பங்காளா நாய் என்பதனாலும், ஊடகங்கள், ஓட்டுக்கட்சிகள் உள்ளிட்ட அனைவரும் மன்மோகன் சிங்கின் இந்தப் புனித வேடத்தை சேதமின்றிப் பாதுகாக்கின்றனர்.

அலைக்கற்றை ஊழலில் நேரடித் தொடர்பிருந்தும் உத்தமர்களாக வலம் வரும் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் (வலது).



ஆனால், விசயங்களுக்குள் ஆழமாகச் செல்லாமல் மேம்புல் மேய்பவர்களை மட்டுமே இவ்வாறு ஏமாற்ற இயலும். இந்த ஊழல் விவகாரத்தில் ராசா கைது செய்யப்படுவதற்கு முதல்நாள், ராசாவிற்கும் மன்மோகனுக்கும் இடையிலான கடிதப் பரிவர்த்தனை இந்து நாளேட்டில் ஒரு முழுப்பக்க அளவிற்கு வெளியானது. அரசாங்க இரகசியம் என்று கருதப்படும் இக்கடிதங்களை ராசாதான் கொடுத்து வெளியிடச் செய்திருக்க வேண்டும். மன்மோகன் சிங் இருட்டிலிருந்தார் என்ற கூற்றை அக்கடிதங்கள் பொய்ப்பிக்கின்றன. அதன் பின்னர் பொதுக்கணக்குக் குழுவின் தலைவர் முரளி மனோகர் ஜோஷி வெளியிட்ட அறிக்கை இப்பிரச்சினையில் மன்மோகன் சிங்கிற்கு உள்ள தொடர்பை



படிப்பகம்

www.padippakam.com

வெளிக்கொணர்ந்ததுடன், மன்மோகன் சிங்கின் நாடாளு மன்ற உரைகளிலிருந்தே அவரது தொடர்பை நிரூபித்துக் காட்டியது. ஜோஷியின் அறிக்கைக்கு எதிராக காங்கிரசு கலகம் செய்வதற்கும் இதுவே காரணமாக அமைந்தது.

யூனிடெக், ஸ்வான் ஆகிய நிறுவனங்கள் குறைந்த விலையில் அலைக்கற்றையை வாங்கின. அதன் பின்னர் தமது நிறுவனப் பங்குகளின் ஒரு பகுதியைப் பன்மடங்கு அதிக விலைக்கு அந்நிய முதலீட்டாளர்களுக்கு விற்றனர். இவ்வாறு அலைக்கற்றை உரிமத்தை வாங்கிய நிறுவனங்கள், தமது பங்குகளை உடனே அதிக விலைக்கு விற்றிருக்கின்றன. இவ்வாறு இவர்கள் ஈட்டிய தொகை மட்டும் 22,000 கோடி ரூபாய் என்கிறது சி.பி.ஐ. இவர்களது பங்குகளின் விலை திடீரென்று அதிகரித்ததற்குக் காரணம், இவர்கள் கைக்கு வந்திருந்த அலைக்கற்றை உரிமங்கள் தான் என்பதால், மேற்கூறிய 22,000 கோடியும் அலைக்கற்றை விற்பனையின் மூலம் அரசுக்குக் கிடைத்திருக்க வேண்டிய தொகை என்பது சி.பி.ஐ.- இன் குற்றச்சாட்டு.

''இந்தியாவில் போடப்படும் எல்லா வெளிநாட்டு முதலீடுகளும் அந்நிய முதலீட்டு ஊக்குவிப்புக் குழுமத்தின் ஒப்புதலைப் பெறுகின்றன எனும்போது, அமைச்சரவை இந்த முதலீடுகளையெல்லாம் அங்கீகரித்திருக்கும்போது, இதில் நான் எந்த சட்டத்தை மீறியிருக்கிறேன்? இவற்றுக்கு பிரதமரின் முன்னிலையில் நிதி அமைச்சர் ஒப்புதல் அளித்திருக்கிறார். பிரதமரை மறுக்கச் சொல்லுங்கள் பார்ப்போம்'' என்று கூறியிருக்கிறார் ராசா.

''ஆ, பிரதமரையே இழுக்கிறார்!'' என்று சில ஊடகங்கள் குதிக்கின்றன. உண்மையை சொன்னால், இவ் விசயம் குறித்து மன்மோகன் சிங் ஏற்கெனவே தனது கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அவரைப் பொருத்தவரை ஒரு நிறுவனம் தன்னிடம் உள்ள பங்குகளை விற்பதும், தனது பங்குகளின் எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்ளுவதும் (dilution of equity) நியாயமான வணிக நடவடிக்கைகள். ஸ்வான், யூனிடெக் விவகாரங்களில் நடந்திருப்பதும் அதுதான் என்பதே அவரது கருத்து. ''விற்கப்பட்டவை பங்குகள்தானே தவிர, அலைக்கற்றைகளை அவர்கள் யாருக்கும் விற்கவில்லை. எனவே, அந்தப் பரிவர்த்தனைகள் சட்டபூர்வமானவையே'' (ஜூலை 26, பிசினெஸ் லைன்) என்று ராசாவின் கூற்றை மீண்டும் ஒரு முறை வழிமொழிந்திருக்கிறார் சிதம்பரம். ''அலைக் கற்றை உரிமத்தை அரசிடம் விலைக்கு வாங்கும் நிறுவனங்கள் அடுத்த 5 ஆண்டு காலத்துக்கு அந்த உரிமத்தை வேறொருவருக்கு விற்கக்கூடாது என்ற விதியை ரத்து செய்து, வாங்கிய மறுகணமே விற்கலாம் என்று 2003-ஆம் ஆண்டில் பாரதிய ஜனதா அரசு அனுமதி வழங்கி விட்டது'' என்று குட்டை உடைத்திருக்கிறார் கபில் சிபல் (ஜூலை- 27, தி இந்து). இதன்படி பார்த்தால், அவர்கள் அலைக்கற்றையையே கைமாற்றி அந்நிய முதலீட்டாளர்களுக்கு விற்றிருந்தாலும் அது குற்றமில்லை என்றாகிறது.

மொத்த இழப்பான ரூ.30,984 கோடியில் அலைக் கற்றையை மலிவு விலைக்கு வாங்கி கூடுதல் விலைக்கு விற்ற குற்றநடவடிக்கையில் ஏற்பட்ட மொத்த இழப்பு மட்டும் ரூ.22,000 கோடி என்பது சி.பி.ஐ.- இன் குற்றச் சாட்டு. டாடா டெலி சர்வீசஸ் நிறுவனம் தனது 27% பங்குகளை விற்று ரூ.13,973 கோடி ஈட்டியிருக்கிறது. 67% பங்குகளை விற்று ரூ.6120 கோடி ஈட்டிய யூனிடெக் நிறுவனத்தின் முதலாளி சஞ்சய் சந்திரா சிறையில் இருக்கிறார். ஆனால், ரூ.13,973 கோடியைச் சுருட்டிய டாடா மீது கை வைக்க சி.பி.ஐ.- க்குத் துணிவிருக்கிறதா என்று நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பியிருக்கிறார் ராசா.

ராசா நீதிமன்றத்தில் கிளறாத இரகசியங்களும் எழுப்பாத கேள்விகளும் இவ்வழக்கில் நூற்றுக்கணக்கில் புதைந்து கிடக்கின்றன. இந்தக் கொள்ளையில் பங்கு பெற்றிருக்கும் பெரும் தரகு முதலாளிகள் யாரையும் சி.பி.ஐ. இதுவரை நெருங்கவே இல்லை. ஒரு உரிமத்தை வைத்துக் கொண்டு, ஜி.எஸ்.எம். மற்றும் சி.டி.எம்.ஏ. ஆகிய இரு தொழில்நுட்பங்களைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தியதன் காரணமாக 8448.95 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக சி.பி.ஐ இன் குற்றப்பத்திரிகை கூறுகிறது. இதில் ரூ.4930 கோடியை டாடா டெலிசர்வீசஸ் சுருட்டியிருக்கிறது. ஆனால், டாடாவின் மீது குற்றப்பத் திரிகையும் இல்லை, கைதும் இல்லை.

டாடா மட்டுமல்ல, ஐடியா செல்லுலார் (ஆதித்ய பிர்லா குழுமம்), ஏர்டெல் (சுனில் பாரதி மிட்டல்), டேடாகாம் சொல்யூஷன்ஸ் (ராஜ் குமார்தூத், ராஜ்யசபா எம்.பி, வீடியோகான் முதலாளி), ஏர்செல், எஸ் டெல், வோடஃபோன் (எஸ்ஸார், ரூயா) ஆகிய அனைவரும் வெவ்வேறு விதங்களில் அலைக் கற்றை கொள்ளையில் பங்கு பெற்றிருக் கின்றனர்.

ஸ்வான் டெலிகாம் என்ற நிறுவனத்தை தனக்குப் பினாமியாக அனில் அம்பானி பயன்படுத்தியதைப் போலவே, லூப் டெலிகாம் என்ற நிறுவனத்தை எஸ்ஸார் பினாமியாகப் பயன்படுத்தியிருக் கிறது. இந்த விவரங்களை மறைப்பதற்கு அமைச்சர் முரளி தியோரா உதவியிருப் பதும் அம்பலமாகியிருக்கிறது. அதே

அலைக்கற்றை கொள்ளையின் மூலம் பெரும் இலாபமடைந்த ரத்தன் டாடா (இடது), அனில் அம்பானி உள்ளிட்ட பல முதலாளிகளின் பெயர்கள் குற்றப்பத்திரிக்கையில்கூட இடம் பெறவில்லை.





படிப்பகம்

www.padippakam.com

போல, மொரீசியஸில் போடப்பட்டுள்ள முதலீட்டாளர்கள் பற்றி சி.பி.ஐ. விசாரிப்பதை அறிந்த ரூயா குழுமத்தை சேர்ந்த பிரசாந்த் ரூயா, ஐ.பி.கேய்தான் ஆகிய தரகு முதலாளிகள், சி.பி.ஐ. விசாரணை குறித்த விவரங்களைத் தருமாறு மொரீசியஸில் உள்ள இந்திய ஹை கமிசனர் மதுசூதன் கணபதியிடம் பேரம் பேசியிருக்கின்றனர். இது குறித்து எழுத்துபூர்வமான புகாரை அவர் அரசுக்கு கொடுத்த பின்னரும், இவர்கள் மீது சி.பி.ஐ. எவ்வித வழக்கும் பதிவு செய்யவில்லை.

**“கலைஞர் தொலைக்காட்சியின் 25% பங்குதாரர், அதன் நிர்வாகத்தில் பங்காற்றியவர் என்ற காரணங்களால் இந்தச் சதி வழக்கில் கனிமொழியை சி.பி.ஐ. கைது செய்திருக்கிறது. இந்த அளவுகோல் அனில் அம்பானி விசயத்தில் பின்பற்றப்படவில்லை.”**

இது மட்டுமல்ல; கலைஞர் தொலைக்காட்சியின் 25% பங்குதாரர், அதன் நிர்வாகத்தில் பங்காற்றியவர் என்ற காரணத்தினால் இந்த சதி வழக்கில் கனிமொழியை சி.பி.ஐ. கைது செய்திருக்கிறது. இந்த அளவுகோல் அனில் அம்பானி விசயத்தில் பின்பற்றப்படவில்லை. ஸ்வான் டெலிகாம் என்ற பினாமி நிறுவனத்தின் பெயரில் அலைக்கற்றை உரிமங்களைப் பெற்றதற்காக அனில் அம்பானி குரூப்பின் அதிகாரிகள்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், ரூ.1000 கோடி மதிப்புள்ள அனில் அம்பானி நிறுவனத்தின் பங்குகள் ஸ்வான் டெலிகாமுக்கு மாற்றப்பட்டுள்ளன. ரூ.10 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட மதிப்புள்ள தொகை எதையும் அனில் அம்பானி அல்லது அவரது மனைவியின் ஒப்புதலின்றி கொடுக்கக் கூடாது என்பது வங்கிகளுக்கு அம்பானி நிறுவனம் கொடுத்திருக்கும் வழிகாட்டுதல். ஸ்வான் டெலிகாமின் 50% பங்குகளை உரிமையாக வைத்திருக்கும் அனில் அம்பானியும் அவரது மனைவியும்தான், இந்த மோசடியின் முழுப் பயனையும் அடைந்திருக்கின்றனர். இருப்பினும், அம்பானி நிறுவனத்தின் அதிகாரிகள்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்களேயன்றி, அனில் அம்பானியை சி.பி.ஐ கைது செய்யவில்லை.

அதேபோல, கலைஞர் டிவிக்கு ரூ.200 கோடி ரூபாய் கொடுத்த டி.பி.ரியால்டீஸ் நிறுவனத்தின் முதலாளி ஷாகித் பல்வா கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆனால், ராசாத்தி அம்மாளின் பினாமிக்கு 250 கோடி ரூபாய் நிலத்தை 25 கோடி ரூபாய்க்கு டாடா நிறுவனம் கொடுத்ததற்கு ஆதாரம் இருந்தும், அமைச்சர் ராசாவைப் பாராட்டி டாடாதன் கைப்பட கலைஞருக்கு எழுதிய கடிதமே ஒரு ஆதாரமாக இருந்தும், பெரம்பலூர் மருத்துவமனைக்கு டாடா அறக்கட்டளையிலிருந்து ரூ.20 கோடி ரூபாய் ஒதுக்குவது தொடர்பான உரையாடல்கள் ஆதாரமாக இருந்தும் டாடா கைது செய்யப்படவில்லை.

“டி.பி ரியால்டீஸ் நிறுவனம் சரத் பவார் குடும்பத்துக்கு சொந்தமானது என்பது மும்பையில் ஊரறிந்த இரகசியம்” என்று கூறினார் நீரா ராடியா. புனேவைச் சேர்ந்த பர்ஹாதே என்பவர் சரத்பவாரின் மகள் சுப்ரியா சுலேவுக்கு டி.பி.ரியால்டிஸ் நிறுவனத்தில் உள்ள தொடர்புகளை, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெற்று 2005-ஆம் ஆண்டிலேயே வெளியிட்டிருக்கிறார்.

ராசாவும் தொடர்ந்து கனிமொழியும் கைது செய்யப்பட்டவுடனேயே, அத்வானியை சந்தித்த பவார், தனது அரசியல் நண்பர்களான மம்தா, சவுதாலா, முலாயம், ஜெயலலிதா ஆகியோரின் ஆதரவுடன் மாற்று ஆட்சியை அமைக்கும் வாய்ப்பைப் பற்றியும், அதற்கு பாரதிய ஜனதாவின் ஆதரவை வெளியிலிருந்து பெறுவதற்கான வாய்ப்பைப் பற்றியும் ஆலோசித்தார் என்று கடந்த மே மாதத்தில் இந்தியா டுடே செய்தி வெளியிட்டது. எத்தனை தரவுகள் இருந்தாலென்ன, கருணாநிதியைப் போல பவாரை மிரட்டிப் பணியவைக்க இயலாது என்பது காங்கிரசுக்குத் தெரியாததல்ல. டில்லி ஆட்சியாளர்களின் வளர்ப்பு நாய்தான் சி.பி.ஐ. என்பதும் பவாருக்குத் தெரியாததல்ல.

குற்றவாளிக் கூண்டில் நிற்கும் ராசா, தன்னை நிரபராதி என்று நிரூபித்துக் கொள்ளும் முயற்சியில் அமைச்சர்கள், அதிகாரிகள், கார்ப்பரேட் முதலாளிகள் ஆகியோர் மீது தவிர்க்கவியலாமல் குற்றம் சுமத்துகிறார். அவரது வாதங்கள் இந்த கிரிமினல் வழக்கு தொடர்பான வாதங்களாக மட்டும் இல்லாமல், இந்தக் கிரிமினல் அரசமைப்பு முழுவதையும் குறித்த ஒரு சித்திரத்தை நமக்கு வழங்குகின்றன. “டாடாவை ஏன் கைது செய்யவில்லை?” என்று அவர் எழுப்பியிருக்கும் கேள்வி ஊடகங்களின் தலைப்புச் செய்திக்குரிய தகுதியுள்ள கேள்வி என்ற போதிலும், அது பின்னுக்குத் தள்ளப்படுகிறது. கட்சிகளையும், அதிகார வர்க்கத்தையும், தனியார்மயக் கொள்கைகளையும், கார்ப்பரேட் நிறுவனங்களையும் ராசாவின் வாதங்கள் ஒரு எல்லைக்கு மேல் அம்பலப்படுத்துமாயின், அவை ஊடகங்களால் ஒதுக்கி ஓரங்கட்டப்படும்; அல்லது இருட்டடிப்பு செய்யப்படும்.

தனியார்மயம்-தாராளமயம் என்ற பெயரில் சுரங்கங்கள், காடுகள், நிலங்கள், நகர்ப்புற மனைகள், துறைமுகங்கள் ஆகிய எல்லாத் துறைகளிலும் சட்டபூர்வமாகவும், சட்டவிரோதமாகவும் நடந்து கொண்டிருக்கிறது கார்ப்பரேட் பகற்கொள்ளை. தொலைபேசித் துறையில் நடைபெற்ற ஒரு கொள்ளை மட்டும், சீப்பில் சிக்கிய முடியைப் போல சிக்கிக் கொண்டிருக்கிறது. ஊழல், ஊழல் என்று அரசியல் பரபரப்புக்கு மட்டும் அதைப் பற்றிப் பேசிவிட்டு, அதன் பின்புலத்தை சாத்தியமான அளவுக்கு மூடி மறைக்கவே முயற்சிக்கின்றன ஆளும் வர்க்கங்கள். அந்த முயற்சியை முறியடிப்பதே நமது பணியாக இருக்க வேண்டும்.

• அஜித்



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா வல்லரசாகவில்லை, அமெரிக்காவின் அடியாளாகிறது!

## ஹிலாரி கிளிண்டனின் வருகையின்பொழுது நடந்த இந்திய–அமெரிக்க போர்த்தந்திர பேச்சுவார்த்தை உறுதிப்படுத்தும் உண்மைகள்.

மானஈனமற்ற அமெரிக்க அடிமைத்தனத்திற்குப் புதிய இலக்கணம் படைத்து வருகிறது, மன்மோகன் சிங் அரசு. மறுகாலனியாக்கக் கொள்கைகளை விசுவாசமாகவும் வெறியோடும் நடைமுறைப்படுத்தி வருவதோடு, அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்த்தந்திரத் திட்டத்தில் இந்தியாவை இறுகப் பிணைக்கும் நடவடிக்கைகளில் அப்பட்டமாக ஈடுபட்டு, இந்தியாவை அமெரிக்காவின் விசுவாச அடியாளாக வளர்த்தெடுப்பதிலும் புதிய 'சாதனை'யைப் படைத்து வருகிறது.

அமெரிக்க அதிபர் ஒபாமா கடந்த ஆண்டு நவம்பரில் இந்தியாவுக்கு வந்து இந்திய-அமெரிக்க போர்த் தந்திர முக்கியத்துவமிக்க பேச்சுவார்த்தையைத் தொடங்கி வைத்தார். இப்போது அதன் தொடர்ச்சியாக, ஆண்டுக் கூட்டப் பேச்சுவார்த்தைகளுக்காக அமெரிக்க உயரதிகாரிகளுடன் கடந்த ஜூலை 19-ஆம் தேதி டெல்லிக்கு வந்தார், அமெரிக்க வெளியுறவுச் செயலாளரான ஹிலாரி கிளிண்டன். அவரது வருகையையொட்டி, கோடிக்கணக்கான சிறு வியாபாரிகளின்-உதிரித் தொழிலாளர்களின் வாழ்வைப் பறிக்கும் வகையில், சில்லறை வணிகத்தில் 51 சதவீதம் அந்நிய நிறுவனங்களை அனுமதிக்கலாம் என்று மைய அரசின் செயலர் குழு பரிந்துரைத்துள்ளது. இது தவிர வங்கி, காப்பீடு ஆகியவற்றிலும் பன்னாட்டு மூலதனத்தை அனுமதிக்கவும், இறக்குமதி தீர்வையைக் குறைத்து சந்தையைத் திறந்து விட்டு இருதரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், அரசுச் செயலர்கள், அதிகாரிகள் மட்டத்தில் நடந்த இந்தப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின்னர், அமெரிக்காவும் இந்தியாவும் விடுத்துள்ள கூட்டறிக்கையில், அமெரிக்காவின் உலகு தழுவிய போர்த் தந்திரத் திட்டத்தின் ஓர் அங்கமாக இந்தியா மாறியுள்ளதை உறுதி செய்துள்ளதோடு, இக்கூட்டணியை விரிவாகவும் ஆழமாகவும் முன்னெடுத்துச் செல்ல கடமைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆப்கான் விவகாரத்தில் பரஸ்பரம் இரு நாடுகளும் ஆலோசனை நடத்துவது, ஒத்துழைப்பது, உளவுத்துறை தகவல்களைப் பரிமாறிக் கொள்வது, ஒருங்கிணைந்து செயல்படுவது என்பதை இப்பேச்சுவார்த்தைகள் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளன. இரானின் எல்லையையொட்டி அமைந்திருப்பதாலும் மத்திய ஆசியப் பகுதியில் கிடைக்கும் எண்ணெய் வளத்தை அரபிக்கடல் பகுதிக்கு எடுத்துச் செல்வதற்கான தரைவழியாகவும் இருப்பதால் ஆப்கானைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே அமெரிக்கா விரும்புகிறது. ஒபாமா அறிவித்துள்ள படைவிலக்கம் பெயரளவில் நடக்கும் அதேசமயம், ஆப்கானில் தனது அடியாளான இந்தியப் படைகளை அதிகரித்துக் கொண்டு மேலாதிக்கம் செய்யவே அமெரிக்கா விரும்புகிறது. அதற்காகவே மத்திய ஆசியா குறித்த இருதரப்பு பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

இது மட்டுமின்றி, ஆப்பிரிக்காவிலும் உலகின் பிற பகுதிகளிலும் இரு நாடுகளும் இணைந்து செயல்பட முன்முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருதரப்பும் ஜூன் 2011-இல் மத்திய ஆசியா குறித்து டெல்லியிலும், ஜூலை 2011-இல் மேற்காசியா குறித்து வாஷிங்டனிலும், தென் அமெரிக்கக் கண்டத்து நாடுகள் மற்றும் கிழக்காசியா குறித்து செப்டம்பரிலும் பேச்சுவார்தைகள் நடத்தவுள்ளன. இனி ஆண்டுதோறும் இந்திய-அமெரிக்க போர்த்தந்திர முக்கியத்துவமிக்க பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்றும், அடுத்த பேச்சு



இந்தியாவை அமெரிக்காவின் அடியாளாக மாற்றும் இந்திய-அமெரிக்கப் போர்த்தந்திர பேச்சுவார்த்தை தொடர்பாக அமெரிக்க வெளியுறவுச் செயலர் ஹிலாரி கிளிண்டன் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து உரையாடுகிறார்.



படிப்பகம்

www.padippakam.com

வார்த்தைகள் வருமாண்டில் வாஷிங்டனில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் இந்திய இராணுவம், அமெரிக்காவின் அடியாளாக உலகெங்கும் போர்த் தாக்குதல் நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்திய அரசு உருவாக்கியுள்ள அணு விபத்து இழப்பீடு சட்டத்தை, அமெரிக்கவின் துணை இழப்பீடு உடன்படிக்கையின்படி (CSC) மாற்றியமைத்துக் கொள்ளுமாறும், இதற்காக சர்வதேச அணுசக்தி முகமையுடன் பேசி ஏற்பாடு செய்யுமாறும் இந்திய அரசை ஹிலாரி கேட்டுக் கொண்டுள்ளார். அணுஉலை விபத்து தொடர்பாக அமெரிக்கா உருவாக்கியுள்ள துணை இழப்பீடு உடன்படிக்கையானது, அணு விபத்து ஏற்பட்டால், அணுஉலைகளை விற்பனை செய்த முதலாளிகளை விபத்துக்குப் பொறுப்பாக்குவதில்லை. அதிகபட்சம் ரூ.2000 கோடிக்கு மேல் நட்டஈடு கோருவதையும் தடைசெய்கிறது. இந்தியச் சட்டம் வழங்கியுள்ள அற்ப பாதுகாப்பையும் ஒழித்துக்கட்டி, அமெரிக்கா உருவாக்கியுள்ள ஒப்பந்தத்தில் கையெழுத்திடுமாறு நிர்பந்திக்கவே ஹிலாரி இங்கு வந்துள்ளார். தீராத கடன் சுமையாலும் பொருளாதார நெருக்கடியாலும் அமெரிக்கா தத்தளிக்கும் நிலையில், காலாவதியான, பேரழிவை விளைவிக்கக் கூடிய அணுஉலைகளை வாங்கி, அமெரிக்க அணுசக்தி முதலாளிகளுக்குச் சேவை செய்ய காங்கிரசு அரசு துடிக்கிறது. ஜப்பானில் புகுஷிமா அணுஉலை விபத்து நடந்து பேரழிவு ஏற்பட்ட பின்னரும், தான் நிறைவேற்றியுள்ள சட்டத்தின் விதிகளை நாடாளுமன்றத்தில் இன்னமும் சமர்ப்பிக்காமல் மன்மோகன் அரசு இதற்காகவே இழுத்தடித்து வருகிறது.

இதுதவிர, உயர் கல்வித்துறையில் இரு நாடுகளும் பரஸ்பரம் கூட்டுறவு பெறும் வகையில் வரும் அக்டோபரில் உச்சி மாநாடு நடைபெறும் என்றும், பள்ளிக் கல்விக்கு அடுத்துள்ள உயர்கல்வி அனைத்திலும் இது மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது, அந்நிய பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை இந்தியாவில் தாராளமாக அனுமதித்து, அவை இலாபம் சம்பாதிக்கும் கூடாரங்களாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் வேகமாக நடக்கின்றன.

இவ்வாறு, அமெரிக்காவின் உலக மேலாதிக்கப் போர்த் தந்திரத் திட்டம் நிறைவேற்றப்படுவதை உறுதிப்படுத்தவும், தனது விசுவாச அடிமை நாடான இந்தியாவில் அதற்கான பணிகளை மேற்பார்வையிடவும்தான் அமெரிக்க வெளியுறவுச் செயலரான ஹிலாரி கிளிண்டன் இந்தியாவுக்கு வந்தார். இப்போர்த்தந்திர முக்கியத்துவமிக்க பேச்சுவார்த்தைகளின் ஓர் அங்கமாக சென்னையில் தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நிதிச் சந்தைக்கான மையமாக சென்னை-சோழிங்கநல்லூரில் உருவாக்கப்படும் புதிய நிதி நகரத்தின் ஏற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளவும், அப்படியே ஒரு சுற்றுலா போல சென்னையைப் பார்க்கவும்தான் அவர் வருகை தந்தார்.



''அமெரிக்க ஆண்டையை'' நடனமாடி மகிழ்வித்த சென்னை-கலாசேத்ரா மாணவர்களுக்குக் கிடைக்கும் பாராட்டு.

ஆனால், இந்த உண்மைகளை மூடிமறைத்துவிட்டு ஹிலாரி சென்னைக்கு வந்ததற்கு முக்கியத்துவம் இருப்பதாகவும், அவர் ஜெயலலிதாவைக் கோட்டையில் சந்தித்ததைப் பற்றியும், பின்னர் மாணவர்களுடன் உரையாடியதையும் அடிமை விசுவாசத்தோடு தமிழக கிசுகிசு பத்திரிகைகள் ஏற்றிப் போற்றிக் கொண்டிருக்கின்றன. இந்தியத் தரகுப் பெருமுதலாளிகள், உலகின் இதர ஏழை நாடுகளில் முக்கியத்துவமற்ற துறைகளில் தமது சந்தையை விரிவுபடுத்தி ஆதாயமடைய அமெரிக்காவின் போர்த்தந்திரத் திட்டம் சாதகமாக இருப்பதால், அமெரிக்க விசுவாசத்தோடு இதனை வரவேற்று ஆதரிக்கின்றனர். தரகுப் பெருமுதலாளிகளின் நலன் இங்கே தேசிய நலனாகச் சித்தரிக்கப்பட்டு நாடும் மக்களும் அமெரிக்க அடிமைகளாக்கப்படுகின்றனர். அப்பட்டமாகவும் மூர்க்கமாகவும் நடந்துவரும் இத்தாக்குதலை எதிர்த்துப் போராட எந்த ஓட்டுக்கட்சியும் முன்வரவில்லை.

அன்று, கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியை இந்தியாவில் நிலைநாட்டுவதற்கு வங்காளத்தின் தளபதி மீர்ஜாபர், ராபர்ட் கிளைவுக்கு விசுவாசமாச் சேவை செய்ததைப் போல, இன்று அமெரிக்காவின் மேலாதிக்கத்தை இந்தியாவில் திணிப்பதற்கு மன்மோகன்-சோனியா கும்பல் விசுவாச அடியாளாகி நிற்கிறது. நாட்டு விரோத, மக்கள் விரோத, அபாயகரமான இந்தத் துரோகக் கும்பலை வீழ்த்தாவிட்டால், அமெரிக்காவின் போர்த் தேரின் பின்னே இழுத்துச் செல்லப்பட்டு நாடே பேரழிவுக்குள் தள்ளப்பட்டுவிடும்.

● பாலன்



படிப்பகம்

www.padippakam.com

### நிலம் கையகப்படுத்தும் சட்டத் திருத்தம்:

# நரியைப் பரியாக்கும் காங்கிரசின் மோசடி!

**கார்ப்பரேட் நிறுவனங்களின் நலனை முன்னிறுத்தியே நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படுகிறது.**

தொழில் வளர்ச்சி என்ற பெயரில் தமது நிலங்கள் அபகரிக்கப்படுவதற்கு எதிராக நாட்டின் பல்வேறு பகுதிகளில் விவசாயிகளும், பழங்குடியின மக்களும் போராடி வரும் வேளையில், 1894-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறது, மைய அரசு. இச்சட்டத்தில் திருத்தங்கள் செய்வதோடு, நிலத்தை இழக்கும் விவசாயிகளை மீளக் குடியமர்த்தவும், அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான சட்டத்தையும் இம்மழைக்கால கூட்டத் தொடரிலேயே நாடாளுமன்றத்தில் கொண்டுவரப் போவதாகவும் மைய அரசு கூறியிருக்கிறது.

ஆங்கில ஏகாதிபத்திய எஜமானர்களால் 117 ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்டு, இன்று வரை நடைமுறையில் இருந்துவரும் இந்நிலக் கையகப்படுத்தும் சட்டம், விவசாயிகளிடமிருந்து வலுக்கட்டாயமாக நிலங்கள் அபகரிக்கப்படுவதைப் பொது நோக்கம் என்ற அடிப்படையில் நியாயப்படுத்துகிறது. மைய அரசு கொண்டுவரவுள்ள திருத்தங்கள் இப்'பொது நோக்கத்தை'க் கைகழுவவில்லை. கிராமப்புறங்களை மேம்படுத்துவது, பொதுத்துறை நிறுவனங்களை அமைப்பது, ஏழைகள் மற்றும் நிலமற்ற கூலி விவசாயிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுப்பது, அரசின் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவது முதலானவற்றுக்காக நிலங்களைக் கையகப்படுத்தலாம் என வரையறுக்கப்பட்டிருந்த இடத்தில், அவற்றுக்குப் பதிலாக, தந்திரோபாய நோக்கங்களுக்காகவும் (Strategic purpose), பொது மக்களின் பயன்பாட்டிற்கான அடிக்கட்டுமானத் திட்டங்களுக்காகவும் நிலங்களைக் கையகப்படுத்தலாம் என இரண்டு பூடகமான திருத்தங்களை முன்மொழிந்துள்ளது, காங்கிரசு கூட்டணி அரசு.

போஸ்கோ நிறுவனம் ஒரிசாவில் வனப்பகுதி நிலங்களைக் கையகப்படுத்த, வன உரிமைச் சட்டத்தை மீறி அனுமதி அளித்த சுற்றுப்புறச் சூழல் அமைச்சகம், தந்திரோபாய நோக்கங்களின் அடிப்படையில் இத்திட்டத்திற்கு அனுமதி அளித்ததாகக் கூறியது. உ.பி. மாநிலத்திலுள்ள நொய்டா பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விவசாயிகளிடமிருந்து கையகப்படுத்தி ரியல் எஸ்டேட் நிறுவனங்களிடம் ஒப்படைத்த அம்மாநில அரசு, மக்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டித் தருவதற்காகவே நிலங்களைக் கையகப்படுத்தியதாகக் கூறி, நில அபகரிப்பை நியாயப்படுத்தியது.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் பார்த்தால், கார்ப்பரேட் நிறுவனங்கள் நாடெங்கும் நடத்திவரும் சட்டவிரோத நில அபகரிப்புகளைச் சட்டபூர்வமாக்கிவிடும் நோக்கத்தோடுதான் இந்த இரண்டு திருத்தங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன என உறுதியாகச் சொல்லிவிடலாம். மேலும், மேட்டுக்குடி கும்பல் உல்லாசமாகப் பொழுதைக் கழித்துவிட்டுச் செல்வதற்காக உருவாக்கப்படும் பொழுதுபோக்கு பூங்காகள், ''மசாஜ் பார்லர்கள்'' களும், சுற்றுலா துறையும் இத்திருத்தத்தில் அடிக்கட்டுமானத் திட்டங்களாக வரையறுக்கப்பட்டிருப்பது அரசின் நோக்கத்தைப் பச்சையாகவே புட்டு வைக்கிறது.

உ.பி.மாநிலத்தின் நொய்டா பகுதியைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து விளைநிலத்தை வலுக்கட்டாயமாகக் கையகப்படுத்துவதற்கு எதிராக நடந்த போராட்டத்தின் மீது உ.பி. மாநில போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த விவசாயி (கோப்புப் படம்).





படிப்பகம்

www.padippakam.com



போஸ்கோ இரும்புச் சுரங்கத்தை அமைப்பதற்காக, ஒரிசாவின்-குஜங்கா வட்டாரத்தில் அழிக்கப்படும் வெற்றிலைத் தோட்டங்கள்.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்குத் தமது தொழில் திட்டங்களைச் செயற்படுத்த தேவைப்படும் மொத்த நிலப் பரப்பில் 30 சதவீதத்தை மட்டுமே அரசு கையகப்படுத்தித் தரும்; அதுவும்கூட, கார்ப்பரேட் நிறுவனங்கள் அம்மொத்த நிலப்பரப்பில் 70 சதவீதத்தைப் பொது மக்களிடமிருந்து வாங்கியிருக்க வேண்டும்; மேலும், அந்நிறுவனங்கள் கொண்டுவரும் திட்டம் பொது மக்களுக்கும் பயன்தரக் கூடியது என அரசு கருதினால் மட்டுமே, இந்த 30 சதவீத நிலப்பரப்பை அரசு பொது மக்களிடமிருந்து கையகப்படுத்தித் தரும் என்றொரு திருத்தத்தையும் மைய அரசு முன்மொழிந்துள்ளது. கார்ப்பரேட் நிறுவனங்கள் குறிவைக்கும் நிலங்கள் அனைத்தையும் தானே விவசாயிகளிடமிருந்து அபகரித்துக் கொடுத்து வந்த அரசு, இனி அந்தப் 'பொறுப்பை' கார்ப்பரேட் நிறுவனங்களோடு பகிர்ந்து கொள்வதற்கான ஏற்பாடுதான் இது.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விவசாயிகளிடமிருந்து நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுக்க இந்த நடைமுறையைதான் நரேந்திர மோடி குஜராத் மாநிலத்தில் பின்பற்றி வருகிறார். நொய்டா பகுதியைச் சேர்ந்த விவசாயிகளிடமிருந்து நிலங்களை அபகரிக்க துப்பாக்கிச் சூடு நடத்திய மாயாவதியும்கூட, இதே போன்ற ஒரு சட்ட திருத்தத்தைத் தனது மாநிலத்தில் கொண்டு வந்திருக்கிறார். இந்தத் திருத்தம் அரசு கார்ப்பரேட் நிறுவனங்களின் புரோக்கராகச் செயல்படவில்லை எனக் காட்டிக் கொள்ளுவதற்குப் பயன்படுமேயொழிய, விவசாயிகளுக்கு இதனால் எந்தப் பாதுகாப்பும் கிடைத்துவிடாது. இப்பொழுது அரசின் அதிகாரிகளாலும், போலீசாரலும் தமது நிலத்திலிருந்து விசிறியெறியப்படும் விவசாயிகள், இச்சட்டத் திருத்தத்தின் பின் கார்ப்பரேட் நிறுவனங்களின் குண்டர்படையால் துரத்தப்படும் மாற்றம்தான் நடக்கும்.

விவசாயிகளை ஆசை காட்டி மயக்கவே, ''கார்ப்பரேட் நிறுவனங்கள் விவசாயிகளிடமிருந்து நிலத்தைச் சந்தை விலைக்கு வாங்க வேண்டும்; நிலத்தை இழக்கும் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கார்ப்பரேட் நிறுவனங்கள் தமது திட்டத்தில் வேலைவாய்ப்பு அளிக்க முன்னுரிமை தர வேண்டும்; தமக்கு நிலத்தை விற்கும் விவசாயிகளைத் தமது திட்டத்தில் பங்குதாரராகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்; கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு நிலம் விற்கப்படுவதால், வேலையிழக்கும் விவசாயக் கூலிகள், கைவினைஞர்கள் ஆகியோருக்கும் நட்ட ஈடு வழங்க வேண்டும்'' என்றெல்லாம் பலவிதமான பொறிகள் இச்சட்டத் திருத்தத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன.

நிலத்தின் சந்தை விலை என்னவென்பதை விவசாயி தீர்மானிக்கப் போவதில்லை. இன்னொருபுறமோ, ரியல் எஸ்டேட் புரோக்கர்களால் தீர்மானிக்கப்படும் சந்தை விலைக்குத் தமது நிலத்தை விற்க மறுக்கும் உரிமையையும் விவசாயிகளிடமிருந்து தட்டிப் பறித்துவிடும்படி இச்சட்டத்தில் திருத்தங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. குறிப்பாக, கார்ப்பரேட் நிறுவனங்களின் திட்டத்திற்கு மிகவும் அவசரமாக நிலத்தைக் கையகப்படுத்துவது அவசியம் என அரசு கருதினால், திட்டம் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து அடுத்த 15 நாட்களுக்குள் நிலத்தைக் கையகப்படுத்தும் உரிமையை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அரசு அளிக்கும். இந்த அவசர நிலை உத்தரவுக்கு எதிரான விவசாயிகளின் கருத்துக்களை அரசு கேட்க வேண்டிய அவசியமில்லை எனத் திருத்தம் முன்மொழியப்பட்டுள்ளது.

கார்ப்பரேட் நிறுவனங்கள் விவசாயிகளிடமிருந்து 70 சதவீத நிலங்களைக் கையகப்படுத்துவதில் ஏதேனும் தடங்கல்கள், சிக்கல்கள் ஏற்பட்டால், அரசு, தான் ஏற்கெனவே கையகப்படுத்தி வைத்திருக்கும் நிலத்திலிருந்து 70 சதவீதத்தை அளித்துவிட்டு, மீதி 30 சதவீத நிலத்தை விவசாயிகளிடமிருந்து கையகப்படுத்திக் கொடுக்கவும் இச்சட்டத்திருத்தத்தில் கார்ப்பரேட் நிறுவனங்களுக்குச் சாதகமாகப் போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மைய அரசு கொண்டுவரவுள்ள மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்வுக்கான சட்டத்தின்படி, கார்ப்பரேட் நிறுவனங்கள் கொண்டுவரும் திட்டங்கள் பழங்குடியினப் பகுதிகளில் 200 - க்கும் மேற்பட்ட குடும்பங்களையும், சமவெளிப் பகுதிகளில் 400 - க்கும் மேற்பட்ட குடும்பங்களையும் பாதித்தால்தான், அவர்கள் இச்சட்டத்தின்படி நிவாரணம் கோர முடியும். 'வளர்ச்சி'த் திட்டங்களால் பாதிக்கப்படும் குடும்பங்களின் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டுவதன் மூலம் நிவாரண உதவிகள் வழங்கும் பொறுப்பிலிருந்து கார்ப்பரேட் நிறுவனங்களைத் தப்ப வைக்கும் ஏற்பாடுதான் இது.

● மனோகரன்



படிப்பகம்

www.padippakam.com

கார்ப்பரேட் நிறுவனங்களிடம் நிலத்தை விற்கும் விவசாயிகளின் மறுவாழ்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் அக்கார்ப்பரேட் நிறுவனம்தான் செய்து கொடுக்க வேண்டும். அரசு, இந்தப் பிரச்சினையில் தலையிடாது. கார்ப்பரேட் நிறுவனங்கள் இம்மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளைக் குறிப்பிட்ட கால இலக்கிற்குள் செய்து கொடுக்க வேண்டும் என்ற கட்டாயமும் கிடையாது; வேண்டுமென்றே இழுத்தடித்துத் தாமதமாக மறுவாழ்வு ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தால்கூட, திட்டத்தால் பாதிப்படைந்தவர்கள் கொடுப்பதை வாயை மூடிக் கொண்டு வாங்கிக்கொண்டு போக வேண்டுமேயொழிய, தாமதத்திற்காக நட்ட ஈடு கோர முடியாது.

இந்நிவாரணம் குறித்து எழும் பூசல்களை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது. அரசு நியமிக்கும் உயர் அதிகார வர்க்க கமிட்டிதான் இப்பூசல்களைத் தீர்த்து வைக்கும். இதேபோல, கார்ப்பரேட் நிறுவனங்கள் கொண்டுவரும் திட்டங்கள் பொது மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடியதா, இல்லையா என்பதையும் அதிகாரிகள்தான் தீர்மானிப்பார்கள்.

1947 தொடங்கி 2004 முடிய, அரசு தனியாகவோ அல்லது தனியாருடன் கூட்டுச் சேர்ந்தோ நடைமுறைப்படுத்திய 'வளர்ச்சி'த் திட்டங்களுக்காக ஏறக்குறைய 2.5 கோடி ஹெக்டேர் நிலம் விவசாயிகளிடமிருந்து கையகப்படுத்தப்பட்டு, 6 கோடிக்கும் மேற்பட்ட ஏழை மக்கள் தமது வாழ்விடங்களிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த 'வளர்ச்சி'த் திட்டங்களால் பாதிக்கப்பட்டுள்ள இந்த 6 கோடி பேரில், 40 சதவீதம் பேர் பழங்குடியின மக்கள்; 20 சதவீதம் பேர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள். இந்த 6 கோடி பேரில் வெறும் 18 சதவீதம் பேருக்குதான் பெயரளவுக்கு நிவாரண உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 5 கோடி பேர் உள்நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டுள்ளனர். மைய அரசு கொண்டு வரவுள்ள புதிய மறுவாழ்வுச் சட்டம் இந்த அகதிகளைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

நிலம் கையகப்படுத்தும் சட்டம் விவசாயிகளை நசுக்கும் இயந்திரமாக உள்ளது என்பது இப்பொழுது தெள்ளத்தெளிவாக அம்பலமாகிவிட்டது. எனவே, நரியைப் பரியாக்கிக் காட்ட வேண்டிய கட்டாயத்தில்தான் காங்கிரசு கும்பல் இச்சட்டத்தில் திருத்தங்களைச் செய்ய முன்வந்திருக்கிறது. மேலும், நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு எதிராக விவசாயிகள் நடத்திவரும் போராட்டங்களால் 5 இலட்சம் கோடி ரூபாய் பெறுமானமுள்ள பல திட்டங்களை அரசாலும் கார்ப்பரேட் நிறு

# "டாஸ்மாக் கடைக்கு இடமுண்டு; ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு இடம் கிடையாது!"

## – தமிழக அரசின் மோசடியை அம்பலப்படுத்தி வி.வி.மு.–வின் ஆர்ப்பாட்டம்

**வி**ழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வட்டாரத்தில் விவசாயிகள் நெல், கரும்பு, மணிலா, பயறு வகைகளைப் பயிரிட்டு வந்த போதிலும், முறையான ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இல்லாததால், அரகண்ட நல்லூருக்கும் விழுப்புரத்துக்கும் உளுந்தூர்பேட்டைக்கும் டிராக்டரில் உற்பத்திப் பொருட்களை எடுத்துக் கொண்டு அலைவது, அல்லது தரகர்களிடம் சிக்கி அற்ப விலைக்கு விற்பது என்கிற அவலம் நீண்ட காலமாக நீடித்து வருகிறது. திருவெண்ணெய் நல்லூரில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்ற பெயரில் ஒரு மாட்டுத் தொழுவத்தை வைத்துக் கொண்டு அதிகாரிகள் ஒப்பேத்துகின்றனர். 30 கிராம விவசாயிகள் இப்பகுதியில் முறையான கொள்முதல் நிலையம் வேண்டுமென கோரிய போதிலும், அரசு தொடர்ந்து அலட்சியப்படுத்தியே வருகிறது.



ஊர்தோறும் உழைக்கும் மக்களின் தாலியை அறுக்க டாஸ்மாக் கடைக்கு வசதியான இடத்தைத் தேடிக் கொடுக்கும் அதிகார வர்க்கம், இங்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்ட இடமில்லை என்று ஏய்த்து வருகிறது. இந்த மோசடியை அம்பலப்படுத்தியும், புதிதாக அரசு கொள்முதல் நிலையம் அமைத்துத் தரக் கோரியும் இப்பகுதியில் இயங்கிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணி, கடந்த ஜூன் மாதத்தில் சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டதும், அதிகாரிகள் ஜூன் 16-ஆம் தேதியன்று பெண்ணையாற்றின் புறம்போக்குப் பகுதியில் கொள்முதல் நிலையம் அமைக்க, அந்த இடத்தைப் பார்வையிட்டுச் சென்றனர். ஆனால், இந்த இடம் வனத்துறைக்குச் சொந்தமானது என்றும் அங்கு மரங்கள் வளர்க்கப் போவதாகவும் கூறி, அத்துறையின் அதிகாரிகள் இதற்கு அனுமதி தர மறுத்துள்ளனர்.

கொள்முதல் நிலையம் அமைப்பதைத் தட்டிக் கழிக்க அதிகார வர்க்கம் நடத்தும் இந்த மோசடித்தனத்தை அம்பலப்படுத்தி இவ்வட்டாரமெங்கும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட வி.வி.மு, அதன் தொடர்ச்சியாக விவசாயிகளை அணிதிரட்டி 21.7.2011 அன்று திருவெண்ணெய்நல்லூர் கடைவீதியில் ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. தொழில் வளர்ச்சி என்ற பெயரில் அந்நிய, தனியார் முதலாளிகளுக்கு உடனடியாக நிலங்களை ஒதுக்கித்தரும் அரசு, விவசாயிகளைத் தொடர்ந்து வஞ்சிப்பதை அம்பலப்படுத்தி நடந்த இந்த ஆர்ப்பாட்டமும், கடந்த ஜூலை மாதத்தில் எண்டோசல்பானுக்கு எதிராக கிராமங்களில் இவ்வமைப்பினர் நடத்திய தொடர் பிரச்சாரமும் இப்பகுதிவாழ் விவசாயிகளிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தன.

–பு.ஜ. செய்தியாளர்,
திருவெண்ணெய்நல்லூர்.



படிப்பகம்

www.padippakam.com

வனங்களாலும் செயற்படுத்த முடியவில்லை. அடுத்த பத்தாண்டுகளில் அடிக்கட்டுமான துறையில் ஏறத்தாழ 1,70,000 கோடி அமெரிக்க டாலர்களை மூலதனமாக ஈர்க்க வேண்டும் என்றும் அரசு திட்டமிட்டுள்ளது. இந்நிலையில் வம்பு, வழக்கு, வாய்தா எனச் சிக்கிக் கொள்ளாமல், கார்ப்பரேட் நிறுவனங்கள் விவசாயிகளிடமிருந்து எளிதாக நிலங்களைக் கைப்பற்றிக் கொள்ளும் நோக்கத்திற்காகதான் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்களும், மறுவாழ்வுக்கான புதிய சட்டமும் கொண்டு வரப்படுகிறதேயொழிய, விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்கம் எதுவும் காங்கிரசு கும்பலுக்குக் கிடையாது.



விவசாயிகளிடமிருந்து வலுக்கட்டாயமாக நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு எதிராக தலைநகர் டெல்லியில் நடந்த ஆர்ப்பாட்டம் (கோப்புப் படம்).

போலி கம்யூனிஸ்டுகளும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த சமூக ஆர்வலர்களும் இந்த உண்மையை அம்பலப்படுத்தாமல், இந்தச் சட்டத்தில் செய்யப்படும் திருத்தங்கள் விவசாயிகளுக்கு நன்மை அளிக்கக்கூடியதாக இருக்க வேண்டுமென காங்கிரசுக்கு உபதேசித்து வருகிறார்கள். ''கார்ப்பரேட் நிறுவனங்களுக்காக நிலங்களைக் கையகப்படுத்தும் உரிமை யாரிடம் இருக்க வேண்டும்? அரசிடமா, கார்ப்பரேட் நிறுவனங்களிடமா? விளைநிலங்களைக் கையகப்படுத்தும்பொழுது கிராம சபையின் ஒப்புதலைப் பெற வேண்டுமா, கூடாதா? நிலத்தின் விலையை எப்படித் தீர்மானிப்பது? நிலம் கையகப்படுத்தும் சட்டத்தையும், மறுகுடியமர்வு, மறுவாழ்வு குறித்த சட்டத்தையும் ஒன்றாக இணைப்பதா, கூடாதா?'' - இவை போன்ற இரண்டாம் பட்ச பிரச்சினைகளைப் பற்றிதான் மைய அரசு, போலி கம்யூனிஸ்டுகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த அறிவுஜீவிகள் ஆகியோருக்கு இடையே மயிர் பிளக்கும் வாதங்கள் நடைபெற்று வருகின்றன.

விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்கும்படி நிலம் கையகப்படுத்தும் சட்டம் திருத்தப்படுகிறது என்றே வைத்துக் கொள்வோம். அரசும் கார்ப்பரேட் நிறுவனங்களும் அச்சட்டத்தை இம்மி பிசகாமல் மதித்து நடப்பார்கள் என்பதற்கு ஏதாவது உத்தரவாதம் உண்டா? கிராம சபையின் ஒப்புதலின்றி பழங்குடியின மக்களுக்குச் சொந்தமான நிலங்களை, வனப் பகுதிகளைக் கையகப்படுத்தக் கூடாது என்கிறது வன உரிமைச் சட்டம். ஆனால், போஸ்கோவிற்கு அனுமதி அளிப்பதற்காக, கையகப்படுத்த வேண்டிய வனப் பகுதி நிலங்களில் பழங்குடியின மக்களே வசிக்கவில்லை என மாவட்ட ஆட்சியர் சான்றளித்தார். சத்தீஸ்கர் மாநிலத்தில் வனப் பகுதி நிலங்களைக் கையகப்படுத்த ஒப்புதல் அளிக்க மறுத்த கிராமப் பஞ்சாயத்துகள் கலைக்கப்பட்டு, அவை அருகிலுள்ள நகராட்சியோடு இணைக்கப்பட்டு, வன உரிமைச் சட்டம் மீறப்பட்டது. சுற்றுப்புறச் சூழல் விதிகளை மீறிதான் கார்ப்பரேட் நிறுவனங்களின் தொழிற் திட்டங்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது என்பதற்கும் ஓராயிரம் உதாரணங்கள் உள்ளன.

இதுவொருபுறமிருக்க, கார்ப்பரேட் நிறுவனங்கள் தனியாகவோ அல்லது அரசுடன் கூட்டுச் சேர்ந்தோ செயல்படுத்த முனையும் தொழில் திட்டங்கள், வேலை வாய்ப்பை உருவாக்கவும், பொது மக்களின் நன்மைக்காகவும், நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும்தான் கொண்டு வரப்படுவதாகக் கூறப்படுவது மிகப்பெரிய பொய், மோசடி, இத்திட்டங்கள் அனைத்தும் நமது நாட்டின் இயற்கை வளங்களை, மக்களின் உழைப்பை மிகவும் மலிவான விலையில் உள்நாட்டை மற்றும் வெளிநாட்டைச்சேர்ந்த கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளையடித்துச் செல்வதற்காகவே கொண்டு வரப்படுகின்றன. ஆங்கிலேய ஏகாதிபத்திய முதலாளிகள் நாட்டை அடிமைப்படுத்திக் கொள்ளையடித்துச் சென்றதைப் போல, இப்பொழுது பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிற்கழகங்கள் நமது நாட்டின் வளங்களைக் கொள்ளையடித்துச் செல்கின்றன. ஓட்டுக்கட்சிகள் அனைத்தும் இந்த கார்ப்பரேட் பகற்கொள்ளையை, மறுகாலனிய சுரண்டலை வளர்ச்சி என்ற பெயரில் மூடிமறைத்து வருகின்றன.

இந்நிலையில், விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கு ஏற்றவாறு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்கள் செய்ய வேண்டும் எனக் கோருவது புண்ணுக்குப் புனுகு தடவும் மோசடித்தனம் தவிர, வேறெதுவுமில்லை; நிலம் கையகப்படுத்துவதற்கு எதிராக விவசாயிகளும், பழங்குடியின மக்களும் நடத்தி வரும் போராட்டங்களை நீர்த்துப் போகச் செய்யும் தந்திரம் தவிர, வேறெதுவுமில்லை. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில் திருத்தங்கள் கோருவதற்கு மாறாக, இந்த வளர்ச்சியையும், இதற்காக நிலங்களைக் கையகப்படுத்துவதையும் எதிர்த்துப் போராட வேண்டும். அது ஒன்றுதான் நமது நாட்டின் விவசாயத்தையும், வனப் பகுதிகளையும், இயற்கை வளங்களையும் காப்பாற்றுவதோடு, நாடு மறுகாலனியாவதையும் தடுத்து நிறுத்தும்.

• செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

## சல்வாஜுடும் கலைப்பு:

# உச்ச நீதிமன்றத்தின் கோணல் பார்வை!

**சல்வா ஜுடுமைக் கலைக்கச் சொல்லி உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு, பழங்குடியின மக்களுக்கு நீதி வழங்கவில்லை.**

''சிறப்புப் போலீசு அதிகாரிகள் (SPO)'' என்று சட்டிஸ்கர் மாநில அரசாங்கத்தால் அழைக்கப்படும் சல்வா ஜூடும் அமைப்பை கலைத்து விடும்படியும் நிராயுதபாணியாக்கிவிடும்படியும் இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. இது அரிதிலும் அரிதான வழக்கு என்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பு என்றும் மனித உரிமை மற்றும் ஜனநாயகப் போராளிகளால் போற்றப்படுகிறது.

இத்தீர்ப்பை சட்டவாதக் கண்ணோட்டத்துடன் பார்க்கும்போது அவ்வாறானதுதான் என்று தோன்றும். ஆனால், சட்டவாதத்திற்கு அப்பாற்பட்டு சற்று ஆழமாக தீர்ப்பின் உள்ளடக்கத்தைப் பரிசீலிக்கும்போது மிகவும் எச்சரிக்கையாகவும் எதிர்மறையிலும் வரம்புக்குட்பட்டும் இந்த வழக்கு அணுகப்பட்டிருப்பதாகவே புரியும்.

நந்தினி சுந்தர், தில்லியைச் சேர்ந்த சமூகவியல் பேராசிரியர்; ராமச்சந்திர குகா, ஒரு வரலாற்று அறிஞர்; இ.ஏ.எஸ். சர்மா, மத்திய அரசின் முன்னாள் செயலாளர்-ஆந்திர அரசின் பழங்குடி நல ஆணையாளர். இந்தியக் குடிமக்கள் முனையம் என்ற சமூக அமைப்பு சட்டிஸ்கருக்கு அனுப்பிய உண்மை அறியும் குழுவில் இம்மூவரும் பங்கேற்க சென்றிருந்தபோது, சல்வா ஜூடுமின் அட்டூழியங்களைப் பற்றி அறிந்தனர். சட்டிஸ்கரில் சல்வா ஜூடுமின் மனித உரிமை மீறல்கள் குறித்து, பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் தேசிய மனித உரிமை ஆணையங்களிடம் முறையிட்டும் அவர்களுக்கு உரிய, பொறுப்பான விடையோ, விளைவோ எதுவும் கிடைக்கவில்லை.

எனவே, 2006-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தின் நீண்ட படிகளில் ஏறினர். 26 நாட்கள் மட்டுமே விசாரணை நடப்பதற்கு 5 ஆண்டுகள் ஆகின. வெவ்வேறு அமர்வுகளில் பதினோரு நீதிபதிகள் மாறிமாறி வெவ்வேறு சமயங்களில் வழக்கு விசாரணையைக் கேட்டனர். 2010-2011-ஆம் ஆண்டில் தொடர்ந்து, 16 நாட்கள் வழக்கை விசாரித்த நீதிபதிகள் சுதர்சன ரெட்டியும், சுரீந்தர்சிங் நிஜ்ஜாரும் கடைசியாகத் தீர்ப்பு வழங்கினர்.

சல்வா ஜூடும் - சிறப்பு போலீசு அதிகாரிகள் பாதுகாப்புப் படையினரோடும், மாவட்ட போலீசாருடனும் பழங்குடி கிராமங்களுக்குள் போனார்கள்; வீடுகளைக் கொளுத்தினார்கள்; தானியங்கள், ஆடு, மாடு - கோழிகள் மற்றும் பணத்தைக் கொள்ளையிட்டார்கள்; பெண்கள் மீது பாலியல் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர்; பழங்குடி இனத்தவர்கள் பலரைப் படுகொலை செய்தார்கள் என்று குற்றச்சாட்டுகள் மனுதாரர்கள் மூவராலும் ஆதாரங்களுடன் உச்ச நீதிமன்றத்தின் முன் வைக்கப்பட்டது. மனித உரிமைகள் கண்காணிப்பகம், குழந்தைகள் உரிமைகளுக்கான தேசிய ஆணையம் மற்றும் தேசிய மனித உரிமை ஆணையம் ஆகியவற்றின் அறிக்கைகள் குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தின.

இவற்றோடு சல்வா ஜூடும் - சிறப்புப் போலீசு அதிகாரிகளில் பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பலியானவர்களின் வாக்குமூலங்கள் நீதிபதிகளின் முன் வைக்கப்பட்டன. பிரிட்டனின் சேனல்-4 தயாரித்த ஆவண ஒலி-ஒளிப்படம், தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடமிருந்து பெற்று இணைப்புச்சாட்சியம் எம்.எப்-3 ஆக குற்றச்சாட்டுப் பட்டியலுடன் இணைக்கப்பட்டிருந்தது.

2005-07 ஆண்டுகளில் மட்டும் 644 பழங்குடி கிராமங்களில் இருந்து சுமார் 50,000 பேர் கட்டாயமாக வெளியேற்றப்பட்டு 20 சல்வா ஜூடும் முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டனர். இவர்களுக்கு தினமும் ரூ. 50 மட்டுமே தரப்படுகிறது. உணவு, மருத்துவம், கல்வி வசதி எதுவும் கிடையாது. ஆனால் சட்டிஸ்கர் அரசோ, இவையெல்லாம் நிவாரண முகாம்கள் என்று வாதிடுகிறது.

சட்டிஸ்கர் மாநில அரசால் உருவாக்கப்பட்ட சட்டவிரோத குண்டர் படையான சல்வாஜூடுமின் பயிற்சி முகாம் (கோப்புப் படம்).





படிப்பகம்

www.padippakam.com

2007 ஜூனில், ஆந்திராவின் கம்மம் மாவட்டம் சேர்லாவில் நடந்த பழங்குடி மாநாட்டில் திறந்தவெளியில் அளிக்கப்பட்ட 110 பழங்குடி கிராமங்களின் பிரதிநிதிகளுடைய வாக்குமூலங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. அவை பெருமளவில் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதையும் அரச பயங்கரவாதத்தின் ஒரு பகுதியாக சல்வா ஜூடும் அட்டூழியங்களையும் பற்றி தெளிவாகப் படம் பிடித்துக் காட்டின. அந்த வாக்குமூலங்கள் எல்லாம் பழங்குடி மக்களின் கோண்டி மொழியிலும், இந்தியிலும் ஆதாரங்களாக நீதிபதிகள் முன்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

இக்குற்றச்சாட்டுகள் எதற்கும் உச்ச நீதிமன்றத்திடம் இருந்து பதில் ஏதும் இல்லை. இவை எதையும் உச்சநீதி மன்றம் கணக்கில் எடுத்துக் கொண்டதாகவே தெரியவில்லை. சல்வா ஜூடும் - சிறப்புப் போலீசு அதிகாரிகளின் அட்டூழியங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தற்போது வந்துள்ள உச்சநீதிமன்றத் தீர்ப்பால் தக்க நிவாரணமும், நீதியும் கிடைக்கவில்லை. குற்றவாளிகளுக்குத் தண்டனையும் விதிக்கப்படவில்லை.



தமது சொந்த கிராமங்களில் இருந்து வலுக்கட்டாயமாக விரட்டியடிக்கப்பட்டு, நிவாரண முகாம் என்ற பெயரில் சல்வா ஜூடுமால் நடத்தப்படும் வதைமுகாம்களில் சட்டவிரோதமாக அடைத்துவைக்கப்பட்டுள்ள பழங்குடியின மக்கள்.

அதற்குப் பதிலாக சல்வா ஜூடும் - சிறப்புப் போலீசு அதிகாரிகள் உருவாக்கப்பட்ட முறை, அவர்களின் தகுதி, கல்வி, பயன்பாடு, பயிற்சி, ஊதியம், மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போரில் அவர்களுக்குள்ள ஆபத்துகள், இவற்றிலெல்லாம் அரசின் சட்டத்துக்கு முரணான நிலை -இவை பற்றித்தான் நீதிபதிகள் கணக்கில் எடுத்துக் கொண்டனர். சல்வா ஜூடும் - சிறப்புப் போலீசு அதிகாரிகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கொடுமைகள், பாதுகாப்பின்மை, ஆபத்து, மக்கள் நலன்கள், உரிமைகளை விட, சல்வா ஜூடும் - சிறப்புப் போலீசு அதிகாரிகளின் பாதுகாப்பின்மை, நலன்கள், உரிமைகள் பற்றிய கூடுதலான அக்கறை என்ற நோக்கில் இருந்துதான் பரிசீலித்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. முதலாளிய- ஊடகங்களும் அம்மாதிரியான அக்கறையைத்தான் மேலும் கூடுதலாக வெளிப்படுத்தியிருக்கின்றன.

மாவோயிஸ்டுகளுக்கு எதிரான அரசின் போரில் சல்வா ஜூடும் - சிறப்புப் போலீசு அதிகாரிகளாகச் சேர்க்கப்பட்டிருக்கும் பழங்குடி இளைஞர்கள் ''பீரங்கித் தீனியாகப்'' பலியிடப்படுகிறார்கள் என்று நீதிபதிகளும் ஊடகங்களும் கண்ணீர் வடிக்கிறார்கள். அவர்கள் குறைந்தபட்சக் கல்வி அறிவு இல்லாதவர்கள். போதிய பயிற்சியில்லாமல் சக்தி வாய்ந்த, நவீன ஆயுதங்களோடு போரில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். சல்வா ஜூடும் அமைப்பை உருவாக்கியதன் மூலம் தேவையான ஆயுதங்களும் போதிய எண்ணிக்கையில் நிரந்தர போலீசு மற்றும் பாதுகாப்புப் படையையும் நிறுவி, குடிமக்களைக் காக்க வேண்டிய பொறுப்பிலிருந்து அரசு ஒதுங்கிக் கொண்டது, என்கிறார்கள். போலீசு செய்ய வேண்டிய வேலைகளில் சல்வா ஜூடும் - சிறப்புப் போலீசு அதிகாரிகள் ஈடுபடுத்தப்பட்டது, அரசியல் சட்டத்தின் 14-வது விதி (சட்டத்தின் முன் அனைவரும் சமம்) மற்றும் 21-வது விதி (குடிமகனின் உயிருக்கும் சுதந்திரத்துக்கும் உறுதி) ஆகியவற்றை மத்திய-மாநில அரசுகள் மீறியுள்ளன என்கிறது, உச்ச நீதிமன்றத் தீர்ப்பு.

அதாவது, பயங்கரவாதக் கிரிமினல் குற்றச் செயல்களில் ஈடுபடும் சல்வா ஜூடும் சிறப்புப் போலீசு அதிகாரிகள், அவற்றுக்குப் பலியாகிற பழங்குடி மக்கள் ஆகிய இரு தரப்பையும் சமமாக வைத்தே பார்க்கும் வகையில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வழக்கை அனுகியுள்ளனர்.

மேலே சென்று, சல்வா ஜூடும் சிறப்புப் போலீசு அதிகாரிகளை நிராயுதபாணிகளாக்கியும், மாவோயிஸ்டுகளுக்கு எதிரான போரில் ஈடுபடுத்துவதை நிறுத்தியும் அவர்களின் உயிர்களை மாநில அரசாங்கம் காத்திட வேண்டும் என்றும் உச்சநீதி மன்ற நீதிபதிகள் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

நாட்டின் ஐந்து மாநிலங்களில் 40,000-க்கும் மேலான பழங்குடி இளைஞர்கள் வெவ்வேறு பெயர்களில் சல்வா ஜூடும் போன்ற அரச பயங்கரவாத கொலைப் படைகளாகத் திரட்டப்பட்டிருக்கிறார்கள்; நாங்கள் மட்டுமா இதைச் செய்கிறோம், என்கிறார் சட்டிஸ்கர் மாநில பா.ஜ. க. முதல்வர். அதற்கு உச்ச நீதிமன்றத்தின் பதில் என்ன?

தேர்தல் அரசியலில் நாய்ச் சண்டை போடும் காங்கிரசும் பா.ஜ. க.வும் மக்களுக்கு எதிராக அரச பயங்கரவாதத்தை மூர்க்கமாகத் தொடர்வதில் கை கோர்த்துக் கொண்டு செயல்படுகிறார்கள். உச்சநீதி மன்றத் தீர்ப்பை எதிர்த்து மறுசீலனை வழக்குப் போடப்போவதாகக் கூட்டுமுடிவு செய்துள்ளார்கள். சல்வா ஜூடும் ஒரு அமைதி இயக்கம் என்று சாதிக்கிறார்கள். உச்சநீதி மன்றத் தீர்ப்பும் ஒருவகையில் இக்கருத்தையே கொண்டிருக்கிறது.

● ஆர்.கே.



படிப்பகம்

www.padippakam.com

## குஜராத்:

# கார்ப்பரேட்மயமாகும் விவசாயம்! ஓட்டாண்டிகளாகும் விவசாயிகள்!!

**குஜராத் மாநில விவசாயத்தை கார்ப்பரேட் நிறுவனங்களின் கைகளில் ஒப்படைத்திருப்பதுதான் மோடியின் 'சாதனை'.**

''குஜராத்தைப் பார்! மோடி ஆட்சியின் சாதனையைப் பார்!'' என்று மோடி ஆட்சியை உச்சந்தலையில் வைத்துக் கொண்டாடுகிறது, இந்தியா டுடே. ''இந்தியாவின் ஆண்டுச் சராசரி விவசாய வளர்ச்சி 2.9 சதவீதம் மட்டுமே; ஆனால், குஜராத்தின் வளர்ச்சியோ 9 சதம்! மத்திய அரசு மோடியைப் பார்த்து பாடம் கற்றுக் கொள்ளவேண்டும்'' என்கின்றன, செய்தி ஊடகங்கள். உணவு விவசாயக் கழகத்தின் துணை நிறுவனமான பன்னாட்டு உணவுக் கொள்கை ஆராய்ச்சி மையம் (International Food Policy Research Institute, Rome) குஜராத்தைப் பின்பற்றுமாறு இந்தியாவின் இதர மாநிலங்களை வலியுறுத்தி வருகிறது. தமிழகத்தில் ஆட்சிக்கு வந்துள்ள பாசிச ஜெயா கும்பலோ, குஜராத்தை முன்மாதிரியாகக் கொண்டு தமிழகத்தின் விவசாயத்தில் மாற்றத்தைக் கொண்டுவர ஒரு நிபுணர் குழுவை குஜராத்துக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளது.

இப்படி நாடு முழுவதும் முதலாளித்துவ நிறுவனங்களும் ஊடகங்களும் பார்ப்பன-பாசிச மோடியைச் சிறந்த அரசாளுமை கொண்டவர் என்றும், விவசாயத்தில் வளர்ச்சியைச் சாதித்தவர் என்றும் கொண்டாடுகின்றன. எனில், விவசாயிகளுக்கு குஜராத் சொர்க்கபுரியா? மோடி அரசு விவசாயத்தில் அப்படி என்ன 'புரட்சியை'ச் செய்துள்ளது?

கடந்த 2005-ஆம் ஆண்டு மோடி அரசு விவசாயம் தொடர்பாக இரண்டு சட்டங்களைக் கொண்டுவந்தது. அதில் ஒன்று, ஒப்பந்த விவசாயத்தைப் பரவலாக்கும் திட்டம். இத்திட்டத்தில் தனியார் நிறுவனங்களும் மாநில அரசும் கூட்டுச் சேர்ந்து விவசாயிகளுக்குத் தேவையான பொருட்களை வழங்கும். விவசாயிகள் 1 முதல் 5 ஆண்டுகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் உற்பத்தி செய்து கொடுக்க வேண்டும். இதற்காக, மாநில அரசின் விவசாய உற்பத்தி விற்பனைக் குழு தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது.

இரண்டாவது, கார்ப்பரேட் விவசாயத்திற்கும் மற்றும் உயிர்ம எரிபொருள் (Bio Feul) விவசாயத்திற்கும் (அதாவது, காட்டாமணக்கு பயிரிட) தரிசு நிலங்களை முதலாளிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுப்பதற்கான சட்டமாகும். இதன் மூலம் அரசுக்குச் சொந்தமான சுமார் 42 இலட்சம் ஹெக்டர் நிலம், அடிமாட்டு விலையில் பெருமுதலாளிகளுக்கு 20 ஆண்டுகளுக்குக் குத்தகைக்கு விடப்பட்டு வருகிறது. மேலும், நன்செய் நிலங்களையும் இம்முதலாளிகள் கையகப்படுத்திக் கொள்ள நில உச்சவரம்பு மற்றும் குத்தகைச் சட்டங்கள் தளர்த்தப்பட்டுள்ளன.

இவ்விரு சட்டங்கள் மூலமாக குஜராத் அரசு பாரம்பரிய விவசாயத்தை நாசமாக்கி, கார்ப்பரேட்மயமான விவசாயத்தைத் திணித்து வருகிறது. அதாவது, விதை, உரம், பூச்சி மருந்துகள், சேமிப்புக் கிடங்குகள், கொள்முதல், விநியோகம் - என அனைத்தையும் கட்டுப்படுத்தி, பெருந்தொழில் குழுமங்கள் ஆதிக்கம் செய்யக் கதவை அகலத் திறந்துவிட்டுள்ளது. பாரம்பரிய விவசாயத்தையும் விவசாயிகளையும் ஒழித்துக் கட்டிவிட்டு உள்நாட்டு- வெளிநாட்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் ஆதிக்கம் செய்யும் இத்தகைய முறையைத்தான் விவசாய வளர்ச்சி என்றும் வறுமையும் வேலையின்மையும் குறைந்து குஜராத் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுவதாகவும் முதலாளித்துவ முண்டங்களும் ஊடகங்களும் கதையளக்கின்றன.

2003-ஆம் ஆண்டிலிருந்து உள்நாட்டு-வெளிநாட்டு கார்ப்பரேட் நிறுவனங்களை உணவு மற்றும் உணவுப்

குஜராத்தின் ஒப்பந்த பருத்தி விவசாயப் பண்ணையில் கொத்தடிமையாக உழலும் சிறுவன்: மோடி அரசு விவசாயத்தில் செய்துள்ள 'புதிய சாதனை'!





படிப்பகம்

www.padippakam.com

பதப்படுத்தல் துறையில் முதலீடு செய்ய அழைத்துவரும் குஜராத் அரசு, கடந்த 2009-ஆம் ஆண்டில் மட்டும் 204 புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டுள்ளது. இதன் மூலமாக, சுமார் 32,450 கோடி ரூபாய் அளவுக்கு இம்மாநிலத்தில் தனியார் முதலீடுகள் குவிந்துள்ளன. குறிப்பாக, ரிலையன்ஸ் நிறுவனம் உற்பத்தி-நுகர்வு சங்கிலியை ஒருங்கிணைக்க சுமார் 3000 கோடி ரூபாயை முதலீடு செய்துள்ளது. இத்தகைய புதிய சட்டங்களாலும் பெருமுதலாளிகளின் முதலீடுகளாலும் குஜராத்தின் விவசாயம் புதிய பரிமாணத்தை எட்டி வருகிறது.



குஜராத்தின் கார்ப்பரேட் விவசாயத்தால் கால்நடைகள் அழிந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால்,பெற்ற தாயை ஏர் மாடாகக் கொண்டு தந்தையும் மகன்களும் ஏரோட்டும் ஏழை விவசாயக் குடும்பத்தின் அவலம்.

2000-ஆவது ஆண்டில் அக்ரோசெல் என்ற நிறுவனம் பருத்தி மற்றும் எள் ஒப்பந்த விவசாயத்தைத் தொடங்கியது. அப்பொழுது 500 விவசாயிகளைக் கொண்டு 2,500 ஹெக்டரில் ஒப்பந்த விவசாயத்தை செயல்படுத்தியது. இது 2008-இல் 45,000 விவசாயிகள், 2,18,000 ஹெக்டர் பரப்பளவு என அதிகரித்துள்ளது. தேசாய், பார்தி முதலான நிறுவனங்கள் சுமார் 7,000 ஏக்கர் பரப்பளவில் ஒப்பந்த விவசாயத்தின் மூலம் மாம்பழம் மற்றும் வாழைப்பழங்களை உற்பத்தி செய்து ஐரோப்பியச் சந்தைக்கு அனுப்புகின்றன. மெக்டொனால்ட் என்ற நிறுவனம் ஆயிரக்கணக்கான ஏக்கரில் உருளைக்கிழங்கு ஒப்பந்த விவசாயத்தை மேற்கொண்டு வருகின்றது. ஏ.சி.ஐ.எல். என்ற நிறுவனம் ஒப்பந்த விவசாய அடிப்படையில் பருத்தியை உற்பத்தி செய்து வருகிறது. சொட்டு நீர்ப்பாசன நிறுவனமான ஜெயின், ஒப்பந்த விவசாயத்தின் மூலமாக வெங்காய உற்பத்தியை மேற்கொள்கிறது. இவ்வாறு குஜராத்தில் பல இலட்சம் ஏக்கர் பாசன நிலங்கள் ஒப்பந்த விவசாயத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

குஜராத் மாநிலத்தில் சிறு உடைமையாளர்கள், பெரும் உடைமையாளர்களுக்கு நிலங்களைக் குத்தகைக்கு விடுதலும், விற்பதும் அதிகரித்துள்ளதோடு, சராசரி நில உடைமையின் அளவும் அதிகரித்து வருவதாகக் கள ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 1990-களில் சிறு விவசாயிகளே பெரும் பண்ணையாளர்களிடம் இருக்கும் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து விவசாயத்தில் ஈடுபட்டனர். ஆனால், 2000-ஆவது ஆண்டுக்கு பிறகு நவீன பண்ணையாளர்கள், சிறு விவசாயிகளிடம் இருக்கும் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து, பெரும் பண்ணை ஒப்பந்த விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இதனால் சிறு விவசாயிகள் படிப்படியாக விவசாயத்திலிருந்தே விரட்டப்பட்டு நாடோடிகளாக்கப்பட்டு வருகின்றனர். நவீன உழுபடைக் கருவிகள் மூலம் பண்ணை விவசாயம் மேற்கொள்ளப்படுவதால், கூலி விவசாயிகளுக்கும் வேலை கிடைப்பதில்லை. மேலும் ஒப்பந்த விவசாயத்தின் ஓரினப் பயிர் சாகுபடியால், மண் வளம் இழப்பும் பாசன வசதிகள் சூறையாடப்படுவதும் சுற்றுச்சூழல் பாதிப்பும் தீவிரமாகி வருகின்றன.

இன்னொரு பக்கம், கார்ப்பரேட் கம்பெனிகள் நிலத்தைக் கையகப்படுத்தி நேரடியாக விவசாயத்தில் ஈடுபட ஆரம்பித்துள்ளன. திடீர் விவசாயியாக அவதாரம் எடுத்துள்ள ரிலையன்ஸ் நிறுவனம், அரசின் துணையோடு கையகப்படுத்தியுள்ள 1,700 ஏக்கரில் மா பயிரிட்டுள்ளது. இதில் உற்பத்தியாகும் மாம்பழத்தை ''ரிலையன்ஸ் மேங்கோஸ்'' என்கிற பெயரில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பியச் சந்தைக்கு ஏற்றுமதி செய்கிறது. ஏ.சி.ஐ.எல். நிறுவனம் அரசின் தரிசு நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து, பருத்தி விவசாயத்தை நேரடியாகச் செய்து வருகிறது.

மேலும், உயிர்ம எரிபொருள் விவசாயத்திற்கு என்கிற பெயரில் ராயல் எனர்ஜி, டாட்டா, ரிலையன்ஸ், எஸ்ஸார், அரவிந்த் மில்ஸ், அவினி சீட்ஸ் போன்ற நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் குஜராத்தில் உள்ள தரிசு நிலங்களைக் கையகப்படுத்தும் வேலையில் இறங்கியுள்ளன. இம்மாநிலத்தின் கணிசமான தரிசு நிலங்கள் கட்ச், சௌராஷ்டிரம் மற்றும் வடக்குப் பகுதியில் உள்ளன. அங்கு வாழும் மக்கள் இந்நிலங்களை கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலங்களாகத் தொன்றுதொட்டு பயன்படுத்தி வருகிறார்கள். இவர்கள் குஜராத்தின் மக்கள் தொகையில் 5 முதல் 8 சதமாக உள்ளனர்; சுமார் 25 முதல் 40 இலட்சம் குடும்பங்கள் இந்நிலங்களைச் சார்ந்து வாழ்கின்றன. இவர்களின் வாழ்வாதாரமாக உள்ள மேய்ச்சல் நிலத்தின் அனுபோக உரிமை பறிக்கப்பட்டு வருவதால், இப்பகுதி வாழ் மக்கள் கால்நடைகளை விற்றுவிட்டு நகர்ப்புறங்களில் நாடோடிகளாக வேலை தேடி அலைகின்றனர்.

ஏற்றுமதி மற்றும் மேட்டுக்குடிக்கான விவசாயம் (High value agriculture) ஆகிய வகைகளுக்கு குஜராத்தில் முன்னுரிமை தரப்பட்டு வருகிறது. 1990-களில் 4 இலட்சம் ஹெக்டராக இருந்த காய்கறி-பழ உற்பத்திக்கான விவசாயம், 2007-08-இல் 6 இலட்சம் ஹெக்டராக உயர்ந்திருக்கிறது. அதேபோல் பருத்தி 15 இலட்சம் ஹெக்டரில் இருந்து 24 இலட்சம் ஹெக்டராக உயர்ந்திருக்கிறது. இதன் விளைவாக தானிய உற்பத்தி பின்னுக்குத் தள்ளப்பட்டு உணவு பாதுகாப்பு கேள்விக்குறியாகி வருகிறது.



படிப்பகம்

குஜராத்தின் ஒட்டுமொத்த பருத்தி விவசாயத்தில் 54 சதம் பி.டி. பருத்தி விதை (மரபணு மாற்றம் செய்யப்பட்ட பருத்தி) கொண்டு பயிரிடப்படுகிறது. 30-க்கும் மேற்பட்ட தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் பி.டி. பருத்தி விதையை விற்பனை செய்கின்றன. இருப்பினும், இந்நிறுவனங்கள் அனைத்தும் பி.டி. பருத்தி விதைக்குக் காப்புரிமை கொண்டிருக்கும் பன்னாட்டு நிறுவனமான மான்சான்டோவின் கட்டுப்பாட்டில் இயங்கும் நிறுவனங்களாகும். மான்சான்டோதான் விலையைத் தீர்மானிக்கிறது. இதனால் பருத்தி விவசாயிகளுக்குச் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு இலாபமில்லை; காய் புழு நோயையோ கட்டுப்படுத்தவும் முடியவில்லை.



குஜராத்தின் மாஹுவாவில் நீராதாரங்களையும் விளைநிலங்களையும் பறிக்கும் நிர்மா நிறுவனத்தின் சிமெண்ட் ஆலைத் திட்டத்தை எதிர்த்து விவசாயிகள் நடத்தும் போராட்டம்.

இவை தவிர, குஜராத் அரசு பல்வேறு பயிர்களுக்கான உற்பத்தி மண்டலங்களை உருவாக்கி வருகிறது. மாம்பழம், சப்போட்டா, அனொலா, எலுமிச்சை, வாழை, பப்பாளி, அன்னாசி, பேரிச்சை, கொய்மலர்கள், வாசனை பயிர்கள் போன்றவை, ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட மாவட்டம் அல்லது வட்டங்களை உற்பத்தி மண்டலங்களாக அறிவித்துள்ளது. அங்கு அப்பயிர் உற்பத்திக்கு ஊக்கம் கொடுக்கப்படுகிறது. தேவைப்படும் நிறுவனம் அப்பகுதியில் உள்ள விவசாயிகளிடம் ஒப்பந்தம் போட்டுக் கொள்

# பாலியல் அவதூறு-வக்கிரத்துக்கு எதிராக பெண்கள் விடுதலை முன்னணியின் ஆர்ப்பாட்டம்

**சே**லத்தில் காந்தி விளையாட்டரங்கம் அருகிலுள்ள நீச்சல் குளத்தில், பயிற்சிக்கு வரும் பள்ளி மாணவிகளிடம் நீச்சல் பயிற்சியாளர் ஞானசேகரன் தகாத முறையில் நடந்து கொண்டதாகவும், இதனால் இரண்டு மாணவிகள் கர்ப்பமடைந்துவிட்டதாகவும் கோவை மேற்கு மண்டல மேலாளர் மோகன், சேலம் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி பிரதாப் உள்ளிட்ட அதிகாரிகள் பயிற்சியாளர் ஞானசேகரன் மீதான தனிப்பட்ட விரோதத்தால் அவதூறு பரப்பி, பெண் குழந்தைகளை அவமானப்படுத்தியுள்ளனர்.

நீச்சல் பயிற்சிக்கு வரும் பள்ளி மாணவிகளையும் பெற்றோர்களையும் அவமானத்துக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாக்கிய இந்த பொறுக்கித்தனத்தை எதிர்த்து, நீச்சல் பயிற்சி பெற்ற மாணவிகள் கர்ப்பம் என்று அவதூறு பரப்பிய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து தண்டிக்கக் கோரியும், பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளுக்கு எதிராகவும் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட பெண்கள் விடுதலை முன்னணியினர், அதன் தொடர்ச்சியாக 27.6.2011 அன்று மாலை சேலம் போஸ் மைதானத்தில் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். விண்ணதிரும் முழக்கங்களுடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம் உழைக்கும் மக்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.



ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு நடிகை ரஞ்சிதாவுடன் படுக்கையறையில் சல்லாபிக்கும் காட்சிகளுடன் வெளிவந்த சி.டி.யால் பிரபலமடைந்த கார்ப்பரேட் சாமியார் நித்தியானந்தா, தமிழகத்தில் ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இப்போது வெளிப்படையாகத் திரிவதோடு, கடந்த ஜூலையில் சென்னையில் பத்திரிகையாளர் சந்திப்பையும் நடத்தி தன்னை யோக்கிய சிகாமணியாகக் காட்டிக் கொண்டு மீண்டும் தனது தொழிலை நடத்தக் கிளம்பியுள்ளான்.

ஆன்மிகப் போர்வையில் ஆபாசக் கூத்தடிக்கும் இந்த கும்பலை எதிர்த்து, சேலம் பெரியார் சிலை அருகே 21.7.2011 அன்று சிவப்புச் சேலையுடன் திடீரெனத் திரண்ட பெண்கள் விடுதலை முன்னணியின் தோழர்கள், நித்தி-ரஞ்சி படத்தை செருப்பாலும் விளக்குமாறாலும் அடித்து, ‘‘நித்தியானந்தா கும்பலைக் கைது செய்! அவனது சொத்துக்களைப் பறிமுதல் செய்!’’ என்ற முழக்கத்தோடு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

சேலம் மாவட்டச் செயலர் தோழர் காந்தம்மாள் தலைமையில் நடந்த இந்த அதிரடி போராட்டம், நகரெங்கும் பெரும் பரபரப்பாகி, மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது.

– பு.ஜ.செய்தியாளர், சேலம்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

முதல் செய்து கொள்ளலாம்; அங்கு பழக்கூழ் மற்றும் பதப்படுத்தல் தொழிற்சாலையை ஆரம்பித்துக் கொள்ளலாம். மேலும், அரசு - தனியார் கூட்டிணைவுடன் பரோடா (வடோதரா) நகரத்தை ஒட்டி, விவசாய விளைபொருட்களைச் சேகரித்தல், தரப்படுத்தல், பதப்படுத்தல், மதிப்பூட்டல் மற்றும் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்க ''மீப்பெரும் உணவுப் பூங்காக்களை (Mega food parks)'' உருவாக்க குஜராத் அரசு முனைந்துள்ளது. இந்த ''மீப்பெரும் உணவு பூங்கா''வை ஒட்டிய விவசாய பகுதிகளில் வட்டாரச் சேகரிப்பு மையங்கள் உருவாக்கப்படுவதோடு, இவற்றில் அந்நிய முதலீடுகளும் அதிகரித்து வருகின்றன. மேலும், தனியார் நிறுவனங்களின் பங்கேற்புடன் 20-க்கும் மேற்பட்ட விவசாய ஏற்றுமதி மண்டலங்களை குஜராத் அரசு உருவாக்கியுள்ளது. இலாபம் உத்திரவாதப்படுத்தப்பட்ட உற்பத்தி - கொள்முதல் - நுகர்வு மற்றும் சந்தைப்படுத்தலைத் தமது கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு கார்ப்பரேட் நிறுவனங்கள் கொள்ளையடிப்பதற்காகவே இவை வேகவேகமாக நிறுவப்பட்டு வருகின்றன.

இன்று குஜராத்தில் ரிலையன்ஸ், அய்.டி.சி., கோத்ரெஜ், ஃப்யூச்சர், மஹிந்திரா, ஹரியாளி கிசான் பஜார், ஏ.சி.அய்.எல்., மகேந்திரா, டீ.சி.ம்.ஸ்ரீராம் போன்ற நிறுவனங்கள் கிராமப்புற சில்லறை வர்த்தகம் மற்றும் விவசாய இடுபொருட்கள் வர்த்தகத்தில் இறங்கி ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இவற்றின் விளைவாக, முறைசாரா சிறு உற்பத்தி, கொள்முதல், சில்லறை விற்பனை ஆகியவை ஒழிக்கப்பட்டு அவ்விடத்தில் கார்ப்பரேட் நிறுவனங்கள் காலூன்றி விட்டன.

இவை தவிர, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள், தொழில் வளர்ச்சி மையங்கள் என்ற பெயரில் வெளிப்படையாக நிலப்பறிப்பிலும் மோடி அரசு ஈடுபட்டு வருகிறது. நிர்மா லிமிடெட் என்ற சிமெண்ட் நிறுவனத்திற்கு பாவ்நகர் மாவட்டத்தில் சுமார் 3500 ஹெக்டர் வளமிக்க விவசாய நிலத்தைப் பறித்தெடுக்க அரசு முடிவெடுத்துள்ளது. இதனால் சுமார் 50,000 விவசாயக் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதேபோல, டாடா நானோ கார் உற்பத்தி உதிரிப் பாக உற்பத்திக்காக ஏழு கிராமங்களில் சுமார் 8000 ஏக்கர் நிலம் பறிக்கப்படவுள்ளது.

இத்தகைய தனியார்மய-தாராளமய தீவிரமாக்கலால், குஜராத் மாநிலத்தில் நகரமயமாக்கம் 43 சதவீத அளவுக்கு நடந்தேறியுள்ளதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. நகரமயமாக்கமும் விவசாயத்தின் அழிவும் தனியார்மயம் - தாராளமயம் எனும் மறுகாலனியாக்கக் கொள்கையினால் திட்டமிட்டே முன்தள்ளப்படுபவையாகும். ஒப்பந்த விவசாயத்தின் மூலம் விவசாயிகளைப் போண்டியாக்கி, பின்னர் அவர்களே நிலத்தை விற்று ஓடுமாறு நிர்ப்பந்தித்து, இன்று எதிர்ப்பே இல்லாமல் கார்ப்பரேட் விவசாயத்தை குஜராத்தில் மோடி அரசு நிலைநாட்டியுள்ளது. மறுபுறம், மோடி அரசின் நிலப்பறிப்பையும் கொத்தடிமைத்தனத்தையும் எதிர்த்து மக்களைத் திரட்டிப் போராடிவரும் தொழிற்சங்க முன்னணியாளர்களும் மனித உரிமை அமைப்புகளின் செயல்வீரர்களும் 'மாவோயிஸ்டுகள்' என்று குற்றம் சாட்டப்பட்டுக் கைது செய்யப்பட்டு வருகின்றனர். இதனால்தான், ஒருபுறம் கார்ப்பரேட் சேவையும், மறுபுறம் தொழிற்சங்க - ஜனநாயக உரிமைகளைப் பறிக்கும் பாசிச அடக்குமுறையும் கொண்டுள்ள இந்துவெறி பயங்கரவாத மோடி அரசை முன்னுதாரணமாகக் காட்டி, முதலாளித்துவவாதிகளும் அவர்களது ஊடகங்களும் புகழ்ந்து தள்ளுகின்றன.



கார்ப்பரேட் 'விவசாயி' அம்பானியுடன் பயங்கரவாத முதல்வர் மோடி: பாரம்பரிய விவசாயத்தின் அழிவை விரைவுபடுத்திய புதிய கூட்டணி.

பாரம்பரிய விவசாயத்தை அழிப்பது, உலகமயமாக்கலுக்கு ஏற்ப விவசாயத்தை ஏற்றுமதிக்கானதாக மாற்றுவது, ஏழை - நடுத்தர விவசாயிகளை நிலமற்ற கூலிகளாகச் சிதறடிப்பது, பன்னாட்டு ஏகபோக விவசாயக் கம்பெனிகளின் - தரகுப் பெருமுதலாளிகளின் வரம்பற்ற ஆதிக்கத்தை நிறுவுவது, இதற்காகப் பெயரளவில் இருந்துவந்த தடைகளை நீக்குவது என்பதுதான் மோடி அரசு செய்துவரும் 'முன்னுதாரணமிக்க சாதனைகள்'. கார்ப்பரேட் நிறுவனங்களின் ஆதிக்கத்தால் இன்று குஜராத்தில் விவசாய இடுபொருட்களின் விலை விண்ணை முட்டுகிறது. இது தவிர, பொதுவில் நிலவும் விலைவாசி உயர்வானது, உலகத் தரத்துக்கு உயர்ந்துவிட்டது. இவற்றால் விவசாயிகள் கடன் சுமையால் போண்டியாகி, விவசாயத்தை விட்டே விரட்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இதை 'விவசாயத்தின் வளர்ச்சி' எனக்குறிப்பிட்டு முதலாளித்துவவாதிகளும் அவர்களின் ஊடகங்களும் காதில் பூச்சுற்றுகின்றனர். இந்த 'விவசாய வளர்ச்சி', விவசாயிகளின் வாழ்வில் எந்த முன்னேற்றத்தையும் கொண்டுவரவில்லை. மாறாக, அவர்கள் தமது துண்டு நிலத்தையும் இழந்து நாடோடிகளாகவும் நிலமற்ற கூலிகளாகவும் மாறியது தான் நடந்துள்ளது. குஜராத்திலிருந்து பிழைப்பு தேடி சென்னையில் கொத்தடிமைகளாக உழலும் குஜராத் உழைக்கும் மக்களின் அவலமே மோடி அரசின் யோக்கியதையை நிரூபித்துக் காட்டுகிறது.

● சுடர்



படிப்பகம்

www.padippakam.com



வேலைநிறுத்தப் போராட்டத்தில் மாருதி தொழிலாளர்கள்:
வர்க்க ஒற்றுமையைக் கட்டி வளர்த்த
முன்னுதாரணமிக்க போராட்டம்.

# வர்க்க ஒற்றுமைக்குக் கிடைத்த வெற்றி!

**பன்னாட்டு நிறுவனங்களின் அடக்குமுறைகளைத் தூள்தூளாக்க முடியும் என்பதை மாருதி சுசுகி தொழிலாளர் போராட்டம் நிரூபித்துக் காட்டியிருக்கிறது.**

அரியானா மாநிலத்தில் இயங்கிவரும் நூற்றுக்கணக்கான பன்னாட்டு நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குத் தொழிற்சங்க உரிமைகள் கிடையாது. அத்தொழிற்சாலைகளில் அற்ப அளவுக்கு நிரந்தரத் தொழிலாளர்களை மட்டும் வைத்துக் கொண்டு, பெரும்பாலும் ஒப்பந்தத் தொழிலாளர்களை நியமிப்பதுதான் நடக்கின்றது; தொழிற்சங்கம் என்பதைப் பற்றிப் பேசுவதே குற்றமாகக் கருதப்படுகிறது. தொழிற்சங்கங்களுக்குப் பதிலாக நிர்வாகமே வேலை கமிட்டிகள் எனும் எடுபிடி சங்கங்களை உருவாக்கி நடத்தி வருகின்றன. இந்நிலையில் அரியானாவில் அமைந்துள்ள மாருதி சுசுகி தொழிற்சாலையில் தொழிற்சங்க உரிமைக்காக அண்மையில் நடந்துள்ள வேலைநிறுத்தப் போராட்டம், தொழிலாளர்கள் மத்தியில் புதிய நம்பிக்கையையும், முதலாளிகளிடம் கலக்கத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அரியானாவின் குர்கான் நகரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள மானேசர் தொழிற்பேட்டையில்தான், மாருதி சுசுகி நிறுவனத்தின் இரண்டாவது பிரிவு கார் தயாரிப்புத் தொழிற்சாலை அமைந்துள்ளது. மிகக் குறைந்த அளவில் நிரந்தரத் தொழிலாளர்களையும், பெருமளவில் ஒப்பந்தத் தொழிலாளர்களையும் கொண்டு இயங்கும் இந்தத் தொழிற்சாலையில், ஒப்பந்தத் தொழிலாளர்கள் பெறும் மாதாந்திர ஊதியம் வெறும் 3000 ரூபாய் மட்டுமே. இவ்வளவு குறைவான கூலிக்கு வேலைபார்க்கும் தொழிலாளர்களை மேலும் கொடூரமாகச் சுரண்ட நிர்வாகம் வைத்துள்ள அடாவடியான விதிமுறைகளுக்கு அளவேயில்லை.

ஊதியத்துடன் வழங்கப்படும் ஊக்கத்தொகையைப் பறித்துக் கொள்வதற்காகவே, சுசுகி நிர்வாகம் பல அநியாயமான, தொழிலாளர் விரோத விதிமுறைகளை உருவாக்கி வைத்திருக்கிறது. ஒரு நாள் விடுப்பெடுத்தால் ஊக்கத்தொகையில் ரூ.1500-ம், இரண்டு நாள் விடுப்பெடுத்தால் ஊக்கத்தொகை முழுவதும் பறிக்கப்படுகின்றது. மதிய உணவருந்த ஒதுக்கப்படும் நேரமோ 30 நிமிடங்கள்தான். இதற்குள் 400 மீட்டர் தொலைவிலுள்ள உணவகத்துக்கு சென்று, அங்கிருக்கும் நீண்ட வரிசையில் நின்று உணவைப் பெற்று அவசரமாக விழுங்கிப் பணிக்குத் திரும்பவேண்டும். ஒரு நிமிடம் தாமதமானாலும் சம்பள வெட்டு நிச்சயம். தேநீர் இடைவேளையும் 5 நிமிடங்கள்தான். வேலைநேரத்தின்போது கழிப்பறை செல்ல அனுமதி இல்லை. இரண்டாவது ஷிப்டிற்கு உரிய ஆள் வராது போனால், 16 மணி நேர ஷிப்டு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பணிச்சூழலில் பணியாற்றும் தொழிலாளர்களது பிரச்சினைகளைப் பேசித் தீர்க்க வலுவான சங்கம் மானேசரில் இல்லை. 1980-களில் குர்கானில் தொடங்கப்பட்ட மாருதி உத்யோக் நிறுவனத்தில், ஏற்கெனவே ''மாருதி உத்யோக் தொழிலாளர் சங்கம்'' எனும் சங்கம் உள்ளது. மாருதி நிர்வாகமே உருவாக்கிய இந்த எடுபிடி சங்கம், தங்கள் குறைகள் எதையும் தீர்க்க உத



படிப்பகம்

வாது என்பதை உணர்ந்த மானேசர் தொழிலாளர்கள், எந்தக் கட்சியையும் சாராத ஒரு தொழிற்சங்கத்தைக் கட்ட முனைந்தனர். கடந்த ஜூன் மாதம், மாருதி சுசுகி பணியாளர் சங்கம் (மாருதி சுசுகி எம்ப்ளாயீஸ் யூனியன்) எனும் பெயரில் சங்கத்தைத் தொடங்கி, அதனைப் பதிவு செய்வதற்காக 11 தொழிலாளர்கள் சண்டிகரில் உள்ள தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளைச் சென்று சந்தித்து ஆவணங்களைச் சமர்ப்பித்தனர்.

**அரியானா தொழிலாளர் வர்க்க வரலாற்றிலேயே முதன்முறையாக எந்தவொரு தொழிலாளியும் பழிவாங்கப்படாமல், வேலைநீக்கம் செய்யப்பட்ட அனைத்து தொழிலாளர்களையும் மீண்டும் வேலையில் அமர்த்த மாருதி நிர்வாகம் ஒப்புக்கொண்டது.**

ஆனால், முதலாளிகளின் எடுபிடிகளாக மாறிவிட்ட தொழிலாளர் நலத்துறை அதிகாரிகளோ, தொழிற்சங்கம் தொடங்குவதற்காக அளிக்கப்பட்ட ஆவணங்களின் நகலை உடனடியாக மாருதி நிர்வாகத்துக்கு அனுப்பி வைத்தனர். ஜூன் 3-ஆம் தேதியன்று ஆலைக்கு வந்த தொழிலாளர்கள் விசாரிக்கப்பட்டு, சங்கம் கட்ட முயற்சித்த 'மாபெரும் குற்றத்திற்காக' அந்த 11 பேரும் பணிநீக்கம் செய்யப்பட்டனர். 1926-ஆம் ஆண்டு தொழிற்சங்க சட்டத்தின்படி, ஏழு அல்லது அதற்கு மேற்பட்டோர் ஒன்றாகச் சேர்ந்தாலே சங்கம் கட்டும் உரிமையும் அவர்களின் குறைகளைப் பேசித் தீர்வு காணும் உரிமையும் தரப்பட்டுள்ளது. இருப்பினும், தொழிலாளர்கள் தொழிற்சங்கம் கட்டுவதை மாருதி நிர்வாகம் கிரிமினல் குற்றமாகக் கருதுகிறது.

நிர்வாகத்தின் அடாவடியான இந்நடவடிக்கைக்கு எதிராக மறுநாள் 2,000 தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் தொடங்கியது. முறைப்படி முன்னறிவிப்பு கொடுக்காத வேலைநிறுத்தம் எனும் காரணத்தைக் காட்டி வேலைநிறுத்தத்தைச் சட்டவிரோதம் என அரசும், மாருதி நிர்வாகமும் அறிவித்தன. ''ஏற்கெனவே குர்கானில் மாருதி தொழிலாளர்களுக்கு ஒரு தொழிற்சங்கம் இருக்கும்போது இன்னொரு சங்கத்தை ஏற்கமுடியாது. மானேசர் தொழிலாளர்களும் அந்தச் சங்கத்தின் உறுப்பினர்கள்தான்''- எனக் காட்டுவதற்காகப் பல தொழிலாளர்களை மிரட்டி, வெள்ளைக் காகிதத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டது, மாருதி நிர்வாகம். தொழிற்சங்க முன்னணியாளர்கள் போராடி அக்காகிதங்களைப் பறிமுதல் செய்து, நிர்வாகத்தின் அடாவடித்தனத்தைத் தோற்கடித்தனர். மானேசர் தொழிலாளர்கள், தமது சங்கம் அங்கீகரிக்கப்படும் வரை தொடர்ந்து போராடும் உறுதியுடன் நின்றதால், நிர்வாகம் தனது எடுபிடி சங்கத்தின் வலிமையைக் காட்டுவதற்கு 11 ஆண்டுகளுக்குப் பிறகு தொழிற்சங்கத் தேர்தலை நடத்தியது. அத்தேர்தலை மானேசர் தொழிலாளர்கள் ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்துத் தங்கள் ஒற்றுமையை நிலைநாட்டினர்.

அரியானாவில் மாருதி ஆலை நிர்வாகத்தின் அடக்குமுறைக்கு எதிராகவும் தொழிலாளர் உரிமைக்காகவும் தொழிலாளர்கள் போராடுவது இப்போது முதன்முறையாக நடப்பதல்ல. ஏற்கெனவே 2000-வது ஆண்டில் நடந்த நீண்ட போராட்டம், நிர்வாகத்தால் கடுமையாக ஒடுக்கப்பட்டுப் பல நிரந்தரத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். 2005-இல் ஹோண்டா தொழிலாளர்கள் போராடியபோது, அரசும் போலீசும் ஹோண்டா நிர்வாகத்தின் குண்டர் படையுடன் சேர்ந்து கொண்டு கடுமையான அடக்குமுறையைத் தொழிலாளர்கள் மீது கட்டவிழ்த்து விட்டன. 2009-இல் ரிகோ ஆட்டோ நிறுவனத்தில் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைப்பதற்கான உரிமை கோரி ஏறத்தாழ ஒரு மாத காலமாகத் தொடர்ந்து போராடி அடக்குமுறைக்கு ஆளாகினர். இவற்றிலிருந்து அனுபவங்களைக் கற்றுக் கொண்டுள்ள அரியானா மாநிலத் தொழிலாளர்கள், மாருதி தொழிலாளர் போராட்டத்தை ஒற்றுமையுடன் கட்டி வளர்த்துப் போராடினர்.

மாருதி தொழிலாளர் போராட்டத்தை ஆதரித்து, ஹோண்டா மோட்டார் சைக்கிள் தொழிலாளர் சங்கம் முதலான தொழிற்சங்கங்கள் திரண்டன. மானேசர் மட்டுமின்றி, ரேவாரி மாவட்டத்திலுள்ள தாருஹேரா தொழிற்பேட்டை முதல் குர்கான் வரையிலான அனைத்துத் தொழிலாளர் சங்கங்களையும் மாருதி தொழிலாளர்கள் தங்களது போராட்டத்துக்கு ஆதரவாகத் திரட்டினர். இதனால் இடது, வலது போலி கம்யூனிஸ்டு மற்றும் காங்கிரசு சார்பு


பன்னாட்டுக் கம்பெனி வயல் எலிகள்... கார்ப்பரேட் நச்சுப் பூச்சிகள்...
வேட்டையாடப்படும் விவசாயம், விவசாயிகள், உழைக்கும் மக்கள்...

விவசாயத்திலும் உணவிலும் ஒளிந்திருக்கும்
மறுகாலனிய அரசியலை மக்களுக்குத் தெளிவாக்கிப்
போராட அழைக்கும் புதிய வெளியீடு




விலை. ரூ.10.00

எண்டோசல்பானையும்
பி.டி.கத்திரிக்காயையும்
விரட்டியடிப்போம்!

வெளியிடுவோர்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
தமிழ்நாடு.

நூலினை அஞ்சலில் பெற நூல் விலையுடன் ரூ.30.00 சேர்த்து பணவிடை அனுப்பவும்.

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு, எல்லீசு சாலை,
சென்னை-600 002.
தொலைபேசி: 044-2841 2367

www.padippakam.com

மையத் தொழிற்சங்கங்கள் காரியவாத அடிப்படையில் மாருதி தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆதரித்தன.

இவ்வட்டாரத்திலுள்ள ஏறத்தாழ 50 தொழிற்சங்கங்களின் சார்பில் ஐந்து பேர் கொண்ட கூட்டு நடவடிக்கைக் குழு தொழிலாளர்களால் அமைக்கப்பட்டது. ஆலை வாயில் முன்பாக தொடர் முழக்கப் போராட்டம் நடத்துவது; நிர்வாகம் பணியாவிட்டால், அனைத்துத் தொழிற்சாலைகளிலும் இரண்டு மணி நேர பணி நிறுத்தம் உள்ளிட்ட பெரிய அளவிலான போராட்டத்தை நடத்தவும் இக்குழுவில் தீர்மானிக்கப்பட்டது. மாருதி தொழிலாளர்கள் ஆலையினுள் போராடிக் கொண்டிருக்க, அவர்களுக்கு ஆதரவாக ஆலை வாயிலில் இவ்வட்டாரத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் அமர்ந்து போராட்டத்தைத் தொடர்ந்தனர். தொழிலாளர்கள் வர்க்கமாக ஓரணியில் திரண்டு உறுதியுடன் போராடியதால், 13 நாட்களுக்குப் பிறகு தொழிலாளர்துறை செயலாளர் முன்னிலையில் நிர்வாகம் பேச்சுவார்த்தைக்கு இறங்கி வந்தது. இப்பேச்சுவார்த்தையில், அரியானா தொழிலாளர் வர்க்க வரலாற்றிலேயே முதன்முறையாக எந்தவொரு தொழிலாளியும் பழிவாங்கப்படாமல், வேலைநீக்கம் செய்யப்பட்ட அனைத்துத் தொழிலாளர்களையும் மீண்டும் வேலையில் அமர்த்த நிர்வாகம் ஒப்புக்கொண்டது. இது தொழிலாளர் வர்க்க ஒற்றுமைக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி.

ஒரு ஆலையில் மட்டுமோ அல்லது அந்த ஆலையின் கிளைத் தொழிலாளர்களைச் சேர்த்துக் கொண்டோ மட்டும் போராடினால் போதாது; அந்த வட்டாரம் முழுவதுமாக தொழிலாளர் வர்க்கத்தை ஓரணியில் திரட்டி உறுதியுடன் போராடினால் மட்டுமே இன்றைய உலகமயச் சூழலில் முதலாளித்துவ அடக்குமுறைகளை முறியடிக்க முடியும் என்பதை மாருதி தொழிலாளர்கள் தமது போராட்ட வெற்றியின் மூலம் தொழிலாளர் வர்க்கத்துக்குப் பறைசாற்றியுள்ளனர்.

● கதிர்

# சர்வாதிகார எதிர்ப்பில் அமெரிக்காவின் இரட்டை வேடம்

**மத்திய கினியாவில் நடந்துவரும் சர்வாதிகார ஆட்சியைத் தாங்கிப் பிடிப்பதில் அமெரிக்காவின் பங்கு அளப்பரியது.**

அமெரிக்கா, தனது மேலாதிக்க நோக்கங்களுக்குக் கட்டுப்பட்டு, தனக்கு விசுவாசமாக நடந்து கொள்ளும் சர்வாதிகாரிகளை ஜனநாயகவாதிகளாகச் சித்தரித்துப் பாதுகாக்கும் என்பதற்கு இன்னுமொரு உதாரணமாகத் திகழுகிறது, மத்திய கினியா (Ecuatorial Guinea).

மத்திய கினியா மேற்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள சிறியதொரு நாடெனினும், ''புதிய குவைத்'' என அழைக்கப்படும் அளவிற்கு எண்ணெய் வளம் மிக்கது. ஆப்பிரிக்க கண்டத்தின் கச்சா எண்ணெய் ஏற்றுமதியில் நான்காவது இடத்தில் உள்ள இந்நாட்டின் தனிநபர் வருமானம் ஆண்டுக்கு 15 இலட்சம் ரூபாய்க்கும் அதிகமென்றும் தனிநபர் வருமானத்தில் உலகிலேயே இரண்டாவது இடத்தில் இந்நாடு இருக்கிறதெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், கச்சா எண்ணெய் ஏற்றுமதி மூலம் அந்நாட்டிற்குக் கிடைக்கும் வருமானத்திற்கும், அந்நாட்டு மக்களின் வாழ்நிலைக்கும் இடையே பெரும் இடைவெளி இருப்பதையும், 1990 - களில் மத்திய கினியாவில் கச்சா எண்ணெய் வளம் கண்டெடுக்கப்பட்ட பின், அந்நாட்டின் பொருளாதாரம் எந்தளவிற்கு 'வளர்ச்சி' அடைந்ததோ, அந்தளவிற்கு அந்நாட்டில் குழந்தை இறப்பு விகிதம் அதிகரித்திருப்பதையும் உலக வங்கியின் புள்ளிவிவரங்களே அம்பலப்படுத்துகின்றன. சமீபத்தில் ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டுள்ள 177 நாடுகளின் மனிதவள மேம்பாட்டுத் தர வரிசையில் இந்நாடு 121-ஆவது இடத்தில் உள்ளது. இந்நாட்டில் 70 சதவீதம் பேர் நாளொன்றுக்கு 50 ரூபாய்க்கும் குறைவான வருமானத்தில் வாழ்ந்து வருவதாக இன்னொரு புள்ளி விவரம் சொல்கிறது.

1968-ஆம் ஆண்டு ஸ்பெயினின் காலனியாதிக்கத்திலிருந்து 'விடுதலை' அடைந்த மத்திய கினியா, 1979-ஆம் ஆண்டு வரை பிரான்சிஸ்கோ மக்கியாஸ் என்ற சர்வாதிகாரியால் ஆளப்பட்டது. பின்னர் 1979-இல் நடந்த அரண்மனை புரட்சியின் மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய,






படிப்பகம்

www.padippakam.com

தற்போதைய அதிபர் தியோடொரோ ஓபியாங், கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வருகிறார்.

அதேசமயம், கினியாவில் தேர்தல்களும் நடத்தப்படும். 2009 - ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகளில் 95 சதவீத வாக்குகளைப் பெற்று, மீண்டும் அதிபரானார் ஓபியாங். கினியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சிதான் நடைபெறுகிறது எனக் காட்டுவதற்குத் தேர்தலைவிட, வேறு மாய மந்திரம் எதுவும் தேவையில்லையே!

1996-ஆம் வருடம் இந்நாட்டில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, நாட்டின் பொருளாதாரம் அதிவேகத்தில் வளர்ந்தது. பல எண்ணெய் உற்பத்தி நிறுவனங்கள் பன்னாட்டு நிறுவனங்களின் கூட்டோடு தொடங்கப்பட்டன. அவையனைத்தும் அதிபர் ஓபியாங், அவரது குடும்பம் மற்றும் உயர் அரசு அதிகாரிகளின் கட்டுப்பாட்டின் கீழ்தான் உள்ளன. இதைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டின் கச்சா எண்ணெய் வருமானத்தில் பெரும்பகுதியை இக்கும்பலே கொள்ளையடித்துவிடுகிறது. கச்சா எண்ணெய் ஏற்றுமதி காரணமாகத் தாராளமாகப் பணம் புழங்கும் அரசுத் துறையில் இலஞ்சமும், ஊழலும், பகற்கொள்ளையும் தலைவிரித்தாடுகிறது. ஆட்சியாளர்கள் எண்ணெய் உற்பத்தி - ஏற்றுமதியில் மட்டும் அக்கறை காட்டி வருவதால், பாரம்பரிய கொக்கோ, காபி விவசாயம் சீரழிந்து மக்கள் ஏழ்மையில் தள்ளப்பட்டனர்.



அமெரிக்கா-மத்திய கினியா இடையே நடந்த பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ள வந்த அமெரிக்காவின் (முன்னாள்) வெளியுறவுத் துறை செயலர் காண்டலீசா ரைஸை வரவேற்கும் கினியாவின் சர்வாதிகாரி ஓபியாங்(வலது) (கோப்புப் படம்).

மற்றொரு பக்கம் மக்கள் மீதான ஒடுக்குமுறையும் கேள்விக்கிடமற்றதாக இருக்கிறது. சர்வாதிகாரத்தை எதிர்த்து மக்கள் போராடக் கூட வேண்டாம், ஆட்சிக்கு எதிராக முணுமுணுத்தாலே போலீசின் சிறப்பு கவனிப்புக்கு ஆளாக நேரிடும். கறுப்புக் கடற்கரைச் சிறைச்சாலையில் அடைக்கப்படும் அரசியல் கைதிகளின் மீது மின்சாரத்தைப் பாய்ச்சி சித்திரவதை செய்வது சர்வசாதாரணமானது. சித்திரவதைகளைக் கண்காணிக்கும் ஐ.நா. குழுவினர் இந்தச் சிறைச்சாலையைச் சோதனையிடச் சென்றபோது, போலீசார் சித்திரவதைக் கருவிகளை ஒளித்துக்கூட வைக்கவில்லை. உங்களால் செய்ய முடிந்ததைச் செய்து கொள்ளுங்கள் எனக் குழுவினரின் கண்களில் படும்படி அனைத்துக் கருவிகளையும் மேசை மீதே வைத்திருந்தனர்.

அரசியல் கைதிகளைச் சித்திரவதை செய்வதை அரசின் கொள்கையாகவே கொண்டுள்ளது, கினியா. எனினும், கினியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகம், ''கினியாவிற்கு நீதி குறித்துப் போதிப்பதைக் கைவிட வேண்டும்; மற்றவர்கள் குறிப்பிடும் அளவிற்கு அந்நாட்டில் இலஞ்சமோ, வறுமையோ தாண்டவம் ஆடவில்லை'' என அமெரிக்க அரசிற்கு கமுக்கச் செய்தி அனுப்பியதாக, விக்கி லீக்ஸ் இணைய தளம் அம்பலப்படுத்தியிருக்கிறது.

குறிப்பாக, முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளிண்டனின் சிறப்பு ஆலோசகராக இருந்த லானி ஜே. டேவிஸ், கினியாவின் சர்வாதிகாரி ஓபியாங் குறித்து உலக நாடுகள் மத்தியில் ஒரு நல்ல பெயரை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஒரு பிரச்சார இயக்கத்தையே நடத்தினார். இதற்காக, ஓபியாங்கிடமிருந்து பல கோடி அமெரிக்க டாலர்களைச் சன்மானமாகப் பெற்றுக் கொண்டார், அவர்.

முன்னாள் அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்ஃபெல்ட் -இன் நெருங்கிய கூட்டாளியும் அமெரிக்க - ஐரோப்பிய கூட்டுப் படைகளின் கமாண்டராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற பாண்ட்ஸ் எம். கிராட்டாக்குச் சொந்தமான எம்.பி.ஆர்.ஐ., என்ற தனியார் கூலிப்படை நிறுவனம்தான் மத்திய கினியாவின் இராணுவத்திற்கும், போலீசிற்கும் பயிற்சியளித்து வருகிறது. இத்தனியார் படை மத்திய கினியா போலீசாருக்குப் பயிற்சி கொடுப்பதை அமெரிக்க உள்துறை ரத்து செய்தாலும், அதிபர் புஷ் அப்பயிற்சிக்குப் பின்னர் ஒப்புதல் அளித்தார்.

செவ்ரான், மாராத்தான் ஆயில், நோபிள் எனர்ஜி ஆகிய பன்னாட்டு நிறுவனங்களின் கைகளில்தான் மத்திய கினியாவின் எண்ணெய் வளம் சிக்கிக் கொண்டுள்ளது. அதே சமயம், லிபியாவின் அதிபர் கடாஃபியோ, தனது நாட்டில் எண்ணெய் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த செவ்ரான், ஓக்ஸிடென்டல் ஆகிய பன்னாட்டு நிறுவனங்களின் உரிமத்தை சென்ற ஆண்டு அக்டோபரில் புதுப்பிக்க மறுத்தார். கினியாவில் ஓபியாங்கின் சர்வாதிகார ஆட்சிக்கு அமெரிக்கா பக்கபலமாக இருப்பதற்கும், லிபியாவில் அதிபர் கடாஃபியைத் தூக்கியெறியும் நோக்கத்தோடு அமெரிக்க - ஐரோப்பிய கூட்டுப் படைபோர் தொடுத்திருப்பதற்கும் பின்னுள்ள காரணம் இதுதான்.

• அழகு



படிப்பகம்

# பாலியல் வக்கிரத்துக்கு எதிராகப் போராடிய வீரப்பெண்மணி தேவியை விடுதலை செய்!

### – பு.ஜ.தொ.மு.–வின் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம்.



பெண்தொழிலாளி தேவி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து பு.ஜ.தொ.மு. நடத்திய திடீர் ஆர்ப்பாட்டம். உள்ளே: பாலியல் துன்புறுத்தலுக்கு எதிராக அதிகாரியைச் செருப்பால் அடித்த வீராங்கனை தேவி.

ஓசூர் சிப்காட்–2இல் எலக்ட்ரானிக் சர்க்கியூட் போர்டுகளை உற்பத்தி செய்யும் ஆனந்த் எலக்ட்ரானிக்ஸ் எனும் தனியார் நிறுவனத்தில், அற்பக் கூலியையும் காமவெறி பிடித்த உற்பத்திப் பிரிவு மேலாளர் பெரியசாமியின் இழி சொற்களையும் சகித்துக் கொண்டு வேலை செய்யும் பெண் தொழிலாளர்களில் ஒருவர்தான், தேவி. பணிநிரந்தர ஆணை தரப்படாமல், மேலும் பயிற்சிக்காலம் நீட்டிக்கப்பட்டதால், கடந்த 5-7-2011 அன்று அதை ஏற்க மறுத்து தேவி வாதிட்டபோது, அவரையும் அவரது கணவரையும் இழிவாகவும் ஆபாசமாகவும் பேசி அவமானப்படுத்தியுள்ளான், பெரியசாமி. தனக்குரிய சேமநலநிதி முதலானவற்றை ஒப்படைத்துவிடுமாறும் வேலையிலிருந்து விலகிக் கொள்வதாகவும் தெரிவித்து, மறுநாள் ஆலைக்குச் சென்ற தேவியிடம் மேலும் ஆபாசமாக அவன் பேசத் தொடங்கியதும், பெரியசாமியின் வாயிலும் மூக்கிலும் மிளகாய்ப் பொடியை வீசிய தேவி, செருப்பைக் கழற்றி விளாசித்தள்ளினார். பின்னர், தனக்கு நேர்ந்த அநீதியை விளக்கி பெரியசாமியின் மீது நடவடிக்கை எடுக்குமாறு போலீசுக்கு புகார் கடிதம் கொடுத்தார். ஆனால் போலீசோ தேவியைக் கைது செய்ததோடு, அவரது புகாரை வாங்க மறுத்தது.

இத்தகவல் அறிந்ததும், இப்பகுதியில் இயங்கும் பு.ஜ.தொ.மு.வினர் நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்களைத் திரட்டி, தோழர் பரசுராமன் தலைமையில் ஓசூர் வட்டத் தொழிலாளர் அலுவலகம் முன்பு, ''காமவெறியனுக்கு செருப்படி கொடுத்த வீரப் பெண்மணி தேவி வாழ்க! முதலாளித்துவ பயங்கரவாதம் ஒழிக! வீரப்பெண்மணி தேவியை விடுதலை செய்! காமவெறியன் பெரியசாமியைக் கைது செய்!'' என்று விண்ணதிரும் முழக்கங்களுடன் எழுச்சிகரமாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். தோழர் பரசுராமன் மற்றும் 20 பேர் அனுமதியின்றி சாலையை மறித்ததாகப் பொய் வழக்கு பதிவு செய்த போலீசு, தோழர் பரசுராமனைக் கைது செய்து சிறையில் அடைத்தது. ''ஆனந்த் எலக்ட்ரானிக் பெண் தொழிலாளி மீது பாலியல் துன்புறுத்தல்! காமவெறிபிடித்த அதிகாரி பெரியசாமிக்கு செருப்படி கொடுத்தார் பெண் தொழிலாளி!'' என்ற முழக்கங்களுடன் ஓசூர் நகரெங்கும் ஒட்டப்பட்ட பு.ஜ.தொ.மு.வின் சுவரொட்டிகள் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் ஆரவாரத்தையும் போராட்ட உணர்வையும் ஏற்படுத்தியுள்ளன. தோழர் பரசுராமன் பிணையில் விடுவிக்கப்பட்ட போதிலும், வீராங்கனை தேவியை விடுதலை செய்யவும் காமவெறியன் பெரியசாமியைத் தண்டிக்கவும் அடுத்தகட்டப் போராட்டத்துக்கு ஓசூர் தொழிலாளர்கள் தயாராகி வருகின்றனர்.

தகவல்: பு.ஜ.தொ.மு; ஓசூர்.

# வீரவணக்கம், தோழர் மாசானம்!

தேனி மாவட்டம், போடியில் இயங்கிவரும் விவசாயிகள் விடுதலை முன்னணியின் மூத்த தோழர்களில் ஒருவரும், கடந்த 20 ஆண்டுகளாக வி.வி.மு.வின் அடையாளமாகத் திகழ்ந்தவரும், புதிய ஜனநாயகம் இதழின் தொடக்க கால முகவருமான தோழர் மாசானம், இதய நோயினால் பாதிக்கப்பட்டு கடந்த 27.7.2011 அன்று தனது 51-வது வயதில் மரணமடைந்து விட்டார்.



நக்சல்பாரி புரட்சிகர அமைப்புகளின் சார்பாக, போடியில் நடைபெற்ற அனைத்து போராட்டங்களிலும், குறிப்பாக, போடியின் ராணிப்பண்ணை ஜமீன்தாரை எதிர்த்த குத்தகை விவசாயிகளின் போராட்டத்திலும் வர்க்க உணர்வோடும் நெஞ்சுறுதியோடும் களத்தில் நின்று போராடியவர் தோழர் மாசானம். தனது குடும்பம் வறுமையில் உழன்ற போதிலும், இப்பகுதிவாழ் உழைக்கும் மக்களின் எந்தவொரு பிரச்சினைக்கும் ஓடோடிச் சென்று உதவும் உயர்ந்த பண்பாளராக அவர் இருந்தார். தளராமல் புரட்சிப் பணியாற்றிய தோழரை நோயும் இறப்புமே ஓய்வுக் கொள்ளச் செய்தது.

தோழரின் மறைவையொட்டி அவரது இல்லத்தில் நடைபெற்ற இரங்கற்கூட்டத்திலும், அதன் பின்னர் நடைபெற்ற இறுதி ஊர்வலத்திலும் தோழர் மாசானத்துக்குச் சிவப்பஞ்சலி செலுத்திய தோழர்களும் நண்பர்களும், அவரது உயர்ந்த கம்யூனிசப் பண்புகளையும் வர்க்கப் போராட்ட உறுதியையும் நேர்மையையும் பின்பற்றி புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேற உறுதியேற்றனர். தோழர் மாசானத்துக்கு எமது வீரவணக்கம்!

–விவசாயிகள் விடுதலை முன்னணி, போடி.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

www.padippakam.com

2-ஆம் பக்கத் தொடர்ச்சி






முழக்கமிட்டு மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர். வழக்குரைஞர்களின் வாதத் திறமையால் மட்டுமின்றி, உழைக்கும் மக்களின்-மாணவர்களின் போராட்ட அலையின் காரணமாகவே, மக்களின் பொதுக்கருத்து சமச்சீர் கல்விக்கு ஆதரவாக இருந்ததாலேயே சென்னை உயர் நீதிமன்றம் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று தீர்ப்பை வழங்கியுள்ளது. இப்பொதுக் கருத்தை உருவாக்கியது மக்களின் போராட்டங்கள். இப்போராட்டங்களைக் கட்டியமைத்து துவளாமல் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றவைதான், ம.உ.பா.மையமும் பு.மா.இ.மு.வும்.

சமச்சீர் பாடநூல்களை ஜூலை 22-ஆம் தேதிக்குள் விநியோகித்து முடித்து, ஆசிரியர்கள் பாடம் நடத்தத் தொடங்கிவிட வேண்டும் என்று கடந்த ஜூலை 18-ஆம் தேதி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்ட பின்னரும், ஜெயா அரசு பாடநூல்களை விநியோகிக்காமல் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளபடி சமச்சீர் பாடநூல்களை உடனே விநியோகித்து, ஆகஸ்ட் 2-ஆம் தேதிக்குள் புத்தக விநியோகித்தை முடித்துவிட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் ஜூலை 21-ஆம் தேதி உத்தரவிட்டது. ஆனாலும் ஜெயா அரசு மாணவர்களுக்குப் பாடநூல்களைக் கொடுக்கவில்லை.

சமச்சீர் பாடநூல்களை மாணவர்கள் தொட்டால் தீட்டு ஏற்பட்டுவிடுமா? அல்லது இந்தப் புத்தகங்கள் என்ன ஆபாசப் புத்தகங்களா? புத்தகங்களை மாணவர்களின் கண்களில் காட்டுவதற்கே ஜெயா அரசு அஞ்சுவது ஏன்? இணையதளத்திலிருந்து அந்நூல்களை அகற்றுவது ஏன்? அவ்வாறு செய்தால் மாணவர்களும் பெற்றோரும் எது சரியான பாடநூல், ஏன் இத்தகைய பாடநூல் அவசியம் என்று விவாதிக்கவும் கருத்துத் தெரிவிக்கவும் வாய்ப்பாகிவிடும்; அது பெரும் போராட்ட அலையாக பொங்கியெழத் தொடங்கிவிடும் என்பதாலேயே, சமச்சீர் பாட நூல்களை முடக்கி வைக்கிறது ஜெயா அரசு. அதனால்தான் மாணவர்களின் தலைவிதியோடு தொடர்புடைய சமச்சீர் பாடநூல்களை மக்கள் மன்றத்தில் திறந்துகாட்ட மறுக்கிறது. ஆசிரியர்களை மிரட்டுகிறது. அறிவைப் பூட்டிவைத்து ஆயுதப் போலீசை காவலுக்கு நிற்க வைக்கிறது.

இந்த அநீதியையும் அடாவடித்தனத்தையும் எதிர்த்து மனித உரிமைப் பாதுகாப்பு மையமும், மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும் விருத்தாசலத்தில் அரசு மேனிலைப் பள்ளி மாணவர்களைத் திரட்டிப் போராட அறைகூவின. 22-ஆம் தேதியன்று மதிய உணவு இடைவேளையின் போது, இந்த அறைகூவலை ஏற்று மாணவர்கள் முழக்கமிட்டுக் கொண்டு சாலையில் திரண்டனர். போலீசு செய்வதறியாது திகைத்தது. பின்னர், மாணவர்களை முறைப்படுத்தி மாவட்டக் கல்வி அலுவலகத்துக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலமாக வழிநடத்திச் சென்றன, இவ்வமைப்புகள். வழியெங்கும் பொதுமக்களும் வியாபாரிகளும் ஆச்சரியத்துடன் பார்த்து இது நியாயமான போராட்டம் என்று வாழ்த்தினர். மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகத்தை முற்றுகையிட்டு, எங்களுக்குப் பாடநூல்களைக் கொடு என்று மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். உச்ச நீதிமன்றத்தின் உத்தரவைக் காட்டிய போதிலும், எங்களுக்கு அரசிடமிருந்து உத்தரவு வரவில்லை என்றனர் கல்வித்துறை அதிகாரிகள். ''பாடநூல்களைக் கொடுக்க முடியாது என்று மறுக்கும் அரசுக்கு, பள்ளிக்குச் செல் என்று ஆணையிடும் உரிமை கிடையாது; ஆடு-மாடுகளல்ல மாணவர்கள்; இனி வீதிதான் எங்கள் பள்ளி, போராட்டமே எங்களின் கல்வி!'' என்ற முழக்கத்தோடு மாணவர்கள் போராடி வருகின்றனர்.

ஜூலை 26 அன்று உச்ச நீதிமன்றத்தில் இறுதி விசாரணை நடப்பதையொட்டி, அன்று தமிழகமெங்கும் இப்புரட்சிகர அமைப்புகளும் மனித உரிமைப் பாதுகாப்பு மையமும் மாணவர்களின் கல்வி உரிமைக்கான பெற்றோர் சங்கமும் சமச்சீர் கல்வியை நடைமுறைப்படுத்தக் கோரியும், வணிகமயமாகும் கல்விக் கொள்கைக்கு முடிவு கட்டவும் தமிழகமெங்கும் பெற்றோர்-மாணவர்களைத் திரட்டி ஆர்ப்பாட்டம், சாலை மறியல் போராட்டங்களை நடத்தின. விருத்தாசலத்தில் 25.7.2011 அன்று அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியான டேனிஷ் மிஷன் பள்ளி, 26.7.2011 அன்று மங்கலம்பேட்டை அரசு மேனிலைப் பள்ளி, விருத்தாசலம் அரசு மகளிர் பள்ளிகளின் மாணவ-மாணவிகளைத் திரட்டி சாலை மறியல் போராட்டங்கள் நடைபெற்றன. கடலூரில் பு.மா.இ.மு. தோழர்கள் 25-ஆம் தேதியன்று பள்ளி மாணவர்களைத் திரட்டி ஊர்வலமாக வந்து மாவட்டக் கல்வி அலுவலரிடம் சமச்சீர் பாடநூல்களை உடனடியாக வழங்கக் கோரி மனு கொடுத்தனர்.

சென்னையில், பள்ளி மாணவர்களின் கல்வி உரிமைக்காக 25.7.2011 அன்று பச்சையப்பன் கல்லூரியின் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பு.மா.இ.மு. தலைமையில் திரண்டு நெடுஞ்சாலையில் மறியல் போராட்டத்தை நடத்தினர். நிறுத்தப்பட்ட வாகனங்கள் - பேருந்துகளில் ஏறி இந்தப் போராட்டத்தின் அவசியத்தை மாணவர்கள் விளக்கிப் பேசினர். 26.7.2011 அன்று விழுப்புரத்தில் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் சாலைமறியல் போராட்டத்தை நடத்தினர். இதேநாளில் தர்மபுரி, மதுரை, சென்னை, திருச்சி,கோவை, பென்னாகரம், ஓசூர் ஆகிய இடங்களில் இப்புரட்சிகர அமைப்புகள் மாணவர்கள் - பெற்றோரைத் திரட்டி ஆர்ப்பாட்டங்களை நடத்தின. ம.உ.பா.மையத்தின் வழக்குரைஞர்கள் நீதிமன்ற வளாகங்களில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர்.

தனியார் மெட்ரிக் பள்ளிகளின் கட்டணக் கொள்ளையைத் தடுக்க வேண்டுமானால், இப்பள்ளிகளை அரசே ஏற்று நடத்துவதும், பொதுப் பாடத்திட்டத்தையும் பொதுப் பாடநூல்களையும் நடைமுறைப்படுத்துவதும் அவசியம் என்பது இப்போது மக்களுக்கு தெளிவாகத் தொடங்கிவிட்டது. இக்கோரிக்கைகளுக்காகவும், கல்விக் கொள்ளையர்களுக்குத் தமிழகத்தை மொத்தமாகத் திறந்துவிட எத்தணிக்கும் பாசிச ஜெயா கும்பலுக்கு எதிராகவும் இப்புரட்சிகர அமைப்புகளின் வீச்சான பிரச்சாரமும் போர்க்குணமிக்க போராட்டங்களும் உழைக்கும் மக்களின் பேராதரவோடு தொடர்ந்து முன்னேறி வருகின்றன.

-பு.ஜ.செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# போலீசு பாசறைகளாக பள்ளிக்கூடங்கள்! போராளிகளாக மாணவர்கள்!!




ஒரிசாவில் போஸ்கோ நிறுவனத்திற்கு எதிராக நடந்துவரும் போராட்டத்தில் சிறுவர்கள் முன்னணியில் நிற்பதை ஒரிசா மாநில அரசு மட்டுமின்றி, பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் அறிவுஜீவிகளும் கண்டித்து வருகின்றனர். அம்மாநிலத்தில் மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் கிடப்பில் போட்டுள்ள நவீன் பட்நாயக் அரசு, போராடும் சிறுவர்களின் படிப்பு பாழாவதாகப் புலம்புவது நகைப்புக்குரிய முரண்.

சிறுவர்கள் ‘தவறான’ பாதைக்கு அழைத்துச் செல்லப்படுவது குறித்து ஆராய குழந்தை உரிமை பாதுகாப்புக்கான தேசிய கமிசன் போராட்டங்கள் நடந்துவரும் பகுதிக்கு தனது அதிகாரிகளை அனுப்பி வைத்தது. அந்த அதிகாரிகள் போராட்டக்காரர்களிடம், ‘‘குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி வையுங்கள்’’ என அறிவுறுத்தியபொழுது, ‘‘நாங்கள் எங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறோம்; அதற்கு முன்னால் பள்ளிக்கூடங்களிலிருந்து போலீசாரை வெளியேற்றுங்கள்’’ எனப் பதிலளித்து, போராட்டக்காரர்கள் அதிகாரிகளுக்கு நிலைமையைப் புரிய வைத்தார்கள்.

போஸ்கோவிற்கு எதிராகப் போராட்டங்கள் நடந்துவரும் திங்கியா, கோவிந்தபூர் பகுதிகளில் உள்ள பள்ளிகள் இன்று போலீசு பாசறைகளாக மாற்றப்பட்டுள்ளன. ‘‘எங்கள் பள்ளிக்கூடத்திலுள்ள ஆறு வகுப்பறைகளில் நான்கை போலீசு ஆக்கிரமித்திருக்கும்பொழுது, எங்களால் எப்படி பள்ளிக்கூடத்தை நடத்த முடியும்?’’ எனக் கேட்கிறார், பாலியா நடுநிலைப்பள்ளியைச் சேர்ந்த ஆசிரியர்.

‘‘அவர்கள் எங்களது பெற்றோரை நோக்கித் துப்பாக்கியைத் திருப்பும் அதேசமயம், நாங்கள் வகுப்பறைகளில் உட்கார்ந்திருக்க விரும்புகிறார்கள்’’ என ஒரிசா அரசின் குரூர புத்தியை நையாண்டி செய்கிறான், ஒரு மாணவன்.

ஆங்கிலேய காலனிய ஆட்சியில் போலீசார் சுதந்திரப் போராட்ட வீரர்களைத் தேடிவந்த பொழுது, பாஜி ரௌத் என்ற 13 வயது படகோட்டும் சிறுவன், அப்போலீசாரை படகில் ஏற்றிச் செல்ல மறுத்ததற்காகச் சுட்டுக் கொல்லப்பட்டு தியாகியானான். ‘‘ஒரிசாவின் தேசிய வீரனாகக் கொண்டாடப்படும் பாஜி ரௌத்தின் கதையை எங்களுக்குக் கூறி, அச்சிறுவனைப் போல நாட்டைக் காக்க வேண்டும் எனப் போதிக்கிறார்கள்; அதேசமயம், நாங்கள் எங்களது கிராமங்களை போஸ்கோவிடமிருந்து காப்பாற்றப் போராடத் துணிந்தால், எங்களை மோசமாக நடத்துகிறார்கள்’’ என அரசின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துகிறான், 10 வயதான ராகேஷ் பர்தன்.

‘‘நாங்கள் எங்கள் வயல்களையும் கிராமத்தையும் இழந்துவிட்டால், இங்கே பள்ளிக்கூடமே இருக்காது என்பது அவர்களுக்குத் தெரியும்’’ என 14 வயது சிறுவனான பீஷ்வாம்பர் மோகந்தி பதில் அளிக்கிறான்.

பள்ளிக்கூட மாணவர்கள் இப்போராட்டத்தில் முன்னணியில் நிற்பது பற்றி ஆசிரியர்கள் என்ன கருதுகிறார்கள்? ‘‘அவர்கள் தமது பெற்றோர்கள் மீது போலீசார் ரப்பர் குண்டுகளைக் கொண்டு தாக்குவதைப் பார்க்கிறார்கள்; அவர்கள் தமது வெற்றிலை கொடிக்கால் வயல்களும் வீடுகளும் போலீசாரால் நாசப்படுத்தப்படுவதைப் பார்க்கிறார்கள்; இவையெல்லாம் ஒரிசாவின் வளர்ச்சிக்காகச் செய்யப்படும் நல்ல காரியங்களென அரசாங்கம் கூறுகிறது. இதன் பிறகு அவர்களால் போராடாமல் வேறெப்படி இருக்கமுடியும்?’’ எனச் சிறுவர்கள் பக்கமிருக்கும் நியாயத்தை எடுத்துக் கூறுகிறார், ஒரு ஆசிரியர்.

பள்ளிக்கூடங்கள் போலீசு பாசறைகளாக மாற்றப்படும்பொழுது, மாணவர்கள் போராளிகளாக மாறுவது தவிர்க்க முடியாதது. அறிவுக்கண்ணைத் திறப்பதுதான் கல்வியின் நோக்கமெனில், இப்பழங்குடியினச் சிறுவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியை மட்டுமல்ல, வர்க்கப் போராட்டக் கல்வியையும் கற்றுத் தேறியிருக்கிறார்கள் என்பதை அவர்களின் பதில்களே நமக்கு உணர்த்திவிடுகின்றன.



படிப்பகம்